


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | www.puratchiperiyarmuzhakkam.com | திருவள்ளுவர் ஆண்டு 2039 | ஏப்ரல் 03, 2008 | புரட்சி 7 | முழக்கம் 14 | விலை : ரூ.2.50


### அம்பலப்படுத்துகிறது, நாடாளுமன்ற நிலைக்குழு

## மத்திய தேர்வாணையத்தின் பார்ப்பன தர்பார்

நாட்டின் உயர்பதவிகளுக்கு வேட்பாளர்களாக தேர்வு செய்யும் அதிகாரம் கொண்டது மத்திய தேர்வாணையம். இந்தத் தேர்வாணையத்தை தனது பிடிக்குள் வைத்திருக்கும் பார்ப்பன அதிகார வர்க்கம், ஒடுக்கப்பட்டோரின் நியாயமான உரிமைகளைப் பறித்துக் கொண்டிருக்கிறது. அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ். போன்ற அகில இந்திய சர்வீசுகளுக்கான தேர்வுகளிலும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டோரின் நியாயமான உரிமைகளை இந்த ஆணையம் தொடர்ந்து பறித்து வருகிறது. திறந்த போட்டியில் தகுதி அடிப்படையில் தேர்வு பெற்ற தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டோரை, இடஒதுக்கீடு கோட்டாவின் கீழ் தொடர்ந்து நிரப்பி வருகிறது இந்த ஆணையம். அண்மையில் சென்னை உயர்நீதிமன்றம் - இந்த முறைகேட்டைக் கண்டித்ததோடு, 2004 ஆம் ஆண்டு முதல் அகில இந்திய சர்வீசுகளுக்கான தகுதி அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட பட்டியல் அனைத்தையும் முழுமையாக ரத்து செய்து பாராட்டத்தக்க தீர்ப்பை வழங்கியுள்ளது. (பார்க்க - தலையங்கம் - 'புரட்சிப் பெரியார் முழக்கம்' மார்ச் 27)

இந்த நிலையில் மத்திய தேர்வாணையத்தின் அதிர்ச்சியான பார்ப்பன மோசடிகள் மேலும் வெளிவந்துள்ளன. அரசியலமைப்பு சட்டத்தின் வழியாக நியமிக்கப்பட்ட இந்த ஆணையம் - அதிகார வலிமை கொண்டது என்றும், தங்களது செயல்பாடுகளை எவரும் கேள்வி கேட்க முடியாது என்றும் 'பூணூலை' இழுத்து விட்டுக் கொண்டிருந்த இந்த ஆணையத்தின் 'சிண்டை' இப்போது நாடாளுமன்ற நிலைக்குழு (31 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டது), அழுத்தமாகப் பிடித்து உலுக்கத் தொடங்கியுள்ளது. நாடாளுமன்றத்தின் நிலைக் குழுத் தலைவர் தமிழக நாடாளுமன்ற உறுப்பினரான டாக்டர் ஈ.எம்.சுதர்சன நாச்சியப்பன். வேலைவாய்ப்பு, சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சகங்களுக்கான இந்த நாடாளுமன்ற நிலைக்குழு, மத்திய தேர்வாணையத்தின் செயல்பாடுகளை முழுமையாக ஆராய்ந்து, விரிவான அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்துள்ளது. இந்த ஆணையத்தின் பார்ப்பன மோசடிகள் தொடராமல் இருக்க, சில புரட்சிகரமான சீர்திருத்தங்களையும், நாடாளுமன்றக் குழு அரசுக்கு பரிந்துரைத்துள்ளது. அய்.ஏ.எஸ். தேர்வுகளுக்கு முதலில் தொடக்க நிலை தேர்வு எழுதி, அதில் தேர்ச்சிப் பெற்றால்தான் முதன்மை தேர்வு எழுத முடியும். தொடக்க நிலை தேர்வின் முடிவுகள் வெளிவர ஆறுமாத காலத்தை தேர்வாணையம் எடுத்துக் கொள்கிறது. தேர்வில் தேர்ச்சிப் பெறாமல் போகிறவர்கள் இந்த 6 மாத காலத்தில் அடுத்த கட்ட பயிற்சிக்குப் போக முடிவதில்லை. தேர்வு முடிவுக்காக காத்திருக்க வேண்டியிருக்கிறது. இதற்கு முற்றுப் புள்ளி வைத்து, கம்ப்யூட்டரின் 'ஆன்லைன்' முறையில் மாணவர்கள் தொடக்க நிலை தேர்வு எழுதலாம். ஒரு சில வாரங்களிலே முடிவு தெரிந்துவிடும் என்ற பரிந்துரையை நாடாளுமன்றக் குழு முன் வைத்துள்ளது. இதன் மூலம் தேர்வாணையத்தின் தில்லுமுல்லுகளுக்கு கடிவாளம் போடப்படும். மத்திய தேர்வாணையம் வெளிப்படையாக செயல்படுவதில்லை. தேர்வு எழுதும் மாணவர்கள் பெறும் மதிப்பெண், நேர்முகப் பேட்டிக்குப் பிறகு அவர்கள் பெறும் 'கட்-ஆப்' மதிப்பெண் ஆகிய விவரங்களை தேர்வாணையம் தெரிவிக்க மறுத்து வருவது ஏன்? இதில் என்ன ரகசியம் இருக்கிறது" என்று கேள்வி எழுப்புகிறார், சுதர்சன நாச்சியப்பன். அதே போல் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகள், தேர்வுக்குரிய பாடங்கள் - எந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறது? இதற்கான அளவுகோல் என்ன என்பதும் 'மர்மமாக'வே உள்ளது.

2006 ஆம் ஆண்டு சிவில் சர்வீஸ் தேர்வு எழுதிய மாணவர்கள், தொடக்க நிலை தேர்வில் தங்களுக்கான

4 ஆம் பக்கம்

## உதைபட்ட சிங்கள இயக்குனர்

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தும் திரைப்படம் ஒன்றை சிங்கள இயக்குனர் பிரீஸ் என்வர் தயாரித்து, அதை பிரதி எடுப்பதற்காக (பிரிண்ட்) அந்த இயக்குனர் சென்னை ஜெமினி கலையகத்துக்கு வந்தார். செய்தி வெளியானவுடன், தமிழின உணர்வாளர்கள் கலையகம் விரைந்து எதிர்ப்பு தெரிவித்தனர். திரைப்பட இயக்குனர் சீமான், சுப. வீரபாண்டியன் மற்றும் விடுதலை சிறுத்தைகள் அமைப்பினரோடு பெரியார் திராவிடர் கழகத் தோழர்களும் விரைந்தனர். படத்தின் உள்ளடக்கம் பொதுவானது என்று கூறி, சிங்கள இயக்குனர் எதிர்ப்பாளர்களை ஏளனப்படுத்தியபோது, அவர்தாக்குதலுக்கு உள்ளானார். படத்தை திரையிட்டு பார்த்தப் பிறகு பிரதி எடுக்கலாம் என்று ஜெமினி கலையகத்துடன் பேசி முடிவெடுக்கப்பட்டது. இதற்கு சிங்கள இயக்குனரும் ஒப்புக் கொண்டார். மார்ச் 27 ஆம் தேதி அப்படம் வடபழனியில் உள்ள ஒரு திரையரங்கில் திரையிடப்பட்டது. திரைப்பட தயாரிப்பாளர் சங்கத்தலைவர் இராம. நாராயணன், நடிகர் சத்தியராஜ், தங்கர்பச்சான், இயக்குனர் சீமான் உள்ளிட்ட கலை உலகப் பிரமுகர்களும், தொல். திருமாவளவன், பேராசிரியர் சுப.வீரபாண்டியன், கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், பா.ம.க. துணைத்தலைவர் முத்துக்குமார் மற்றும் தோழர்களும் படத்தைப் பார்த்தனர்.

சுமார் இரண்டு மணி நேரம் ஓடும் அத்திரைப்படம் இலங்கை ராணுவ அமைச்சகத்துக்கும், ராணுவ தளபதிகளுக்கும் நன்றி கூறி தொடங்குகிறது. பிரபாகரன் என்ற பெயரில் ஒரு சிறுவன், விடுதலைப்புலிகள் அமைப்பில் விருப்பமின்றி கட்டாயப்படுத்தி சேர்க்கப்படுவதாகவும், புலிகள் அமைப்பு பள்ளிக் கூடத்தில் நுழைந்து சிறுவர்களை கடத்திச் சென்று ராணுவத்தில் சேர்ப்பதாகவும் காட்சிகள் வைக்கப்பட்டுள்ளன. பிரபாகரன் சகோதரியான தமிழ்ப் பெண், ஒரு சிங்களரை காதல் திருமணம் செய்து கொண்டு, நிறை மாத கர்ப்பிணியாக இருக்கும்போது, அந்தப் பெண்ணை தற்கொலைப் போராளியாக மாறுமாறு, விடுதலைப்புலிகள் கட்டாயப்படுத்துவதாகவும், அந்தப் பெண் மறுத்து, கடைசியில் புலிகளையே வெடிகுண்டு வீசி கொல்வதாகவும் கதை சொல்லியிருக்கிறார்கள். பிரபாகரன் என்ற சிறுவன் விடுதலைப் புலிகள் படையிடமிருந்து சிறுவர் களோடு தப்பும் போது, அனைவரும் புலிகளால் கொல்லப்படுவதாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது. படத்தில் எந்த ஒரு இடத்திலும், ஒரு சிங்கள ராணுவமோ, சிங்கள ராணுவ தளபதியோ தலைகாட்டும் காட்சியே கிடையாது.

### 'பிரபாகரன்' படத்தின் பின்னணி என்ன?

அந்நிய நாடுகள் சதி செய்து - போலி சமாதான முயற்சிகளை மேற்கொள்வதாகவும், சர்வதேச தொண்டு நிறுவனங்கள் சிங்களர்களை எதிர்த்து செயல்படுவதாகவும், புலிகள் தாக்குதலால், அகதிகள் முகாம்களில் சிங்களர்கள் உணவின்றி தவிப்பதாகவும், காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. முழுமையாக பொய்யைப் பரப்பும் படத்தைப் பார்த்து கொதித்துப் போன தமிழர்கள் படத்தைத் திரையிட எதிர்ப்பு தெரிவித்தனர்.

சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரக அதிகாரியான அம்சா என்பவரே இத்திரைப்படத்தை தமிழில் பிரதி எடுத்து, தமிழகத்தில் திரையிடும் முயற்சி களை மேற்கொண்டுள்ளதால், சிங்கள இயக்குனர் சென்னை வந்துள்ளார். எதிர்ப்பு வலுத்தவுடன், தமிழக காங்கிரஸ் கட்சியிடம் சிங்கள தூதரகம் சரணடைந்துள்ளது. காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், சிங்கள தூதரகத்துடன் நெருக்கமாக இருப்பவர்; அவர் பத்திரிகையாளர்களைக் கூட்டி, சிங்கள இயக்குனர் தாக்கப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்களை சிங்களப் படைகள் தாக்கும் போதெல்லாம் ஒரு முறைகூட கண்டனம் தெரிவிக்காத எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் என்ற மனிதர், இப்போது சிங்கள இயக்குநருக்காக குரல் கொடுக்க முன் வந்துள்ளார். சிங்கள இயக்குனரைத் தாக்கியவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சென்னை பிரமுகர் சபீர் அலி என்பவர் காவல் நிலையத்தில் புகார் கூறியுள்ளார்.

இதற்கிடையே 'பிரபாகரன்' படம் பற்றி சில முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளன. இந்தப் படத்தில் துரோகக் குழுவைச் சார்ந்த பிள்ளையான் என்பவரின் ஆட்களே, நடிக்க வைக்கப்பட்டுள்ளனர். துணை ராணுவக் குழுக்கள் அதிகம் நடமாடும் வெலிக்கந்த எனும் பகுதியில் இந்தப் படத்தின் பெரும்பாலான காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன. சிங்கள ராணுவத்தில் உயர் அதிகாரிகளான மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிப்பிட்டிய மற்றும் கேணல் பெரேரா ஆகியோர் படத் தயாரிப்புக்கு முழுமையாக உதவிகளை செய்துள்ளனர்.

தமிழ்நாட்டில் உருவாகியுள்ள இந்த எழுச்சி சென்னை இலங்கை தூதகரத்தை மட்டுமல்ல, தமிழக காங்கிரசாரையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

**– நமது செய்தியாளர்**

தலையங்கம்

## கருத்துரிமைக்கு தடையா?

முதலீடு இல்லாத தலைசிறந்த வர்த்தகமாக அதிகார அரசியல் மாறி நிற்கிறது என்பது, எல்லோருக்கும் தெரிந்ததுதான். இந்த அதிகார அரசியலுக்குள் இடம் பிடித்து, செல்வாக்குப் பெற்று, அதை மூலதனமாக்குவதே ‘கவுரவமான பிழைப்பு’ என்ற கலாச்சாரம் காட்டுத் தீயாக பரவி வருகிறது. இந்தச் சூழலில், சமூக அக்கறையோடு, தங்களுக்கான லட்சியங்கள், குறிக்கோள்களோடு ஆர்ப்பாட்ட வர்த்தக அதிகார அரசியலுக்குள் சிக்கிக் கொள்ளாமல், செயல்பட முன்வருவது என்பது மிகவும் அபூர்வமாகும். இத்தகைய ஆரோக்கியமான அரசியல் புரிதலோடு, சுயநலமற்று செயல்படுகிற அமைப்புகளும், இயக்கங்களும் தான் தமிழகத்தின் வலிமையான கருத்துருவாக்க சக்திகள், பொது வாழ்க்கையின் ஆரோக்கியத்துக்கு முழுமையான சமாதி கட்டிவிடாமல் தடுத்து வரும், மக்களின் உண்மையான பிரதிநிதிகள்.

ஆனால், இத்தகைய அமைப்புகளும், குழுக்களும், தமிழகத்தில் காவல்துறையினரால் குறி வைத்து நசுக்கப்படுகின்றன. இந்த அமைப்புகளின் கருத்துரிமை முற்றாக தடைப்படுத்தப்படுகிறது. காவல்துறை தங்குதடையற்ற அதிகாரத்தை தன்வசம் எடுத்துக் கொண்டு, இந்த அமைப்புகளும், இயக்கங்களும் மக்களிடம் கருத்துக்களைச் சொல்வதற்கான கூட்டங்களுக்கு தடை போட்டு வருகின்றன.

சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம், கடந்த வாரம் சென்னை மாநகரில், மூடநம்பிக்கை எதிர்ப்பு தெருமுனைக் கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்தது. பகுத்தறிவு சிந்தனைகளை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்ற துடிப்போடு தன்னை அர்ப்பணித்து, அரும் தொண்டு ஆற்றி வரும் தோழர் சிற்பி ராசன், தனது ‘மாஜிக் கலை’யின் வழியாக, மக்களிடம் ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சிகளை நடத்தி, பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்து வருகிறார். அந்தக் கூட்டங்களுக்கே கூட, சென்னையில் கொளத்தூர், சேப்பாக்கம் பகுதியில் காவல்துறை தடைவிதித்துவிட்டது. கடும் போராட்டம் நடத்திய பிறகே, அனுமதி பெற வேண்டியிருந்தது. குறிப்பாக – வில்லிவாக்கம் காவல் உதவி ஆணையர் எழுத்து மூலமாக கடந்த மார்ச் 26 ஆம் தேதி பிறப்பித்த தடை ஆணையில், “தோழர் சிற்பிராசன் அவர்கள் நடத்தும் ‘மந்திரமா தந்திரமா’ என்ற நிகழ்ச்சி மத உணர்வைப் புண்படுத்தும் வகையில் இருக்கும் என்று நம்பகரமான தகவல் உள்ளதால் அந்நிகழ்ச்சியை நடத்தக் கூடாது” என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மக்களிடையே மூடநம்பிக்கைகள் வேகமாகப் பரவி வருவதைப் பற்றி முதல்வர் கலைஞர் அவ்வப்போது பேசியும் எழுதியும் வருகிறார். ஆனால், அவரது ஆட்சியின் காவல்துறை, பகுத்தறிவுப் பிரச்சாரத்துக்கு தொடர்ந்து முட்டுக்கட்டைப் போடுவது எந்த வகையில் நியாயம்?

‘புரட்சிகர பெண்கள் விடுதலை மய்யம்’ என்ற பெண்கள் அமைப்பு சென்னையில் காமராசர் அரங்கில் சர்வதேச மகளிர் நாள் கூட்டத்தை நடத்தி, அதில் புரட்சிப் பாடகர் கத்தார் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. ‘நக்சலைட் தத்துவங்கள் வளர்ந்தால் நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விடும்’ என்று கூறி காவல்துறை, அதற்கு அனுமதியை மறுத்திருக்கிறது. தத்துவங்களுக்கே தமிழ்நாட்டில் தடை போடப்பட்டு விட்டதா!? என்று கேட்கிறோம்.

அதேபோல் – தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தின் சார்பில் அரசியல் காரணங்களுக்காக, சிறையில் அடைக்கப்பட்டுள்ள தோழர் பொழிலன் விடுதலை கோரி ஏற்பாடு செய்திருந்த கூட்டத்துக்கும், காவல்துறை தடை விதித்துள்ளது. இவைகளை எல்லாம் பார்க்கும்போது இந்திய அரசியல் சட்டம் அடிப்படை உரிமையாக வழங்கியுள்ள கருத்துரிமைகள் – தமிழ்நாட்டுக்கு மட்டும் பொருந்தாதா என்ற கேள்வியைத்தான் வேதனையுடன் கேட்க வேண்டியிருக்கிறது.

தேர்தல் அரசியலில் – கூட்டணி அரசியலில் உள்ள கட்சிகள் மட்டுமே தமிழகத்தில் செயல்படலாம்; கூட்டம் போடலாம்; ஆனால் கொள்கைகளையும், லட்சியங்களையும் ஏற்றுள்ள இயக்கங்களுக்கு தமிழகத்தில் அடிப்படை உரிமைகளே கிடையாது என்ற முடிவுக்கு தமிழக காவல்துறை வந்து விட்டதா? இதற்கு தமிழக அரசும் பச்சைக் கொடி காட்டி விட்டதா என்று கேட்க விரும்புகிறோம். தொடக்க காலத்தில், தத்துவத் தளங்களில் ஆழமாக தடம் பதித்து நின்ற கழகம் தான் தி.மு.க. அன்றைக்கே இப்படி முடக்கப்பட்டிருந்தால், மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருக்க முடியுமா? இந்தியாவிலேயே தமிழ் மண் சிந்தனைகளும், தத்துவங்களும் விதைக்கப்பட்ட மண் அல்லவா?

பெரியார் இயக்கங்களும், பொதுவுடைமை அமைப்புகளும் தங்கள் கருத்துகளையும், தத்துவங்களையும், விவாதங்களையும் மக்கள் மன்றத்தில் கொண்டு வந்து சேர்த்தது இந்த மண்ணில் தான். அந்த வரலாற்றுப் பெருமைகளுக்குரிய மேடைச் சிந்தனைகளையும், மக்கள் சந்திப்பையும், பிரிட்டிஷ்காரன் 1886 ஆம் ஆண்டு கொண்டு வந்த 120 ஆண்டு காலத்துக்கு முந்தைய சட்டங்களைக் காட்டி காவல்துறையின் ஆய்வாளர்களும், துணை ஆய்வாளர்களும் முடக்குவதற்கு இடம் அளிக்கலாமா? கூட்டங்களில் எதைப் பேச வேண்டும், எதைப் பேசக் கூடாது என்று, காவல்துறையினரே கருத்தாளர்களாக அவதாரம் எடுக்கும் நிலை தமிழகத்தில் வந்துவிட்டது, மிகப் பெரும் சோகம்!

வாதங்கள் – விவாதங்கள் – தடைபடுத்தப்படும்போதுதான் அது ‘தீவிரவாதமாக’ உருவெடுக்கிறது என்ற அடிப்படை உண்மையை நினைவூட்டுவது நமது கடமையாகிறது.

தமிழக முதல்வர் கலைஞர் இதில் அவசரமாக தலையிட்டு காவல்துறைக்கு கடிவாளம் போட வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

அதிகார மோகத்தில் சிக்கி விடாமல் தமிழகத்தில் இன்னும் எஞ்சி நிற்கும் ஆரோக்கியமான இலக்கு நோக்கிய மக்களுக்கான இயக்கங்களை செயல்பட அனுமதியுங்கள்!

## எடியூரப்பா உருவ பொம்மை எரிப்பு: தோழர்கள் கைது

நாமக்கல் மாவட்டம், ப. குமாரபாளைத்தில் 19.3.2008 அன்று மாலை 6 மணி அளவில் சரவண திரை அரங்கம் முன் துவக்கி வைத்து தி.மு.க. அவைத் தலைவர் தி.கு. சண்முகம் பேசினார். ஒகேனக்கல்லில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிக்க துடிக்கும் கர்நாடக பி.ஜே.பி. எடியுரப்பாவை கண்டித்தும் கூட்டு குடிநீர்த் திட்டம் பல ஆண்டுகளாக தருமபுரி, கிருட்டிணகிரி மக்களின் கனவு. அது நம் தமிழ்நாடு அரசு திட்டம். இதை நடைமுறைப் படுத்த கூடாது என்று கர்நாடக கவர்னர் மாளிகை முன் ஆர்ப்பாட்டம் நடத்திய வாட்டல் நாகராஜை கண்டித்தும் பேசினார்.

தோழர் கலைமதி பேசும்போது தான்தோன்றிதனமாக அத்துமீறி நுழைந்த கர்நாடக வெறியர்களை கண்டித்தும், நம் பாரம்பரிய நிலப் பகுதியான பெங்களூரையும், கோளார் தங்க வயலையும் மீட்டெடுக்க தமிழர்களே அணி திரண்டு வாருங்கள் என்றார். நுழையாதே, நுழையாதே, அத்துமீறி நுழையாதே, பி.ஜே.பி.யின் இரட்டை வேடத்தை பாரீர் என்றும், மீட்போம் மீட்போம் பெங்களூரையும், கோலார் தங்க வயலையும் மீட்போம். கைது செய், கைது செய் பி.ஜே.பி. எடியுரப்பாவை கைது செய். இன வெறியை தூண்டும் எடியுரப்பாவை கைது செய். அடக்கி வை, அடக்கி வை. பி.ஜே.பி. அத்வானியே எடியுரப்பாவை அடக்கி வை. அடக்க உன்னால் முடியாவிட்டால் அடக்கி காட்டும் பெரியார் தி.க. விழித்துக் கொள்ளுங்கள், விழித்துக் கொள்ளுங்கள் என்று ஊர்வலத்தில் முழக்கமிட்டு வந்தனர். பேருந்து நிலையம் அருகில் தோழர்கள் எடியூரப்பா உருவ பொம்மையை எரிக்க முயலும் போது காவல் துறையினர் பிடுங்க, தடுக்க முயன்றனர். உருவ பொம்மையை தோழர்கள் செருப்பால் அடித்தனர். காவல் துறையிடம் சண்டையிட்டு பிடுங்கி தீயிட்டு கொளுத்தினார்கள். பின்னர் அனைவரையும் கைது செய்வதாக சொன்னார்கள். போராட்டத்திற்கு தலைமை வகித்த மாவட்டத் தலைவர் தி.க. கைலாசம், முன்னிலை வகித்த மாதுராசு, மாவட்ட செயலாளர் மு. சாமிநாதன், கழக சொற்பொழிவாளர் கீசகன், ஈஸ்வரன், அ. கலைமணி, தி.மு.க., தி.கு.ச. மணிமாறன், குமார், அசோக், சின்னகுமார், ரமேசு, தமிழ் தேசிய விடுதலை இயக்கத் தோழர் ந. ஆறுமுகம், சமர்ப்பா கலைக்குழு குமரேசன், இந்திய இளைஞர் இயக்கம் பகலவன், இலக்கிய தல ந. அன்பழகன், மனித உரிமைக் கழகம் செல்வராசு, தமிழன் ஓவியர் பழனிச்சாமி பவானி, தோழர் விடுதலை வலையல் சண்முகம் உட்பட 20க்கும் மேற்பட்ட தோழர்கள் கைது செய்யப்பட்டு, பின்னர் இரவு 8 மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர். போராட்ட வேலைகளையும், தோழர்களை திரட்டியும் அசோக் மா. கலைமதி ஆகியோர் மிக சிறப்பாக செயல்பட்டனர். அனைவருக்கும் தி.மு.க. கலைமணி தேனீர் விருந்து அளித்தார்.

**செய்தி: மு. சாமிநாதன்**

## 135 நாடுகளில் மடிந்து போன மரண தண்டனை

உலகில் 135 நாடுகள் தூக்குத் தண்டனையை ஒழித்துவிட்டன. 62 நாடுகளில் மட்டுமே தூக்குத் தண்டனை அமுலில் உள்ளது. அதில், இந்தியாவும், பாகிஸ்தானும் அடங்கும். 2006 ஆம் ஆண்டில் 25 நாடுகளில் 1591 பேருக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது. இதில் 91 சதவீத தூக்கு, 6 நாடுகளில் மட்டும் போடப்பட்டுள்ளது. சீனா, ஈரான், ஈராக், சூடான், அமெரிக்கா, பாகிஸ்தான் ஆகியவைகளே இந்த 6 நாடுகள். சர்வதேச மனித உரிமை அமைப்பு இந்த தகவலைத் தெரிவித்துள்ளது. தூக்குத் தண்டனை அமுலில் உள்ளதாலேயே குற்றங்கள் குறைந்து விடவில்லை. அதே நேரத்தில் 1976 இல் கனடா தூக்கு தண்டனையை ஒழித்த பிறகு அந்நாட்டில் கொலைக் குற்றங்கள் 40 சதவீதம் குறைந்துள்ளன. உலகம் முழுதும் அனைத்து நாடுகளும், தூக்குத் தண்டனையை நிறுத்த வேண்டும் என்று, டிசம்பர் 18, 2007 இல் அய்.நா. பொதுச் சபை தீர்மானம் நிறைவேற்றியது. இது தொடர்பான விவாதங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

அப்பாவிகள் தூக்குத் தண்டனைக்கு உள்ளாக்கப்படும்போது, அவர்கள் உயிர் மீண்டும் வந்துவிடுமா? நிச்சயம் வராது. அமெரிக்காவில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 126 பேர் - பிறகு குற்றமற்றவர்கள் என்று, விஞ்ஞான பூர்வமாகக் கண்டறியப்பட்டு, விடுதலை செய்யப்பட்டனர். பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளில் வழக்குகளும், விசாரணைகளும், எந்த நிலையில் நடக்கிறது என்பது தெரிந்ததுதான். இதனால் தான் வி.ஆர். கிருஷ்ணய்யர் போன்ற ஓய்வு பெற்ற உச்சநீதி மன்ற நீதிபதிகள், தூக்குத் தண்டனையை எதிர்க்கிறார்கள். மறைந்த பாகிஸ்தான் உச்சநீதிமன்ற நீதிபதி தோரப்பட்டேல் என்பவர், தாம் மீண்டும் நீதிபதியானால், ஒருவருக்கும் தூக்குத் தண்டனை தரமாட்டேன் என்று கூறினார். அவர் கூறும் காரணம் - சட்டமும் நீதியும், ஏழைகளுக்கு எதிராகவே இருக்கின்றன என்பதுதான்.

ராணுவ தளபதியாக இருந்த ஜியாவுல் ஹக் - பாகிஸ்தானில் ராணுவ ஆட்சி பிரகடனம் செய்தபோது, அதை எதிர்த்து 1981 இல் தனது உச்சநீதிமன்ற நீதிபதி பதவியைத் தூக்கி எறிந்தார் இந்த நீதிபதி. பாகிஸ்தான் மனித உரிமை ஆணையம் என்ற மனித உரிமை அமைப்பை அவர்தான் தொடங்கினார். பாகிஸ்தானில் அவர் தூக்குத் தண்டனைக்கு எதிராக தனது வாழ் நாள் முழுவதும் குரல் கொடுத்தவர்.

பாகிஸ்தானைப் போல் இந்தியாவும் தூக்குத் தண்டனையை ஒழிப்பதில் பிடிவாதம் காட்டி வருகிறது. இந்தியாவும் இந்த மனித உரிமைக்கு எதிரான தண்டனையை ரத்து செய்ய தயங்குகிறது. பாகிஸ்தானில் தீவிரவாதக் குற்றம் சாட்டப்பட்ட இந்தியாவைச் சார்ந்த சுராப்ஜித் சிங், தூக்குத் தண்டனையை நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் இந்தியா, தனது நாட்டில், தூக்குத் தண்டனையை ஒழிக்க வேண்டாமா? அதற்கு முன் நிபந்தனையாக, தூக்குத் தண்டனைக்கு உள்ளாகியுள்ளவர்களுக்காகவாவது, அதை ரத்து செய்ய வேண்டாமா?

**நன்கொடை**

- ஹாங்காங் தோழர் **என்.அப்துல் ரகுமான்** ரூ.1000-மும்
- ‘நாளை விடியும்’ ஆசிரியர் தோழர் **அரசெழிலன்** ரூ.250-ம் ‘புரட்சிப் பெரியார் முழக்க’ ஏட்டுக்கு நன்கொடை வழங்கியுள்ளனர். நன்றி. (ஆர்.)

# ராஜீவ் கொலைக்கு கண்ணீர் வடிப்போருக்கு மீனவர் படுகொலை தெரியவில்லையா?

சொந்த மண்ணின் மக்களான தமிழக மீனவர்களைப் படுகொலை செய்ய அந்நிய நாட்டுக்கு ஆயுதம் தரும் ஒரே அரசு இந்தியாதான் என்று புதுவை பிரதேச மீனவர் வேங்கைகள் அமைப்பின் அமைப்பாளர் இரா.மங்கையர் செல்வன் குற்றம்சாட்டியுள்ளார்.

சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் தியாகராய நகர் செ.தெ. நாயகம் மேல்நிலைப்பள்ளியில் 20.3.208 அன்று நடைபெற்ற சிங்கள இராணுவத்தின் தொடர் படுகொலைக் கண்டனப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்றுப் பேசுகையில் மங்கையர் செல்வன் இதனைத் தெரிவித்தார்.

**கூட்டத்தில் பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசியதாவது:**

மீனவர்கள் சமுதாயம் ஒடுக்கப்பட்ட சமுதாயமாக-தனித்துவிடப்பட்ட சமுதாயமாக இருந்து வருகிறது. இட ஒதுக்கீட்டுக்கான மண்டல் குழு அறிக்கையில் கூட மீனவர்களுக்கு தனித்தொகுதி- தனி நிதியம் உள்ளிட்ட பல்வேறு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் அவற்றுக்குரிய அழுத்தங்கள் கொடுக்கப்படவில்லை.

மன்னார் கடற்பரப்பின் கரையோரங்களின் இருபக்கமும் தமிழர்கள்தான் வாழ்கின்றனர். ஆனால் அந்தத் தமிழர்களை இந்தி பேசுவோரும் சிங்களம் பேசுவோரும்தான் கண்காணிக்கின்றனர். பிரான்சில் வாகனம் ஓட்டுவோர் கட்டாயம் தலைக்கவசம் அணியவேண்டும் என்று சட்டம் பிறப்பிக்கப்பட்ட போது அமைச்சராக இருந்த பூட்டாசிங் பிரான்சுக்கே சென்று சீக்கியர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வலியுறுத்தினார்.

வங்கதேச போரின் போது அங்குள்ள வங்காளிகளுக்கு ஆபத்து நேர்ந்தால் மேற்கு வங்க காவல்துறையை அனுப்பி பாதுகாப்போம் என்று காங்கிரஸ் கட்சியின் சித்தார்த் சங்கர் ரே கூறினார். ஆனால் 300-க்கும் அதிகமான தமிழ்நாட்டு மீனவர்களை சிங்களக் கடற்படை படுகொலை செய்துள்ள நிலையில் 25 ஆண்டுகாலமாக ஒரு கண்டனத்தைக் கூட இந்திய அரசு தெரிவிக்கவில்லை.

இலங்கையில் நடக்கின்ற போரில் அந்நாட்டு இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா ஒரு இராணுவ இலக்கு. போரில் இராணுவ இலக்கு மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவது வழமையானது. யார் அந்த சரத் பொன்சேகா? யாழ்ப்பாணம் செம்மணியில் 600 தமிழர்களை கொன்று புதைத்தவர்.

அப்படியான சரத் பொன்சேகா மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது கடுமையாக கண்டனம் தெரிவித்த இந்திய அரசாங்கம், 300-க்கும் அதிகமான மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு இதுவரை எதுவித கண்டனமும் தெரிவிக்கவில்லை.

மதுரையில் ஒரு சிங்களவன் தற்கொலை செய்து கொண்டதற்காக ரூ. 10 லட்சம் இழப்பீடு வழங்கும் தமிழக அரசாங்கமோ, சிங்களக் கடற்படையால் படுகொலை செய்யப்படும் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு ரூ. 50 ஆயிரமும் ரூ. 5 லட்சமும் வழங்குகிறது.

இலங்கை இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என்று இந்திய அரசு கூறுகிறது. பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டுமாயின் ஒப்பந்தங்களை எழுதுவதற்கான பொருட்களையல்லவா கொடுக்க வேண்டும்? பீரங்கிகளும் துப்பாக்கிகளும் அல்லவா நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்?

தமிழ்நாட்டில் சிறிலங்காவுக்கான துணைத் தூதரகம் தேவையில்லை என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் சிறிலங்காவின் துணைத் தூதரகத்துக்கு ஒரு தமிழ் பேசும் ஒருவரை சிங்கள அரசு நியமிக்கின்ற போது சிறிலங்காவுக்கான இந்தியத் தூதுவராக ஏன் ஒரு தமிழனை நியமிக்கவில்லை? என்றார் கொளத்தூர் மணி.

**தென்னிந்திய மீனவர் நல சங்கத்தின் தலைவர் கு.பாரதி:**

கடல் தொழிலுக்குச் செல்லும் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு வாரத்துக்கு 3 நாள் மட்டுமே இந்திய கடற்படை அனுமதிக்கிறது. மேலும் 24 மணி நேரத்தில் கரைக்குத் திரும்ப வேண்டும் என்றும் கூறுகிறது. டீசலுக்கும் அளவு நிர்ணயிக்கப்படுகிறது. கடுமையான சோதனைகளிடப்படுகிறது. இப்படி நிராயுதபாணியாக நாங்கள் கடல் தொழிலுக்குச் செல்லும்போது எங்களை சிங்கள கடற்படை சுட்டுப் படுகொலை செய்கிறது.

கடல் தொழிலில் ஈடுபடுவோர் எல்லை தாண்டி மீன்பிடிப்பது இயல்பான ஒன்று. இந்த அடிப்படை விடயமே தெரியாத ஒருவர் இந்தியாவின் பிரதமராக உள்ளார் என்றார் அவர்.

**புதுவை பிரதேசத்தின் மீனவர் விடுதலை வேங்கைகள் அமைப்பாளர் இரா. மங்கையர் செல்வன்:**

மேற்குவங்கத்துக்குச் சொந்தமான தீவை இந்திரா அம்மையார் வங்கதேசத்துக்குத் தாரைவார்க்க முயற்சித்தபோது அதனை இன-மொழி உரிமைகள் பற்றி பேசாத கட்சியின் ஜோதிபாசு கேள்வி எழுப்பினார். கச்சத்தீவை சிறிலங்காவுக்கு தாரைவார்த்த போது தமிழக முதல்வராக இருந்தவர் கேள்வி கேட்டிருக்க வேண்டும்.

அண்மையில் புதுவைக்கு சீன ஆய்வாளர் ஒருவர் வருகை தந்திருந்தார். ஈழ விடுதலைப் போராட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்குக் காரணமாக அவர் கூறியது, ஈழ விடுதலைப் போருக்குத் தலைமை தாங்குபவர் ஒரு ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால்தான் என்றார்.

பிரான்ஸ் அதிபர் இந்தியாவுக்கு வருகை தந்தபோது டர்பன் விவகாரம் பற்றி இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் பேசுகிறார். காரணம் அவர் சீக்கியர். ஆனால் தமிழனை சிங்களக் கடற்படை சுடும்போது அவன் கடற்பரப்பில் நீ நுழைந்தால் அவன் சுடத்தான் செய்வான் என்று அவர் கூறுகிறார்.

சிங்களக் கடற்படையைச் சேர்ந்த குணதிலக்க என்பவரை 1986 ஆம் ஆண்டு கடல் எல்லையை மீறி வந்ததாக இந்தியக் கடற்படை கைது செய்து உடனே விடுதலை செய்தது. அதே குணதிலக்கதான், 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் நாள் தமிழ்நாட்டு மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி பலரையும் இரத்தக் காயங்களுக்கு உட்படுத்தினார். எந்த குணதிலக்கவை மனிதாபிமானத்தோடு இந்தியா விடுவித்ததோ அதே குணதிலக்கதான் மனிதாபிமானமே இல்லாமல் தமிழ்நாட்டு மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்.

ராஜீவை சுட்டுக் கொன்றமைக்காக சோனியாவோ ராகுல்காந்தியோ நடுத்தெருவில் நின்று பிச்சை எடுக்கவில்லை. ஆனால் சிங்களவனால் சுட்டுக் கொல்லப்பட்ட 300 தமிழ்நாட்டு மீனவர்களின் குடும்பங்கள்தான் நடுத்தெருவில் நின்று பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறது. ராஜீவ் கொலைக்கு கண்ணீர் வடிப்போருக்கு, மீனவர் படுகொலைகள் தெரியவில்லையா?

சொந்த மண்ணின் மைந்தர்களான தமிழ்நாட்டு மீனவர்களைப் படுகொலை செய்ய அன்னிய நாட்டுக்கு ஆயுதங்களை கொடுக்கிற ஒரே அரசு இந்திய அரசுதான். ஹிட்லர் கூட இந்தக் கொடுமையைச் செய்தது இல்லை.

ஈழத் தமிழர்கள் விடுதலை பெற்றால்தான் தமிழ்நாட்டு மீனவர்களின் பிரச்சினைகளுக்கு விடிவு வரும் என்றார் மங்கையர் செல்வன்.

தமிழ்நாடு மீனவர் முன்னேற்ற சங்கத் தலைவர் கோசுமணி, பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை க.இராசேந்திரன் உள்ளிட்டோரும் கண்டன உரையாற்றினர்.

கடந்த 25 ஆண்டுகளாக தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி வரும் சிங்களக் கடற்படையை கண்டிக்காத- தடுத்து நிறுத்தாத இந்திய அரசை எதிர்த்து முதல் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட ஆகஸ்ட் 13-இல் கண்டன நாள் கடைபிடிக்க பெரியார் திராவிடர் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

# *மன்னார் போர் முனையில் பெண்புலிகளின் வீரப்போர்*

*தமிழர்களின் பாரம்பர்யப் பிரதேசம் மன்னார்! இங்கே கடலோர வாணிகம் செழித்திருந்த காலம் ஒன்று உண்டு. மன்னார் கடல் பரப்பில் அரபுக் கப்பல்கள் குதிரைகளைக் கொண்டு வந்து, மன்னார் சந்தையில் விற்பதும், மன்னார் கடல்பரப்பில் கிடைக்கும் விலை மதிப்புள்ள முத்துக்களை வாங்கிச் சென்றதும் உண்டு. அந்த மன்னார் பகுதியில்தான் - இப்போது ஒவ்வொரு நாளும் விடுதலைப்புலிகளுக்கும், சிங்கள ராணுவத்துக்குமிடையே சண்டை நடந்து வருகிறது. 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சிங்களப் படைகள் மன்னாரை தம் வசமாக்கிட அங்கே குவியத் தொடங்கின. அதற்கு முன் 1999 இல் இதே மன்னார் பகுதியை ஆக்கிரமிக்க 'ரணகோச' என்று (போர் முழக்கம்) பெயர் சூட்டி, பெரும் தாக்குதலைத் தொடர்ந்தது சிங்கள ராணுவம். அதை விடுதலைப் புலிகள் முறியடித்தனர். அதே மன்னாரில் இன்று ஒவ்வொரு நாளும் தொடர் யுத்தம். மன்னார், ஒரு சதுப்பு வெளி, மண்ணைத் தோண்டுவதற்கு மண்வெட்டியைப் போட்டு வெட்டினால், மண் தெறிக்காது. மண் வெட்டிதான் உடையும். அத்தகைய சதுப்பு நிலப் பகுதியானாலும், எதிரியின் ஆக்கிரமிப்புக்கு விட்டுவிட முடியுமா?*

*மன்னார் பிரதேசத்தைக் காப்பாற்ற, காவல் அரண்களை அமைத்தனர் விடுதலைப் புலிகள். அகழிகளை வெட்டி, எல்லைப் பகுதி முழுதும்*



*காப்பரண்களை அமைத்தனர். (காப்பரண் என்றால் எல்லைப் பகுதி நெடுக பல மைல் தூரத்துக்கு 10 அடிக்கு ஒரு அரண் அமைத்து, அதில், 24 மணி நேரமும் துப்பாக்கியோடு கண்விழித்து எதிரிகளின் ஊடுருவல் நிகழ்ந்து விடாமல் காப்பது. 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அங்கே குவிந்த சிங்களப் படை 6 மாதம் முழுமையாக தன்னை தயார்படுத்திக் கொண்டு, செப்டம்பர் மாதத்தில் (24.9.2007) தனது முதல் தாக்குதலை காப்பரண்கள் மீது தொடங்கியது. இத்தனைக்கும் விடுதலைப்புலிகள் அமைத்தது ஒற்றைக் காப்பரண்தான். பெரும்படையாக குவிந்திருக்க மாட்டார்கள். ஒவ்வொருவராக எல்லைப் பாதை நெடுக காவல் காப்பார்கள். 75 மைல் தூரம் விரிந்து நிற்கும் இந்த ஒற்றைக் காப்பரண் மீது சிங்கள ராணுவத்தின் பெரும் படை தாக்குதல் தொடுத்து வருகிறது. ஆனால் - ஒரு அங்குலம்கூட காப்பரணைத் தகர்த்து, சிங்கள ராணுவத்தால், ஊடுருவ முடியவில்லை என்பதுதான் முக்கியம்.*

*2007 செப்டம்பர் 24 ஆம் தேதி, ராணுவத்தின் முதல் தாக்குதல் அதிகாலை 5 மணிக்கு தொடங்கியது. பெண் புலி லெப். அருமலர் காப்பரண் தாக்கப்பட்டது. காப்பரணில் அப்போது இருந்த பெண் புலிகள் 5 பேர் மட்டுமே. பெரும் படையுடன் தாக்க வந்த சிங்களத்தை - இந்த 5 பெண் புலிகளும் எதிர் கொண்டனர். மாலை 5.30 மணிவரை தாக்குதல் நீடித்தது. துப்பாக்கிச் சூட்டில் காயப்படுவதும், பிறகு காயத்துக்குக் கட்டுப் போட்டுக் கொண்டு வந்து, மீண்டும் திருப்பி சுடுவதுமாக அந்தப் புலிகள் எதிர்த்*

*4 ஆம் பக்கம்*

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# நாடாளுமன்றத்தையே மதிக்காத ஆணையம்

முதல் பக்கத் தொடர்ச்சி

மதிப்பெண் விவரத்தைக் கேட்டபோது, ஆணையம் தகவல் தர மறுத்துவிட்டது. பாதிக்கப்பட்ட மாணவர்கள் 'உண்மை வேண்டுவோர் சங்கம்' என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கி, தேர்வாணையத்தின் பார்ப்பன அநீதிக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர். தகவல் உரிமை சட்டத்தின் கீழ், தங்களின் தொடக்க தேர்வு மதிப்பெண், 'கட்-ஆப்' மதிப்பெண்களைத் தெரிவிக்குமாறு தேர்வாணையத்திடம் மனு செய்தனர். ஆணையம், தகவல் தெரிவிக்க மறுத்துவிட்டது. தொடர்ந்து மத்திய தகவல் ஆணையத்துக்கு மனு செய்தனர். உடனே மத்திய தகவல் ஆணையம் (Central Information Commission) - மூன்று வாரத்துக்குள் மாணவர்களுக்கு தொடக்க தேர்வு மதிப்பெண் மற்றும் 'கட்-ஆப்' மதிப்பெண்களைத் தெரிவிக்குமாறு தேர்வாணயத்திற்கு 13.11.2006 இல் பணித்தது. தாங்கள் பின்பற்றும் தேர்வு முறை விஞ்ஞான பூர்வமானது என்றும், அந்த ரகசியத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றும் மத்திய தேர்வாணையம் பதில்தர, அதை ஏற்க மத்திய தகவல் ஆணையம் மறுத்துவிட்டது. உடனே தேர்வாணையம் டெல்லி உயர்நீதிமன்றத்தில், மாணவர்கள் பெறும் மதிப்பெண்கள் ரகசியத்தை வெளியிட்டு விட்டால், தனியார் பயிற்சி நிறுவனங்கள் அதை முறைகேடாகப் பயன்படுத்திக் கொள்ளும் என்பதால், மதிப்பெண்ணை வெளியிட முடியாது. எனவே மத்திய தகவல் ஆணையத்தின் உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று மத்திய தேர்வாணையம் வழக்கு தொடர்ந்தது.

தேர்வாணையத்தின் கோரிக்கையை உயர்நீதிமன்ற நீதிபதி பி.பி.அகமது நிராகரித்து, ஏப்.17, 2007 இல் தீர்ப்பளித்தார். மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களை உடனே வெளியிடுவதோடு, மாதிரி விடைத்தாளையும் இணையதளத்தில் வெளியிட வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார். அப்போதும் தேர்வாணையம் விடவில்லை. மே 3, 2007 இல் வழக்கை மேல் முறையீடு செய்து, ஒவ்வொருவரும் பெறும் மதிப்பெண்ணையும், 'கட்-ஆப்' மதிப்பெண்ணையும் வெளியிட்டு விட்டால், ஆணையத்தின் ரகசியமான தேர்வு முறை மிக மோசமாக பாதித்துவிடும், கடுமையான விளைவுகளை உருவாக்கிவிடும்" என்று மேல் முறையீட்டு மனுவில் கூறியது. டெல்லி உயர்நீதிமன்றத்தில் - நீதிபதிகள் எம்.கே.சர்மா, சஞ்சீவ் கன்னா ஆகியோர் முன் வழக்கு விசாரணைக்கு வந்தது மே 22, 2007 இல் - நீதிபதிகள், உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு தடைவிதித்ததோடு, தேர்வாணையம் தன்னிடமுள்ள இது தொடர்பான ஆவணங்களை சீலிடப்பட்ட கவரில் போட்டு, நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க ஆணையிட்டனர். மத்திய தகவல் ஆணையத்தின் உத்தரவு - அது முதல் கிடப்பில் உள்ளது. மத்திய தேர்வாணையமும் மதிப்பெண்களை வெளியிடாமல் இருந்து வருகிறது.

தேர்வு எழுதிய மாணவர்களுக்கு மட்டுமல்ல, மத்திய வேலை வாய்ப்பு அமைச்சகமே, இதை பற்றிய தகவலைக் கேட்டபோதும், தேர்வாணையம் தகவல் தர மறுத்து வந்திருக்கிறது. தேர்வாணையம் நடத்தும் நேர்முகத் தேர்வில், விருப்பு வெறுப்பு பாகுபாடுகள் காட்டப்படுவதாக, பிரதமர் அலுவலகத்துக்கு புகார் வரவே, பிரதமர் அலுவலகம் வேலை வாய்ப்புத் துறை அமைச்சகத்தின் வழியாக, இடஒதுக்கீட்டில் இடம் பெற்ற மாணவர்கள் 'கட்-ஆப்', பொதுப் போட்டியில் இடம் பெற்ற மாணவர்கள் 'கட்-ஆப்' மதிப்பெண்களைக் கேட்டது. பலமுறை நினைவூட்டல் கடிதங்கள் எழுதியும், இதுவரை, தேர்வாணையம் அசைந்து கொடுக்கவில்லை.

கடந்த காலங்களிலும் நாடாளுமன்றக் குழுவினரை, தேர்வாணையம் புறக்கணித்தது என்பதும் குறிப்பிடத் தக்கது. கடந்த ஆண்டு நாடாளுமன்றக் குழு கருத்து கேட்க அழைத்தபோது, மத்திய தேர்வாணையம் கருத்து தெரிவிக்கவே வர மறுத்துவிட்டது. குழு தனது பரிந்துரையில் இதை குறிப்பிட்டு தேர்வாணையத்துக்கான நிதி ஒதுக்கீட்டை நிறுத்துமாறு பரிந்துரைத்திருந்தது. "அரசியல் சட்டப்படி நியமிக்கப்பட்ட ஆணையம் என்று கூறிக் கொண்டு இந்த ஆணையம் தன்னுடைய மோசமான நிர்வாகத்தை மறைக்க முயலுகிறது. இந்தத் தேர்வாணையத்திலேயே செயலாளர் என்ற தலைமைப் பதவி நிரப்பப்படாமல் காலியாகவே இருக்கிறது. பல அரசு நிறுவனங்களிலும் ஆணையத்தின் அலட்சியத்தால் தலைமைப் பதவிகள் நிரப்பப்படாமல் காலியாகவே கிடக்கின்றன. ஆணையத்தின் செயலற்ற போக்கே இதற்குக் காரணம். தேர்வாணையம், சில நேரங்களில், சிலரின் பெயர்களைப் பரிந்துரைக்க, அவர்களுக்கான நியமனம் தொடர்பான வேலைகள் நடந்து கொண்டிருக்கும் போதே, பரிந்துரையை ஆணையம் திரும்பப் பெற்றதும் உண்டு.

"சட்டத்துக்கு அப்பாற்பட்டு எந்த நிறுவனமும் செயல்பட முடியாது. ஆணையத்தின் இந்த செயல்பாடுகள், நாடாளுன்றத்தின் உரிமை மீறல்களுக்கு உட்பட்டதாகும்." என்றும் சுதர்சன் நாச்சியப்பன் தலைமையிலான நாடாளுமன்ற குழு தனது அறிக்கையில் எச்சரித்துள்ளது.

"நாங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்; மக்கள் நலனுக்கு எதிராக செயல்படும் எந்த நிறுவனத்தையும், நாங்கள் அனுமதிக்க முடியாது; நாங்கள் அரசுக்கு சமர்பித்துள்ள பரிந்துரைகளை செயல்பட வைப்போம்" என்று உறுதியாகக் கூறுகிறார், சுதர்சன நாச்சியப்பன். பரிந்துரை மீது உரிய நேரத்தில், நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று, மத்திய வேலை வாய்ப்புத் துறை செயலாளரும் உறுதி கூறியுள்ளார்.

பார்ப்பன ஆதிக்கம் - எப்படி, நாட்டை ஆட்டிப் படைக்கிறது என்பதற்கு இது அசைக்க முடியாத சான்று.

**(ஆதாரம்: மார்ச் 28, 'பிரன்ட்லைன்' வெளியிட்ட கட்டுரை)**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 2451 2857

# "வீட்டுக்கு ஒரு போர் வீரர்"

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

தாக்குதல் நடத்திக் கொண்டே இருந்தனர். ஊடுருவ முயன்ற சிங்களப் படை திரும்பி ஓட்டமெடுத்த நிலையில், அந்த 5 பெண் புலிகளும் உடல் முழுதும் ஏந்திய குண்டு காயங்களோடு வீர மரணத்தைத் தழுவினர். இந்த வீர காவியம் படைத்த போர் நடந்த பகுதி 'கட்டுக்கரை குளக்கட்டு'.

தோற்றோடிய சிங்களப் படை மீண்டும் அதே காப்பரணைத் தாக்கி ஊடுருவ - தாக்குதலைத் தொடங்கியது. இப்போது பெண் புலி காப்டன் கோதை தலைமையிலான புலிகள் தாக்குதலை எதிர் கொண்டனர். முதற் சண்டையில் விதையாகிய தோழியரின் ரத்தமும், சதையும் ஊறி வீரத்தோடு எழுந்து நின்று, கடுமையாக மோதியது. சிங்களப் படையினரிடம் பலியாகாமல், வெளியேறுவதற்கு வாய்ப்பிருந்த நிலையிலுங் கூட, பெண்புலி கோதை, படையை எதிர்த்துப் போரிட்டு, வீரமரணத்தைத் தழுவி, ஊடுருவலைத் தடுத்தார்.

கட்டுக்கரையில் தொடங்கிய தாக்குதலை எல்லைப்பகுதி முழுதும் ஒரே நேரத்தில் ராணுவம் விரிவாக்கியது. அந்த யுத்தம் ஒவ்வொரு நாளும், இப்போது தொடர்ந்து கொண்டே இருக்கிறது. மாதம் ஒரு முறை யுத்தம் என்ற நிலை மாறி, ஒவ்வொரு நாளும் யுத்தம் நடந்து கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு நாளும் பெருமளவில் விடுதலைப்புலிகள் கொல்லப்படுவதாக சிங்களம் பொய்ச் செய்திகளைப் பரப்புகிறது. பிரபாகரன் மீதும் குண்டு வீசப்பட்டு, படுகாயமடைந்ததாக பொய்ச் செய்திகளைப் பரப்பியது. பொய் முகத்திரை கிழிந்து போனது. இப்போது மன்னாரில் என்னதான் நடக்கிறது?

'வீட்டுக்கு ஒரு போர் வீரன்' என்ற முழக்கத்தோடு, விடுதலைப்புலிகள் இயக்கத்தில் போர் வீரர்கள் சேர்ந்து வருகின்றனர். நேருக்கு நேர் மோதும் மரபு வழி யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. உலக வல்லரசுகள் வழங்கியுள்ள ராணுவ பலத்துடன் சிங்களம் படை முகாமை நிறுத்தியிருக்கிறது. புலிகளின் ஒற்றைக் காப்பரணை ஊடுருவி நகர முடியாமல் சிங்களத்தின் பெரும்படை ஒவ்வொரு நாளும் பெரும் இழப்புகளை சந்தித்து வருகிறது. எல்லைப் பகுதியில் காப்பரணில் சண்டையில் நிற்கும் பெண் புலிகளை நேரில் சந்தித்து அளவளாவி படம் எடுத்து வரலாம் என்ற நோக்கத்தோடு போர் மேகம் சூழ்ந்த நிலையிலும், சாரதா என்ற பெண் புலி தலைமையிலான அணி மன்னார் பகுதிக்குச் சென்றது. ஒவ்வொரு காப்பரணாகச் சென்று பெண் புலிகளிடம் உசாவி விட்டு வரும் நிலையில் சிங்களப் படை திடீர்த் தாக்குதலைத் தொடங்கியது. மிகவும் சக்தி வாய்ந்த பீரங்கியால் (50 கலிபர்) ராணுவம் சுட்டுத் தள்ளுகிறது. 50 அடி தூரத்திலுள்ள காப்பரண் மீது தாக்குதல் நடக்கும் போது, சாரதாவின் அணி, அடுத்த காப்பரணில் தோழிகளுடன் பேசிக் கொண்டிருந்தது. அந்த நிலையிலும் அரணில் இருந்த பெண் புலிகள், "வாங்கோ, வாங்கோ அக்கா" என்று அன்புடன் உபசரித்து, அடுப்பை மூட்டி, உணவு தயாரிக்கத் தொடங்கிவிட்டார்கள். தேனீர் பரிமாறப்பட்டது. 'என்னடா இது? முன்னுக்குச் சண்டை நடக்கிறது? இவர்களை நோக்கி, எந்த நேரத்திலும் திரும்பலாம்; ஆனாலும், அதை வழமையாக எதிர்க் கொண்டு, அன்பான உபசரிப்புகளை வழங்கிக் கொண்டிருந்தது கண்டு சாரதா அணி வியந்தது.

மன்னார் போர் அரங்கில் நிற்கும் படை அணியினர் அனைவருக்கும் உணவு வேளைகளுக்கு இடையே சாப்பிடக் கூடிய சத்தான உணவுப் பொருள்களை வாங்கித் தருமாறு, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், பெண் புலி கேணல் யாழினியிடம், ஒரு தொகைப் பணத்தைத் தந்திருந்தார். காப்பரண் முழுதும் படைவீரர்கள் அனைவருக்கும் இதை வழங்க 10 நாட்கள் ஆகிவிடும். அதற்குள் உணவு கெட்டுப் போக வாய்ப்புண்டு. எனவே யாழினி ஒவ்வொருவருக்கும் 'சோன் பப்ளி' எனும் இந்திய இனிப்புப் பெட்டியை வாங்கிக் கொடுத்து விட்டார். அப்போது - ஒரு புதிய பெண் போராளி கேணல் யாழினியிடம் கேட்டார், "அக்கா, எங்களுக்குத்தான் மூன்றுவேளை சாப்பாடும் வந்து கொண்டிருக்கே, அதுவே போதும்; எதற்கு அண்ணன், இதை எல்லாம் தர வேண்டும்?" என்று கேட்டார். "சண்டைக்குப் புறப்படும்போது கொக்கோ பாற்கட்டிப் பெட்டிகளையும், பல்விளக்கும் தூரிகைகளையும் (பிரஷ்) தலைவர் தந்துவிடுவார்" என்று சிரித்துக் கொண்டே கூறினார், யாழினி. 'எங்க வீட்டிலேயே ஒரு பெட்டி இனிப்பு வாங்கி எல்லோரும் சாப்பிடுவோம்; நாங்கள் வசதியான குடும்பம் தான். ஆனால், அண்ணன், ஆளுக்கு ஒரு இனிப்பு பெட்டி கொடுத்துள்ளாரே!" என்றார், அந்தப் பெண் புலி.

"அக்கா அண்ணனை நாங்கள் சந்திக்க வேண்டும்; கேட்டுச் சொல்லுங்க" என்று புதிய பெண் புலிகள் மரணத்தை எந்நேரமும் எதிர்கொள்ளக் கூடிய அந்த சூழலிலும் இதையே கோரிக்கையாக வைத்தனர்.

போராட்டமே வாழ்க்கை; வாழ்க்கையே போராட்டமாய் - மன்னார் போர் அரங்கு மாறியிருக்கிறது. ஒவ்வொரு நாளும் மோதி மோதிப் பார்க்கும் சிங்களம் - பெண் புலிகளின் வீரத்தாலும், தியாகத்தாலும், தோல்விகளையே சந்தித்துக் கொண்டிருக்கிறது.

**– நமது செய்தியாளர்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 03rd April 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 ஏப்ரல் 10, 2008 புரட்சி 7 முழக்கம் 15 விலை : ரூ.2.50


# பஞ்சாங்கப் பித்தலாட்டம் அம்பலம்

தமிழ் வருப் பிறப்பு சித்திரையில் தொடங்குவதாகக் கூறிக் கொண்டு, வருடத்தின் மாத, நாள்களோடு மட்டுமின்றி நாழிகை, நல்ல நேரம், கெட்ட நேரம், சகுனம், ராகுகாலம் என்ற மூட நம்பிக்கைகளையும் சேர்த்து - 'பஞ்சாங்கம்' தயாரிக்கப்படுகிறது. இந்துக்களின் காலண்டராக, பழமைவாதிகளால் கூறப்படும் பஞ்சாங்கத்தை பல்வேறு சோதிடர்கள் வெளியிட்டு வருகிறார்கள். தமிழக அரசு தை முதல் நாள் தான் தமிழ்ப் புத்தாண்டு என்று அறிவித்த நிலையில், இந்துக் கோயில்களில் இந்த ஆண்டும் சித்திரையிலேயே தமிழ்ப் புத்தாண்டு என்று கூறிக் கொண்டு, விசேட பூசைகளை அறிவித்து வருகின்றன. தமிழக அரசின் கட்டுப்பாட்டிலுள்ள இந்து அறநிலையத் துறையின் கீழ் வரும் கோயில் நிர்வாகம்கூட தமிழக அரசின் முடிவுக்கு மாறாக சித்திரையை தமிழ்ப் புத்தாண்டு என்று அறிவித்துள்ளன.

அந்தக் காலத்திலேயே இந்து மதத்தின் முன்னோர்கள் - வானவியலைக் கணித்து, நாட்காட்டியை உருவாக்கியுள்ளதாக பழம் பெருமையை, பார்ப்பனர்களும் இந்துப் பழமைவாதிகளும் பீற்றிக் கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் இந்த இந்து காலண்டரின் ஓட்டைகள் அம்பலத்துக்கு வந்துள்ளன.

கையில் கட்டியுள்ள கடிகாரம், காலை 8 மணியை காட்டுவதற்கு பதிலாக - இரவு 12 மணியை தொடர்ந்து காட்டிக் கொண்டிருந்தால் அதை நாம் கையில் கட்டிக் கொண்டு, இதுதான் சரியான நேரம் என்று ஊரில் கூறிக் கொண்டிருந்தால் - ஊர் மக்கள் என்ன சொல்வார்கள்? பைத்தியம் பிடித்து விட்டதா என்று கேட்பார்கள். எனது கடிகாரத்தின் நேரம் இரவு 12 மணி தான் என்று காலை 8 மணிக்கு ஒருவன் கூறிக் கொண்டே இருப்பதைப் போல்தான் இந்து காலண்டரான பஞ்சாங்கத்தின் கதையும் இருக்கிறது.

இந்து சோதிடர்களின் விஞ்ஞான அடிப்படையில்லாத தவறான கணிப்புகளால் ஊகத்தால் உருவாக்கப்பட்ட வானவியல் அடிப்படைகள். மிக மோசமான நேரத்தைக் காட்டிக் கொண்டிருக்கின்றன. பருவ காலங்களை வேகம் வேகமாக - கடந்த 60 ஆண்டுகளில் பாய்ச்சல் வேகத்தில் கடந்து போய் விட்டது. 'இந்து'க்கள் கணித்த நேரம், இதன் விளைவாக - இப்போது 24 நாட்கள் இடைவெளியில் இந்து காலண்டரான பஞ்சாங்கம், தேங்கிப் போய் நிற்கிறது. அதாவது உலகம் முழுதும் ஆகஸ்டு 1 ஆம் தேதி என்றால், இப்போது, பஞ்சாங்கப்படி, ஆகஸ்டு 25 அய் காட்டிக் கொண்டு நிற்கிறது. இந்த பஞ்சாங்கம் - சரியான வழிகாட்டியல்ல என்பதால் 1955 ஆம் ஆண்டு நேரு பிரதமராக இருந்தபோது, இந்திய அரசு மேக்னக் ஷா என்ற புகழ்பெற்ற விஞ்ஞானியின் தலைமையில் குழு ஒன்றை அமைத்தது. இந்து பஞ்சாங்க காலண்டரை விரிவாக ஆராய்ந்த குழு, தனது அறிக்கையில் "இந்து காலண்டர் என்பது - மனிதர்கள் தங்கள் சிந்தனையின் கற்பனையில் உருவாக்கப்பட்டதால், அதில் ஏராளமான மூடநம்பிக்கைகளையும், அரை உண்மைகளையும் இடைக்காலத்தில் இணைத்துவிட்டார்கள். இதில் பல குளறுபடிகளும், குழப்பங்களும் உள்ளன. இந்தக் குறைகளை துணிவோடு எடுத்துக்காட்டி மாற்றங்களைக் கொண்டுவர - எவருக்கும் துணிவில்லை. 23 நாட்கள் இடைவெளியில் இந்து பஞ்சாங்கம் போய்க் கொண்டிருக்கிறது. கடந்த 1400 ஆண்டுகளாக கொஞ்சம் கொஞ்சமாக ஏற்பட்ட கால இடைவெளி நீண்டு 23 நாட்களாக வந்து நிற்கிறது" என்று கமிட்டி தனது பரிந்துரையில் சுட்டிக் காட்டியதுடன், "தவறுகளும் - மூடநம்பிக்கைகளும் நிறைந்த 'களஞ்சியத்தை' நாம் இந்து வாழ்க்கை முறையாக ஏற்றுக் கொண்டு வாழப் பயிற்றுவிக்கப்பட்டு விட்டதால், அதை மாற்ற முடியாத புனிதமாக்கி - பாதுகாத்து வருகிறோம்" என்றும் சுட்டிக்காட்டியது. விஞ்ஞானிகள் குழு - புதிய தேசிய காலண்டர் முறையையும் உருவாக்கியது. ஆனால் - பார்ப்பனர்களும், பழமைவாதிகளும், சோதிடர்களும், இந்த மாற்றத்தை ஏற்காமல், கிடப்பில் போட்டுவிட்டனர்.

உண்மையில் சூரியன் உச்சிக்கு வரும் நாளான - தமிழர் திருநாள் - பொங்கல் நாள் என்று கொண்டாடப்படும் நாள் டிசம்பர் 22 ஆம் தேதியே ஆகும். ஆனால், தவறான கணிப்புகளால் அது ஜனவரி 14 அல்லது 15 ஆம் தேதிக்கு தள்ளப்பட்டுவிட்டது.

1955 இல் 23 நாட்களாக இருந்து, இப்போது 24 நாட்கள் அதிகரித்துள்ள தவறான இடைவெளியில்தான் நாள், நட்சத்திரம், நல்ல நேரம், எதிர்காலம் எல்லாமுமே கணிக்கப் பட்டு வருகிறது. இந்த அடிப்படையிலே சோதிட "மேதைகள்" பத்திரிகைகளில் சோதிடக் கணிப்புகளை அள்ளி வீசிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் படித்தவர்கள் முதல் பாமரர் வரை படித்து நம்பிக் கொண்டிருக்கிறார்கள்! வெட்கக் கேட்டைப் பார்த்தீர்களா?

**(ஆதாரம் : 'பிரண்ட் லைன்' இதழில் (மார்ச் 20) பீமன் நாத் என்ற வானவியல் விஞ்ஞானி எழுதிய கட்டுரை)**

## அன்னியன் யார்?



"தமது மூதாதையர்கள் உருவாக்கிய பார்ப்பனியத் தத்துவத்தை ஒவ்வொரு பார்ப்பானும் நம்புகிறான். இந்துச் சமுதாயத்திலேயே அவன் ஒரு அன்னியனாக இருக்கிறான். பார்ப்பானை ஒரு பக்கம் நிறுத்தி மற்றொரு பக்கம் சூத்திரர்கள், தீண்டத்தகாதவர்கள் என்று கருதுபவர்களையும் நிறுத்தி ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த இரண்டு பிரிவினரும் இரு வேறு அயல்நாட்டினரைப் போல்தான் தோன்றுவர். ஒரு ஜெர்மனியனுக்கு ஒரு பிரெஞ்சுக்காரன் எப்படி அன்னியனோ, ஒரு வெள்ளைக்காரனுக்கு ஒரு நீக்ரோ எப்படி அன்னியனோ, அதுபோலவே பார்ப்பான் சூத்திரர்களுக்கும் தீண்டப்படாதவர்களுக்கும் அன்னியனாவான்."

**– டாக்டர் அம்பேத்கர்**

**(காந்தியும், காங்கிரசும் தீண்டப்படாதோருக்கு செய்தது என்ன? என்ற நூலிலிருந்து)**

## சென்னை சிறையில் கழகத் தோழர்கள்

ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை எதிர்த்து, கர்நாடகாவில் தமிழ்ச் சங்க கட்டிடத்தின் மீது தாக்குதல் நடத்தி, தமிழ்நாட்டுப் பேருந்துகளை நாசமாக்கிய கன்னட வெறியர்களைக் கண்டித்து, எதிர்வினையில் இறங்கிய உணர்வுள்ள தமிழர்கள் பலர், சென்னையில் கைது செய்யப்பட்டனர். சென்னை புரசையிலுள்ள கன்னட நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டின் கீழ் பெரியார் திராவிடர் கழக செயல்வீரர்கள் ஏழு பேரை காவல்துறை கைது செய்து வழக்குப் பதிவு செய்து புழல் சிறையில் அடைத்துள்ளது. கைதான தோழர்கள் இரா. உமாபதி, அ. தமிழ்ச்செல்வன், தட்சணாமூர்த்தி, சுரேஷ், செயராம், கார்த்திக், செயக்குமார்.

கடந்த 7 நாட்களாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள தோழர்களுக்கு, பிணை மனுக்கள் தாக்கல் செய்யப்படவுள்ளன. தமிழர்களுக்காக இனஉரிமைக்காக குரல் கொடுத்த கழகத் தோழர்களைக் கைது செய்த நுங்கம்பாக்கம் காவல்துறை துணை ஆணையர் முரளி என்பவர், நுங்கம்பாக்கம் காவல்நிலையத்தில் கன்னடர்களின் பிரதிநிதியாக இருந்து மூர்க்கத்தனமாக தாக்கியுள்ளார்.


"புரட்சிப் பெரியார் முழக்கம்"

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 2451 2857


## காயப்படுத்திவிட்ட கலைஞரின் 'அவதூறு' மொழி



ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் தள்ளி வைக்கப்படுவதாக கலைஞர் அறிவிப்பு குறித்து, பல்வேறு கருத்துகள் எதிர்வினைகளாக வந்து கொண்டிருக்கின்றன. அரசியலில் இவை எதிர்பார்க்கப்பட வேண்டியவைதான். அதேபோல் பழ.நெடுமாறன் அவர்களும் கலைஞரின் அறிவிப்பு 'தமிழர்களுக்கு துரோகம்' என்ற கருத்தை வெளியிட்டிருந்தார். இதற்கு முதல்வர் கலைஞர் பதிலளித்துள்ளார் – இது கலைஞருக்கு உள்ள உரிமை தான். ஆனால் கலைஞர், பழ.நெடுமாறன் அவர்கள் மீது தனிப்பட்ட முறையில் வீசியுள்ள அவதூறும், இழி சொற்களும் கவலையையும், வேதனையையும் தருவதாக அமைந்துள்ளது.

கலைஞரைப் போல், பழ.நெடுமாறன் அவர்களும் தமிழகத்தின் மதிப்புக்குரிய மூத்த தலைவர்களில் ஒருவர். தேர்தல் அரசியலை உதறிவிட்டு, தமிழர்களின் மொழி, இன உரிமைகளுக்காக தொண்டாற்றி வரும், வெகு அபூர்வமான தலைவர். தமிழகத்தின் பொது வாழ்க்கையில் அரிதாகிவிட்ட பொது ஒழுக்கத்தையும், நேர்மையையும் வழுவாது பின்பற்றி வாழ்ந்து கொண்டிருப்பவர். அவர் மீது கலைஞர், "புலிகள் பெயர் சொல்லி பல வழிகளில் பொருளீட்டும் காகிதப்புலி' என்ற வசைமாரி பொழிந்திருப்பது, கிஞ்சித்தும் கலைஞருக்கு பொருத்தமற்ற, அவர் பயன்படுத்தக்கூடாத மலிவான சொற்கள் என்பதை வேதனையுடன் சுட்டிக் காட்டுவது நமது கடமை.

பழ. நெடுமாறன் அவர்கள் கட்சிகளுக்கும் அப்பால் தமிழர்களால் மதிக்கப்படும் மூத்தத் தலைவர். ஈழத் தமிழர்களின் உரிமைக்கு குரல் கொடுப்போரும், தமிழின உரிமையை வேண்டி நிற்போரும் அனைத்துக் கட்சிகளிலும், இயக்கங்களிலும் ஏராளம் இருக்கிறார்கள். அவர்களின் ஒட்டுமொத்த உணர்வின் குறியீடாகவே பழ. நெடுமாறன் இருக்கிறார் என்பதே உண்மை. அவரை 'புலிகளின் பெயரால் பொருளீட்டுபவர்' என்று கலைஞர் சித்தரித்துள்ளது, தமிழின உணர்வாளர்களின் உணர்வைக் கடுமையாக புண்படுத்திவிட்டது. பொருளீட்ட வேண்டும் என்று அரசியலுக்கும், பொது வாழ்க்கைக்கும் வருவோர் – புலிகள் பெயரைச் சொல்ல எப்படி முன்வருவார்கள்? அந்தப் பெயரைச் சொன்னால் கடும் அடக்குமுறைகளையும், தியாகங்களையும் அல்லவா ஏற்றாக வேண்டும்? அந்தத் தியாகத் தழும்புகளை ஏற்றுக் கொண்டிருப்பவர் தானே பழ. நெடுமாறன்.

மூத்த தலைவர் பழ.நெடுமாறன் அவர்களை விமர்சிக்க இத்தகைய அவதூறு மொழிகளைத் தேடி பிடித்திருக்க வேண்டாம். கலைஞரின் இந்த அவதூறு மொழிகள் பழ நெடுமாறன் அவர்களை மட்டுமல்ல, விடுதலைப்புலிகள் இயக்கத்தைக்கூட மறைமுகமாக களங்கப் படுத்தியே நிற்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தலையங்கம்

# எழுச்சியான “வாபஸ்!”

தமிழ்நாட்டின் எல்லைக்குள் – தமிழ்நாட்டுக்குரிய பங்கீட்டில் தருமபுரி கிருட்டினகிரி மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான திட்டம் தான் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம். இது நீர் மின் திட்டமோ, நீர்ப்பாசனத் திட்டமோகூட அல்ல. கருநாடக எல்லைப் பகுதிக்குள் தமிழ்நாடு அணை எதையும் கட்டவும் இல்லை. வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது 1998 ஜுன் 29 ஆம் தேதி மத்திய நீர்வளத் துறை அமைச்சகத்தின் செயலாளர் அருண்குமார் தலைமையில், டெல்லியில் கூட்டப்பட்ட கூட்டத்தில், கருநாடக அரசின் தலைமைச் செயலாளர், தமிழக அரசின் சிறப்புச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கூடி விவாதித்து, “கருநாடகத்தின் பெங்களூர் குடிநீர்த் திட்டமும், தமிழகத்தின் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டமும், மத்திய அரசின் தேசிய நீர்க் கொள்கைத் திட்டமாக அங்கீகரிக்கப் படுகிறது” என்று எழுதி, இரு தரப்பும் கையெழுத்திட்டு ஒப்புக் கொண்ட திட்டம், 1998 செப்டம்பர் 21 ஆம் தேதி, ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்துக்கு மத்திய அரசு அனுமதிக்கான ஆணையை வழங்கி, மத்திய ஊரக வளர்ச்சித் துறை உள்ளிட்ட தொடர்புடைய அனைத்துத் துறைகளின் அனுமதியும், ஏற்கனவே பெறப்பட்டுவிட்டது. இத் தகவல்களை யெல்லாம் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் எல்.கே. திரிபாதியே தெரிவித் திருக்கிறார்.

பாரதிய ஜனதா ஆட்சி காலத்தில் ஏற்பு வழங்கப்பட்ட திட்டத்தை, பாரதிய ஜனதாவின் சார்பில் 24 மணி நேர முலமைச்சராக இருந்து பதவி விலகிய கருநாடகத்து எடியூரப்பா பிரச்சினையாக்கினார். தமிழக எல்லைப் பகுதிக்குள் நுழைந்து, ஒகேனக்கல் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தார். ‘குஜராத்தை மத்திய அரசு வஞ்சிக்கிறது; குஜராத் மீது பாகிஸ்தான் தாக்குதல் தொடுக்கிறது’ என்று குஜராத் மோடி – குஜராத் தேசிய உணர்வை வெறியுணர்வாக்கி, தேர்தலில் பெற்ற வெற்றியைப் போல், கன்னட வெறியை அரசியலாக்கி ஓட்டுகளைப் பெறுவதற்கான நப்பாசைதான் இந்த எடியூரப்பாவின் ‘விளையாட்டுக்கு’ காரணம்! அத்துமீறும் இன வெறிக்கு எதிராக தமிழர்களிடையே இயல்பான, நேர்மையான, எழுச்சிகளும், எதிர்வினைகளும் எழவே செய்தன. ‘எங்கள் எலும்புகளை உடைத்தாலும் சரி; இத்திட்டத்தை நிறைவேற்றியே தீருவேன்’ என்று தமிழக முதல்வர் கலைஞரே பேசினார். தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளும், இயக்கங்களும், கலை உலகமும் ஒன்று சேர்ந்து, தமிழக உரிமைக்கு குரல்கொடுத்த காட்சியை நாடு கண்டது. இந்தச் சூழலிலும்கூட, பார்ப்பனர் ஜெயலலிதா மட்டும் வாய்திறக்கவே இல்லை. பாரதிய ஜனதாவின் தேர்தல் கூட்டணிக்கு தயாராக கதவு திறந்து வைத்துள்ள அக்கட்சி, தமிழர்கள் பேரெழுச்சியில் நீண்ட மவுனமே சாதித்தது.

இந்த நிலையில் கருநாடகத்தில் வரவிருக்கும் தேர்தல் முடிந்து, புதிய ஆட்சிப் பொறுப்பேற்கும் வரை இத்திட்டத்தை நிறுத்தி வைப்போம் என்று, தமிழக முதல்வர் கலைஞர் திடீரென்று அறிவித்த பிறகுதான், ஜெயலலிதாவின் மவுனமும் கலைந்தது. கலைஞர், தமிழர்களுக்கு துரோகம் செய்துவிட்டார் என்று அவசர அவசரமாக அறிக்கை வெளியிட்டார். பெங்களூரில் தமிழ்ச் சங்கத்தை கன்னட வெறியர்கள் தாக்கியபோதுகூட, பார்ப்பன அம்மையாரின் கண்டனம் வரவில்லை. பா.ஜ.க. தொடங்கி வைத்த சண்டித்தனத்தையும் கண்டிக்க முன்வரவில்லை. வழக்கம்போல், தனது பார்ப்பனியத்தின் அடையாளத்தையே மீண்டும் பதிவு செய்துள்ளார், அந்த அம்மையார்.

பார்ப்பனியம் இப்படி, பச்சையாக தன்னை அடையாளம் காட்டி, மீண்டும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற தீவிரமாக செயல்பட்டு வரும் நிலையில், தமிழகத்தில், அவ்வப்போது, இயல்பாக எழும், பார்ப்பனிய எதிர்ப்பு, தமிழின உணர்வு எழுச்சிகள், கொதி நிலைக்கு வரும்போது, அதில் தண்ணீரை ஊற்றி, அடக்கிடும் முயற்சிகளையே கலைஞரும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார். பார்ப்பனிய ராமாயணத்தை முன் வைத்து சேது சமுத்திரத் திட்டத்தை – பார்ப்பன சக்திகள் எதிர்த்தபோதும், கலைஞரின் தலைக்கு, விசுவ இந்து பரிஷத் தலைவர் ஒருவர் விலை நிர்ணயித்தபோதும், பார்ப்பன இந்துத்துவ சக்திகளுக்கு எதிராக, தமிழகமே கொதித்தெழுந்தது. அந்த எழுச்சியை அடுத்த சில நாட்களிலே தி.மு.க. தலைமை அணைபோட்டு அடைத்தது. தி.மு.க. தோழர்கள் தன்னெழுச்சியுடன் நடத்திய, பார்ப்பன இந்துத்துவ எதிர்ப்புப் போராட்டங்கள், அனைத்தும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன. முல்லைப் பெரியார் அணை நீர்மட்டத்தை உயர்த்துவதில், உச்சநீதிமன்ற ஆணையை செயல்படுத்துவதற்குக்கூட, கேரள அரசு முட்டுக்கட்டைப் போட்டு, கலவரத்தில் இறங்கியபோது, தமிழகத்தில் மூண்டெழுந்த பேரெழுச்சியும், தமிழக அரசால் உடனடியாக அடக்கப்பட்டது. தமிழ் ஈழத்தில் செஞ்சோலையில் மாணவிகள் மீது சிங்கள ராணுவம் குண்டு வீசிக் கொல்லப்பட்டபோதும் சரி, விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவரும், சமாதான பேச்சு வார்த்தைக் குழுவுக்கு தலைமை தாங்கியவருமான தமிழ்ச்செல்வன், சிங்கள ராணுவத்தால் குண்டுவீசிப் படுகொலை செய்யப்பட்டபோதும் தமிழகத்தில் உருவான இயல்பான எழுச்சியை மத்திய அரசின் மிரட்டலுக்கு பணிந்து, அடக்குமுறை சட்டங்களைக் காட்டி, கலைஞர் ஆட்சி அச்சுறுத்தி அடக்கியது. அதே போன்ற “எழுச்சியான வாபஸ்”களைத்தான் இப்போதும் கலைஞர் மேற்கொண்டிருக்கிறார். சுயமரியாதை இயக்கமும், திராவிடர் இயக்கமும் ஊட்டிய உணர்வுகளும், எழுச்சிகளும் தமிழர்களிடையே குறிப்பாக, இளம் தலைமுறையினரிடையே மங்கவும், மழுங்கவும் செய்யப்பட்டுவிட்டதால், பார்ப்பன, தமிழின விரோத சக்திகள், தலைதூக்கி நிற்கும் அவலத்துக்கு தமிழ்நாடு வந்துவிட்டது. இவைகளையும் மீறி, இயல்பான உணர்வுகள் பீறிடும்போது, பார்ப்பனர்களும், தமிழின எதிர்ப்பு சக்திகளும் பதறுகின்றன. இந்த தமிழின உரிமைகளுக்கான எழுச்சிகளே பெரியார்–அண்ணாவின் கொள்கைகளுக்கும், அந்த கொள்கைகளுக்கான கட்சிகளுக்கும், இயக்கங் களுக்கும் பாதுகாப்பு அரண். இந்த அப்பட்டமான உண்மையைப் புறந்தள்ளிவிட்டு, எழுந்து வரும் எழுச்சியை அடக்க, கலைஞரே முன் வருவது இன எதிரிகள் இலகுவாக முன்னேறப் பாதை அமைப்பதாகி விடாதா என்று கேட்க விரும்புகிறோம்.

கருநாடகத்தில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், அவர்கள் தமிழர் உரிமைகளைத் தடுக்கத்தான் முயற்சிப்பார்கள் என்பது யாருக்குத் தான் தெரியாது?

‘தமிழ்நாட்டில் காட்டிய எழுச்சிகளை இத்துடன் நிறுத்திக் கொள்வோம்’ என்ற வேண்டுகோளுடனாவது கலைஞர் நிறுத்தியிருக்கலாம். அதையும் தாண்டி, திட்டத்தையே தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக கூறியிருக்க வேண்டாமே! ‘விவேகமான முடிவு’ என்று ‘இந்து’ போன்ற பார்ப்பன ஏடுகளும், கன்னடத்து கிருஷ்ணாக்களும் பாராட்டும் நிலை வந்துவிட்டதே, நமது பின்னடைவைக் காட்டுகிறதே! உண்மைகள் கசந்தாலும், அதை சுட்டிக் காட்டுவது நமது கடமை என்றே கருதுகிறோம்.

## ‘துசகூட்டிகிட்ட ஜோடிதானுங்க!’

திருப்பதியில் ஒவ்வொரு நாளும், வெங்கடாசலபதிக்கும், பத்மாவதிக்கும் புரோகிதர்கள் வேத மந்திரங்களை ஓதி ‘திருக்கல்யாணம்’ நடத்துகிறார்கள். ‘விவாகரத்துகள்’ மாலையில் நடப்பது இல்லை. ஆனாலும், காலையில் மட்டும் ஒவ்வொரு நாளும் திருக்கல்யாணம் கட்டாயம் நடக்கும். கூடுதல் கட்டணம் செலுத்தி, ஆண்டுக்கணக்கில் காத்திருந்து பக்தர்கள் இந்த திருமணக் காட்சியை தரிசித்துவந்ததால் – மணமகனையும், மணமகளையும் சென்னைக்குக் கொண்டு வந்து இலவசமாகப் பார்க்கவைக்கும் முயற்சிகளில் திருப்பதி தேவஸ்தானம் இறங்கியது.

கடந்த 6 ஆம் தேதி சென்னை தீவுத் திடலில் இதற்காக ‘சினிமா’ பாணியில் பெரிய அரங்குகள் அமைக்கப்பட்டு வெண்கொற்றக் குடையின்கீழ் “தம்பதிகளை” அமர வைத்து, பக்தர்கள் முன் ‘மெகா திருமணம்’ அரங் கேற்றப்பட்டுள்ளது. சீனிவாச பெருமாள் ஸ்ரீதேவிக்கும், பூமாதேவிக்கும் தாலி கட்டும்போது எடுத்தப்படம் என்று ‘தினத்தந்தி’ ஏடு படம் ஒன்றை வெளியிட்டுள்ளது. படத்தைப் பார்த்தால், புரோகிதப் பார்ப்பனர் தாலியை தூக்கிக் காட்டிக் கொண்டு நிற்கிறார். அதாவது பகவான் சார்பில் புரோகிதர் தாலியை கட்டு கிறார். ஒரு முறை பத்மாவதி தாயார் கழுத்திலிருந்த தாலி கீழே விழுந்து விட்டதாக ஒரு புரளி கிளம்பியது. உடனே தங்களது ‘தாலி பாக்கியத்துக்கு’ ஆபத்து வரும் என்று அஞ்சி நாடு முழுதும் ஏராளமான பக்தைகள் தங்கள் தாலியைப் புதுப்பித்துக் கொண்டார்கள்.

மக்களிடம் பக்தியை நிலை பெறச் செய்வதற்காக, மனிதர்களின் சடங்குகளை யெல்லாம் கடவுள் சடங்குகளாக மாற்றி விட்டார்கள். வெங்கடாசலபதிக்கு இப்படி திருமணம் செய்யும் முறையும், தாலி கட்டும் முறையும் எப்போது வந்தது? ஏன் வந்தது? பகவான் திருப்பதி வெங்கடாசலபதி சராசரி மனிதனாகி, தாலி கட்டி, குடும்பம் நடத்து கிறாரா? அதுவும் தனது திருமணத்துக்கு சமஸ்கிருத மந்திரங்களை ஓதச் சொன்னாரா? அந்தத் திருமண மந்திரம், மனிதர்களுக்கு ஓதப்படுவதா? அல்லது பகவான் திருமணத்துக்கு தனி மந்திரங்கள் உண்டா? ‘உற்சவ மூர்த்தியை’ (அதாவது ‘ஒரிஜினல்’ ஏழுமலையான் என்ற மூலவருக்கு மாற்று) எப்படி சென்னைக்கு கொண்டு வந்தார்கள்? அதற்கு ஆகமங் களில் இடமிருக்கிறதா? திருமணக் காட்சியை தொலைக்காட்சி பெட்டிகள் வழியாக ஒளிபரப்பலாமா? – என்றெல் லாம் கேள்விகளைக் கேட்கக் கூடாது. கேட்டால் புண்படுத்துகிறார்கள் என்று புலம்புவார்கள்!

இந்தத் திருமணக் காட்சியை பார்த்தால், திருமணத் தடை இருப்பவர் களுக்கு தடை நீங்கி விடும் என்பது ஐதீகமாம்!

திருப்பதி ஏழுமலையானே – ஆண் கடவுள் அல்ல. பெண் கடவுள்தான் என் கிறார், பிரபல வேத பண்டிதர் அக்னி ஹோத்ரம் ராமானுஜ தாதாச்சாரி. மலை மீது வாழ்ந்த மக்கள் வழிபட்டு வந்த காளியை, பார்ப்பனர்கள், வெங்கடாசல பதியாக்கிவிட்டார்கள் என்கிறார். வெங்கடாசலபதியின் மனைவியான பத்மாவதி – அதனால்தான் ‘பகவானுக்கு’ அருகே இல்லாமல், மலைக்கு கீழே சற்று தூரத்தில் திருச்சானூர் எனுமிடத்தில் இருக்கிறாராம்! பெண்ணுக்குப் பக்கத் திலேயே எப்படி பெண்ணை ‘ஜோடி’யாக வைக்க முடியும் என்று கேள்வி எழுப்பு கிறார், தாதாச்சாரி. அப்படியானால் – புரோகிதப் பார்ப்பனர்கள் பெண்ணுக்கும்– பெண்ணுக்கும் தீவுத்திடலில் திருமணத்தை நடத்தி வைத்துக் கொண்டு, பக்தர்கள் கூட்டத்தைத் திரட்டுகிறார்களா? கடவுள் பெயரால் பெண்ணுக்குப் பெண் என்ன? பெண்ணுக்கும் மிருகத்துக்கும் கூட திருமணம் நடத்தி, “சுமாங்கல்ய தீர்காயிசுபலவந்து” என்று மந்திரத்தைக் கூறி அட்சதையைப் போட்டு விடுவார்கள். பக்தர்களும் கோவிந்தா, கோவிந்தா என்று வாயிலும் கன்னத்திலும் அடித்துக் கொண்டு வந்துவிடுவார்கள்!

எல்லாம் ‘அவாள்’ வகுப்பதுதான் பக்தி; ஆன்மீகம்; ஆகமம்; வெண்டைக்காய்; வெள்ளைப்பூண்டு!

– கோடங்குடி மாரிமுத்து

## சென்னையை கலக்கினார் சிற்பி.ராசன்



சென்னையில் மார்ச் 24 முதல் 29 வரை - தோழர் சிற்பி ராசன் பங்கேற்ற ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சிகள் - பெரும் தாக்கத்தை உருவாக்கின. சைதை, மயிலை, கொளத்தூர், சேத்துப்பட்டு திருவல்லிக்கேணி, சோழிங்கநல்லூரில் குடிசைப் பகுதிகள் நிறைந்த இடங்களில் நடந்த இந்த பகுத்தறிவுக் கூட்டத்துக்கு, ஏராளமான அளவில் இளைஞர்கள் திரண்டு வந்தது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு கூட்டத்திலும் சிற்பிராசன், ஒன்றரை மணி நேரத்துக்கும் மேலாக மந்திரமா, தந்திரமா நிகழ்ச்சிகள் மூலம் பகுத்தறிவுக் கருத்துகளை விதைத்தார். கொளத்தூர், சேத்துப்பட்டு பகுதிகளில் காவல்துறை தடைவிதிக்க முயன்ற முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் தொடர் பிரச்சாரத்துக்காகவே நகரும் மேடைகளை உருவாக்கி, ஒவ்வொரு பகுதிக்கும் கொண்டு சென்றனர். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், வழக்கறிஞர்கள் செ.துரைசாமி, சு.குமாரதேவன், சைதை அன்பரசன் ஆகியோர் ஒவ்வொரு கூட்டத்திலும் சிறப்புரையாற்றினர். மாவட்ட செயலாளர் உமாபதி, தலைவர் தபசி. குமரன், பொருளாளர் அன்பு தனசேகர், எ.கேசவன் அனைத்துக் கூட்டத்தையும் ஒருங்கிணைத்து செயல்பட்டனர். பல கூட்டங்களில் காவல்துறையினரும், பொது மக்களும், தோழர் சிற்பி ராசனை நேரில் பாராட்டியதோடு, கழகத்தின் முயற்சிகளையும் பாராட்டினர். ஒவ்வொரு கூட்டத்திலும் துண்டேந்தி, நிதி வசூல் செய்தபோது, மக்கள் பேராதரவு தந்தனர். தோழர்கள் திலீபன், சுதாகர், ஜெயவேலு ஆகியோரின் பறை இசைக்குப் பிறகு கூட்டங்கள் துவங்கின.

இரண்டாவது கட்டமாக, ஏப்.14 முதல் 19 ஆம் தேதி வரை சென்னையின் பிற பகுதிகளில் தோழர் சிற்பிராசன் பங்கேற்கும் ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சிகளுக்கு சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

# ‘நான் முதலில் தமிழன்; பிறகு மனிதன்’



கர்நாடகத் தமிழர்கள் மீதான கன்னட வெறியர்களின் இனவெறித் தாக்குதலைக் கண்டித்து சென்னையில் கலைத் துறையின் பல்வேறு அமைப்புகள் கூட்டாக இணைந்து மாபெரும் உண்ணாநிலைப் போராட்டம் நடத்தினர். இந்நிகழ்ச்சியில் நடிகர் சத்யராஜ் பேசியதாவது:

உங்களை சிரிக்க வைப்பதற்காக உங்களிடம் கைதட்டல் வாங்குவதற்காக சில ஐயிட்டங்களை அள்ளி வீசுவேன். இப்ப அதெல்லாம் எதுவும் செய்யப் போறதுல்ல.

ஏன்னா என்னைப் பொறுத்தவரை இது தமிழனோட உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்காக நடத்துகிற கூட்டம். பொதுவாக சில மேடைகளில் சில பேர் பெயரைச் சொன்னால் கைதட்டல் வாங்கலாம். (ஆவேசமாக) ஆனால் அப்படி அவங்க பேரைச் சொல்லி நான் கைதட்டல் வாங்கறக்குப் பதிலா நான் நாக்கைப் பிடுங்கிகிட்டுச் சாவேன்யா. இங்க வந்தது வித்தை காட்டுறதுக்கல்ல...

கர்நாடகத்துல தமிழனை கன்னடன் அடிக்கிறான். அதுக்கு கண்டனம் தெரிவிக்க வந்திருக்கோம். ஒவ்வொரு நடிகன் பேரைச் சொல்லி கைதட்டல் வாங்கறதுக்காக வரலைய்யா. அதிகமா சம்பளம் வாங்குற நடிகன் பேரைச் சொன்னா அதிகமா கைதட்டுவ..., அதைவிட கம்மியா சம்பளம் வாங்குற நடிகன் பேரைச் சொன்னா அதைவிட கம்மியா கைதட்டுவ... அப்படி அவங்க பேர சொல்லி கைதட்டல் வாங்குறதைவிட நாக்கைப் புடுங்கிட்டுச் சாவான்யா இந்தத் தமிழன்.

உலகில் வாழும் 10 கோடி தமிழர்களுக்குப் போய்ச் சேருவதற்காக பேசும் பேச்சு இது. மானமுள்ள தமிழர்களுக்குப் போய்ச் சேருவதற்காக பேசும் பேச்சு. பொதுவா நான் என்னை மனுசன்னு சொல்லிக்கத்தான் ஆசைப்படறேன்... ஆனா இன்னையிலிருந்து நான் மனுசன் இல்லை... தமிழன்னு சொல்லிக்கத்தான் ஆசைப்படறேன். அப்ப உங்க எல்லாத்துக்கும் ஒரு சந்தேகம் வரும். அப்ப மனுஷன் தமிழன் இல்லையா? அப்படின்னு ஒரு சந்தேகம் வரும்.

அப்படி ஒரு சந்தேகமே உங்களுக்கு வேண்டாம்யா... தமிழன் மனுசன் இல்லை... மரம். அப்படின்னுதான் நினைச்சுகிட்டு இருக்காங்க. தமிழன் ஒரு மனுசனா இல்லாம மரமா இருந்தா என்ன என்ன நடக்கும்? ஒரு நாய் காலை தூக்கிட்டு வந்து அங்கு சிறுநீர் கழிக்கும். அதை அந்த மரம் சகிச்சுக்கும். அந்த வழியா போற ஒருத்தன் அந்த மரத்தை வெட்டிட்டுப் போயி அந்த மரத்துல கட்டில் செய்து கால் மேல் கால் போட்டு ஆட்டிக்கிட்டு இருப்பான். அப்புறம் மேசை நாற்காலி செய்து அது மேலேயே உட்கார்ந்துக்குவான்.

இதையெல்லாம் சகிச்சுக்கிட்டு நாம மரமா வாழ்ந்துகிட்டு இருந்தா நமக்கு மரியாதையே இல்லாமல் போயிடும். மரமா வாழுற தமிழனை மனுசனா வாழு - தமிழனா வாழுன்னு சொல்றேன். ஏன்னா எந்த மேடையில் எதைச் சொல்லி கைதட்டல் வாங்கறதுன்னு எனக்கும் தெரியும். கருநாடகத்தில நம்ம சகோதரனை அடிக்கிறான். அதனால் அது சம்பந்தமா மட்டும்தான் நான் பேசுவேன்.

காந்தி சொல்லியிருக்கார் - கண்ணுக்கு கண் என்று ஆரம்பிச்சா உலகத்தில இருக்கிற 600 கோடி பேரும் கண்பார்வையற்றவர்களாகத்தான் இருக்கனும். அதனால பழிவாங்குற உணர்ச்சி இருக்கக் கூடாதுன்னு காந்தி சொன்னாரு. ஆனால் இப்ப அது சரிப்பட்டு வராதுங்க. ஏன்னா தமிழனோட கண்ணை மகராட்டிரத்துல பால்தாக்கரேன்னு ஒரு ஆள் சிவசேனானு ஆரம்பிச்சி பிடுங்க ஆரம்பிச்சான்... மலேசியாவுல தமிழன் கண்ணை பிடுங்கறான்... நம்ம ஈழத்தில் தமிழன் கண்ணை பிடுங்கறான்... இப்ப கர்நாடகாவிலேயும் தமிழனோட கண்ணை பிடுங்கறான்...

கண்ணுக்கு கண் கூடாதுன்னு காந்தி சொன்னதை நாம் கடைப்பிடிச்சா இந்த உலகத்துல இருக்கிற 600 கோடி பேரில் 10 கோடி தமிழன் மட்டும் குருடனா இருப்பான். மீதி 590 பேரு கண்ணோட சுத்திக்கிட்டு இருப்பான்... மறந்துடாதீங்க... 590 பேரு கண்ணோட சுத்திகிட்டு இருப்பான்... 10 கோடி தமிழன் மட்டும் தான் குருடனா சுத்திகிட்டு இருப்பான்.

ஏற்கெனவே தமிழன் கருத்துக் குருடனாகவும், சிந்தனைக் குருடனாகவும் சுத்திகிட்டு இருக்கான். அவனுக்கு கண்ணும் குருடாகிப் போச்சுன்னா அவனுக்கு வாழ்க்கை மயிர் மாதிரி இருக்கும்.. ஞாபகம் வச்சுக்க... இது இன்னைக்கு நேத்தைக்கு நடக்கிற பிரச்சனை இல்லீங்க...

கர்நாடக முதல்வராக குண்டுராவ் இருந்த போது தமிழக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். விருந்துக்குச் சென்றார். விருந்தில் நன்றாக சாப்பிட்ட எம்.ஜி.ஆர். கடைசியில் ஒரு தம்ளர் நீரை அருந்த மறுத்து விட்டார். அங்க என் தமிழன் நீரில்லாமல் சாகிறான் என்று நீர் அருந்த மறுத்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர் தமிழர்களுக்காகவே வாழ்ந்தவர்.

***சென்னையில் திரைப்படக் கலைஞர்கள் – கன்னட இன வெறியைக் கண்டித்து நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தில் நடிகர் சத்யராஜ் குரல் மட்டும் தனித்துவமாக ஒலித்தது. ஈழத் தமிழர் உரிமைகளையும் இணைத்துக் குரல் கொடுத்த நடிகர் சத்யராஜ் – சேது சமுத்திரத் திட்டத்தை எதிர்க்கும் மதவெறி சக்திகளையும் கண்டிக்கத் தயங்கவில்லை. உள்ளத்திலிருந்து பீறிட்ட உண்மையான உணர்வை அப்படியே கொட்டிய, நடிகர் சத்யராஜ் உரையை, பல ஏடுகள் வெளியிட தயங்கிய நிலையில் – ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ முழு உரையையும் பதிவு செய்கிறது.***

எல்லா வகையிலும் கன்னடர்களுக்கு நம்மீது எரிச்சல். சாய்குமார் என்ற ஒரு கன்னட நடிகர் தனக்குப் பிடித்த நடிகர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் என்று ஒரு பேட்டியிலே கூறியபோது, ஏன் கன்னட நடிகர் ராஜ்குமாரை பிடித்த நடிகர்னு சொல்லுன்னு சொல்லி அடித்து உதைத்தனர் - இதுக்குப் பேர்தான் கன்னட வெறிங்கிறது.

சந்தனக் கடத்தல் வீரப்பன் அட்டூழியத்தைப் பார்த்து நானே ரொம்ப நொந்து போயிருக்கேன். ஆனால் பல வீரப்பன்களை நீங்கள் இப்போது உருவாக்கிவிடாதீர்கள். அது உங்க கையில்தான் இருக்கிறது.

“நாம் எடுக்கும் ஆயுதம் எது என்பதை நமது எதிரிகள்தான் தீர்மானிக்கிறார்கள்” என்று மாசேதுங் சொல்லியிருக்காரு. நாங்கள் ஆயுதத்தை எடுக்க விரும்பவில்லை. ஆயுதத்தை எடுக்கக்கூடிய சூழ்நிலையை தயவு செய்து உருவாக்கி விடாதீங்க.

ஒகேனக்கல் கூட்டு குடிநீர்த் திட்டத்தால் கர்நாடகாவுக்கு எந்த நட்டமும் இல்லை. நம்ம நீரை நாமே பயன்படுத்துகிறோம். என் பெண்டாட்டிகூட நான் படுக்குறேன். உனக்கு ஏண்டா வேகுது? ஒகேனக்கல் கூட்டு குடிநீர்த் திட்டத்தால் உனக்கு எந்தவித பிரயோசனமும் இல்லை. நீ எதையாச்சும் சொல்லி அரசியல் பண்ணுவதற்காக பேசுகிறீர்கள்.

வாட்டாள் நாகராஜூன்னு ஒரு பெரிய காமெடியன் இருக்கான். நல்லவேளை அவன் சினிமாவில நடிக்கலை. நம்ம வடிவேலு எல்லாம் கிட்டயே வரமுடியாது. அந்த வாட்டாள் நாகராஜூ சொல்றாரு, ஈரோடு எல்லாம் கர்நாடகத்துக்கு வந்து சேரனுமாம். ஈரோடு-கிருட்டிணகிரி-இந்த சென்னை - கடற்கரை எல்லாம் கர்நாடகத்துக்கு போய் சேரணும். நாம வாயில்ல விரலை வெச்சிகிட்டுப் போகனும்.

வந்தாரை வாழ வைக்கும் தமிழ்நாடு - இதையே பேசிகிட்டு இருக்காதே. நீ கேணயனா ஆகிடுவ... வந்தாரை வாழ வைக்கவும் தெரியனும், வாலை ஆட்டுனா ஒட்ட நறுக்கவும் தெரியனும்யா. அவன் தாண்டா தமிழன். சும்மா வந்தாரை வாழ வைப்பேன்னு சொல்லிகிட்டே இருந்தா உம்மேல குதிரை ஏறிட்டுத்தான் இருப்பான். நீ குனிஞ்சா ஏறத்தான் செய்வான். குனியாம - நிமிர்ந்து நில்லு!

ஒவ்வொரு தொழில் செய்வோருக்கும் ஒவ்வொரு சங்கங்கள் இருக்கின்றன. பிரச்சினைகள் வரும்போது ஒரு சங்கத்தினர் போராடினால் மற்றவர்கள் தார்மீக ஆதரவு தரலாம். ஆனால் ஒரு தமிழன் தாக்கப்படும் போது தமிழர்கள் அனைவரும் குரல் கொடுக்க வேண்டும்.

எங்க இருந்துமே தமிழனுக்கு தண்ணீர் வரக் கூடாதுன்னு சொல்றான்யா. காவிரியிலிருந்து வரக்கூடாது; கிருஷ்ணாவிலிருந்து வரக்கூடாது; முல்லைப் பெரியாறிலிருந்து வரக்கூடாதுன்னு சொல்றான்; சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றவே கூடாதுங்கறான்.

எனக்கு மனுசனா வாழனும்தான் ஆசை. தமிழன் - தமிழன்னு சொல்லி பிரிவினையை பேச எனக்கு ஆசையே இல்லை. ஆனா பிரிவினை பேச வேண்டிய சூழ்நிலையை தமிழன்னு மார்தட்டிக்க வேண்டிய சூழ்நிலையை நீ தான் கொண்டு வந்திருக்க.

தமிழர்களே உங்களுக்கு அனைத்துக்கும் ஒரு தமிழன் இருக்கிறான். மத்தவங்கள தூக்கி வெச்சுக்கிட்டு ஆட வேண்டிய அவசியமே இல்லை. அய்யா...

நீ சாமி கும்பிட ஆசைப்பட்டா கூட உனக்குத் தமிழ்க் கடவுள் முருகன் இருக்கிறான்; பழனி முருகன் இருக்கான்; திருச்செந்தூர் முருகன் இருக்கான் - போய் முருகனைக் கும்பிடு, மதுரை வீரனைக் கும்பிடு, சுடலை மாட சாமியைக் கும்பிடு - உனக்குத் தமிழ்க் கடவுள் 1008 சாமி இருக்கான்யா.

வடநாட்டு சாமி இராமர் சாமியில்ல, இராகவேந்திரர் தேவையில்ல, கேரளா அய்யன் உனக்குத் தேவையில்லை. - முருகன் போதும் உனக்கு.

அந்த அளவுக்கு தமிழனை உணர்ச்சிவசப்பட்டு பேச வைக்கிறாங்க. இது என்ன இந்தியா? கர்நாடகத்துல என்ன வேண்டுமானாலும் செய்வீன்னா, நீ இந்தியன் கிடையாதா?

தமிழா! தமிழா! விழித்துக் கொள்!

ஒவ்வொரு விசயத்திலும் தமிழனுக்குத் தீங்கு நடந்தா குரல் கொடு!

இங்க மட்டுமல்ல இலங்கையில் நம்ம தமிழர்கள் தாக்கப்படுகிறார்களா? குரல் கொடுய்யா. இலங்கையில் இருக்கிற தமிழன் உன் சகோதரன் யா - உன் சகோதரி - அந்த உணர்ச்சி உனக்கு வேண்டாமா?

இலங்கையில் செஞ்சோலைங்கிற பள்ளிக்கூடத்து மேல இலங்கை இராணுவம் குண்டு போட்டு 60 தமிழ்க் குழந்தைகள் சாகுறாங்க. அந்த இலங்கை இராணுவத்துக்கு நம்ம இந்திய அரசாங்கம் உதவி செய்யலாமா? செய்யக்கூடாதுன்னு சொல்லு - சொல்றா - செய்யக் கூடாதுன்னு.

தமிழன் எந்த மூலையிலும் நசுக்கக் கூடாது - தமிழா நீ குனியாதே - உன் மேல் எவனும் குதிரையேற அனுமதிக்காதே - நீ முட்டாள் ஆயிடுவே - **என்றார் சத்யராஜ்.**

## சட்டக் கல்லூரி மாணவர் முகாமில் சமூகநீதி பரப்புரை

திருச்சி சட்டக்கல்லூரி மாணவர்களின் நாட்டு நலப்பணி முகாம் புதுக்கோட்டை குளத்தூரில், 10 நாட்கள் நடைபெற்றது. 100 மாணவ மாணவிகள் பங்கேற்ற இந்த முகாமில் ஏப்ரல் முதல் தேதி தோழர் சிற்பிராசன் ‘மந்திரமா, தந்திரமா’ நிகழ்ச்சிகள் மூலம் மூடநம்பிக்கைகளுக்கு எதிரான கருத்துகளை முன்வைத்தார். அடுத்த நாள் 2 ஆம் தேதி மாலை பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் - ‘சட்டமும் இடஒதுக்கீடும்’ எனும் தலைப்பில் ஒன்றரை மணி நேரம் விரிவாக உரையாற்றினார். பேராசிரியர்கள் பிச்சைப் பிள்ளை, இராஜேசுவரன் ஆகியோர் முகாமை பொறுப்பேற்று நடத்தினர். இரண்டு நாள் நிகழ்வுகளிலும் மாணவ மாணவியரும் - உள்ளூர் பொது மக்களும் ஏராளமாக பங்கேற்றனர். வழக்கறிஞர் லெனின், வழக்கறிஞர் முத்து முருகன் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# இந்தியாவில் ‘மனித உரிமை’ மதிக்கப்படுகிறதா?

பாகிஸ்தானில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர், இந்தியாவைச் சார்ந்த சுரப்ஜித் சிங், அவரது கருணை மனுவை தள்ளுபடி செய்த முன்னாள் அதிபர் முஷாரப் - தூக்குத் தண்டனையை நிறைவேற்ற உத்தர விட்டார். சுரப்ஜித் சிங்கின் தூக்குத் தண்டனையை ரத்து செய்து, அவருக்கு கருணை அடிப்படையில் மன்னிப்பு வழங்க வேண்டும் என்று இந்தியா கோரியது. பஞ்சாப் மாநில சட்டமன்றம், சுரப்ஜித் சிங்கின் தூக்குத் தண்டனையை நிறுத்தக் கோரி தீர்மானம் நிறைவேற்றியது. அவரது தூக்குத் தண்டனையை பாகிஸ்தான் ஒரு மாத காலம் நிறுத்தி வைத்துள்ளது. சுரப்ஜித் சிங் - இந்தியாவின் சார்பில் பாகிஸ்தானில் உளவு பார்த்ததாக குற்றச்சாட்டு. லாகூர், கசூர், பைசாபாத் நகரங்களில் 1990 இல் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் 14 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர். அந்த வழக்கில் கைது செய்யப்பட்ட சுரப்ஜித் சிங்குக்கு 1991 இல் பாகிஸ்தான் நீதிமன்றம் தூக்குத் தண்டனை வழங்கியது. கடந்த 18 ஆண்டுகளாக தூக்குத் தண்டனை கைதியாக அவர் சிறையிலிருந்து வருகிறார். அண்டை நாட்டில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக அந்நாட்டு சட்டப்படி, தீவிரவாதி என்று குற்றம் சாட்டப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு, கருணை காட்ட வேண்டும் என்று இந்தியா கோரிக்கை விடுக்கும் நிலையில், தமிழ்நாட்டில் ராஜீவ் கொலையில் குற்றம் சாட்டப்பட்டு, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களின் தூக்குத் தண்டனையை ஏன் ரத்து செய்யக் கூடாது என்ற நியாயமான கேள்வி எழவே செய்கிறது.

சுரப்ஜித் சிங்கின் கருணை மனுவை முஷாரப் நிராகரித்து, தூக்குத் தண்டனையை உடனடியாக நிறைவேற்றக் கோரியதற்கு காரணம் உண்டு. பார்ப்பன - தேசிய ஊடகங்கள் - இந்த செய்தியை மக்களிடம் கொண்டு செல்லாமல் முக்கியத்துவத்தைக் குறைத்து விட்டன. சுரப்ஜித் சிங் தூக்கு தண்டனையை உறுதி செய்வதற்கு முன் நடந்த சம்பவங்களைத் திருப்பிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

கடந்த மார்ச் 3 ஆம் தேதி பாகிஸ்தான் சிறையில், காஷ்மீர் சிங் என்ற இந்தியர் 35 ஆண்டுகால சிறைவாசத்துக்குப் பிறகு, பாகிஸ்தான் அரசால், மனிதாபிமான உணர்வோடு விடுதலை செய்யப்பட்டார். இவரது விடுதலைக்கு முக்கிய காரணமாக இருந்தவர். பாகிஸ்தானின் மனித உரிமை துறைக்கான அமைச்சர் அன்சார் புருனே என்பவர். பாகிஸ்தான் சிறைக்கு பார்வையிட சென்ற அந்த அமைச்சர், 35 ஆண்டுகளாக கவனிப்பாரற்று, சிறையில் வாடியவரை மனித உரிமைக் கண்ணோட்டத்தில் விடுதலை செய்வதற்கான முயற்சிகளை மேற் கொண்டார். இந்தியாவின் பார்ப்பன ஆட்சி, காஷ்மீர் சிங் விடுதலைக்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. காஷ்மீர் சிங் ‘ரா’ உளவு நிறுவனத்தால் பாகிஸ்தானுக்கு உளவு பார்க்க அனுப்பப்பட்டவர். இதற்காக, தனது சீக்கிய மதத்தைத் துறந்து, முஸ்லீமாக மதம் மாறி, ‘சுன்னத்’ செய்து கொண்டு, பாகிஸ்தானில் உளவு பார்த்தார். பிறகு, பிடிபட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இந்தியா-பாகிஸ்தான் எல்லைப் பகுதியான வாகா என்ற இடத்தில், பாகிஸ்தான் அமைச்சரே, விடுதலைப் பெற்ற காஷ்மீர் சிங்கை அழைத்து வந்து இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைத்தார். உணர்ச்சிப்பூர்வமான பிரியா விடை தரும் நிகழ்ச்சியும் அங்கே நடந்தது. சொந்த மாநிலமான பஞ்சாபுக்கு திரும்பிய காஷ்மீர் சிங், தன்னை உளவு பார்க்க அனுப்பிய ‘ரா’ நிறுவனம் தன்னையும், தனது குடும் பத்தையும் கைவிட்டதையும், தனது குடும்பம் வறுமைப் பிடியில் வாழ்ந்து கொண்டிருப்பதையும் கண்ணீருடன் பத்திரிகையாளர்களிடம் கூறியதோடு, பாகிஸ்தான் அமைச்சரின் முயற்சியினால் தான் தனக்கு விடுதலை கிடைத்ததையும் நன்றியுடன் குறிப்பிட்டார்.

> **எந்த வாகா எல்லைப் பகுதியில் காஷ்மீர் சிங், பாகிஸ்தான் அமைச்சரால் மாலை அணிவிக்கப்பட்டு, மனித நேயத்துடன் வழியனுப்பி வைக்கப்பட்டாரோ, அதே எல்லைப் பகுதியில் அடுத்த ஒரு வாரத்தில் இந்தியா ஒரு பாகிஸ்தான் குடிமகனின் சவத்தை சவப் பெட்டியில் வைத்து பாகிஸ்தான் அதிகாரிகளிடம் ஒப்படைத்தது.**

எந்த வாகா எல்லைப் பகுதியில் காஷ்மீர் சிங், பாகிஸ்தான் அமைச்சரால் மாலை அணிவிக்கப்பட்டு, மனித நேயத்துடன் வழியனுப்பி வைக்கப்பட்டாரோ, அதே எல்லைப் பகுதியில் அடுத்த ஒரு வாரத்தில் இந்தியா ஒரு பாகிஸ்தான் குடிமகனின் சவத்தை சவப் பெட்டியில் வைத்து பாகிஸ்தான் அதிகாரிகளிடம் ஒப்படைத்தது. அவரது பெயர் காலிப் முகம்மது. தீவிர கிரிக்கெட் ரசிகர். இந்தியாவுக்குள் கிரிக்கெட் போட்டியைப் பார்க்க, உரிய ஆவணங்களின்றி வந்ததால், அவரை கைது செய்து இந்தியாவில் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் விசாரணைக் கைதிதான். இந்தியாவின் கொரேகான் சிறையில், கடந்த பிப்.12 ஆம் தேதி அவர் மரணமடைந்து விட்டார். காஷ்மீர் சிங் விடுதலையான அடுத்த வாரம், இந்தியா, பாகிஸ்தான் குடிமகனின் சடலத்தை சவப்பெட்டியில் வைத்து, அதே எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் அதிகாரிகளிடம் ஒப்படைத்தது.

காலிப் முகம்மது சிறையில் சித்திவதை செய்யப்பட்டதால் தான் மரணமடைந்தார் என்பதை இந்தியா மறுக்கிறது. மருத்துவமனைகளில் அவருக்கு சிகிச்சை தரப்பட்டதாக, மருத்தவமனை ஆவணங்களை இந்தியா காட்டினாலும் அவருக்கு எந்த நோய்க்கு சிகிச்சை தரப்பட்டது என்ற விவரம் ஆவணங்களில் இல்லை. இந்த நிலையில் தான் சுரப்ஜித் சிங் தூக்குத் தண்டனையை முஷாரப் உறுதி செய்தார்.

பாகிஸ்தான் சிறையில் இந்தியாவைச் சேர்ந்த 430 பேர் அடைபட்டுள்ளார்கள் என்று ஒரு பத்திரிகை செய்தி கூறுகிறது. இவர்களுக்கு இந்திய தூதரகம், எந்த சட்ட உதவியும் செய்ய முன்வரவில்லை.

இந்திய தூதகரத்தோடு தொடர்புகளே இல்லாத நிலையில் உள்ளனர். குஜராத் மீனவர் ஒருவர், பாகிஸ்தான் கடல் பரப்பில் மீன் பிடித்ததாக 2006 இல் கைது செய்யப்பட்டு, பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டார்.

கராச்சிக்கு அருகே உள்ள மாலிர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர், கடந்த மார்ச் 20 ஆம் தேதி மரணமடைந்தார். வயிற்றுவலி காரணமாக சிறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, உயிரிழந்துள்ளார் என்று செய்திகள் கூறுகின்றன.

இந்தியாவின் வெளி நாட்டுத் தூதரகங்கள் - மனித நேயமற்றவை. அங்கே பார்ப்பனர்கள் கோலோச்சும் போது எப்படிமனிதாபிமானத்தை எதிர்பார்க்க முடியும். ✦

## பொள்ளாச்சியில் கழகம் ஆர்ப்பாட்டம்



ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ஒத்தி வைப்பதாக தமிழக அரசு அறிவித்ததைத் தொடர்ந்து பொள்ளாச்சியில் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 7.4.2008 திங்கள் காலை பொள்ளாச்சி பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு பொள்ளாச்சி நகர கழகச் செயலாளர் வே. வெள்ளிங்கிரி தலைமை தாங்கினார். தேசியக் கட்சிகளான காங்கிரசு, பா.ஜ.க., கம்யூனிஸ்ட் கட்சிகளைக் கண்டித்தும், கர்நாடகத் தமிழர்களைத் தாக்கிய கன்னட வெறியர்களைக் கண்டித்தும் ஆர்ப்பாட்டத்தில் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இறுதியில் நடைபெற்ற கண்டன உரையில், தமிழகத்தில் எழுந்த இன எழுச்சியைப் பயன்படுத்தி மத்திய அரசைப் பணிய வைத்து திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்காமல் திட்டத்தை ஒத்தி வைப்பதாக அறிவித்துள்ள தமிழக முதல்வர் கலைஞரின் முடிவு தமிழரின் நலனுக்கு எவ்வாறெல்லாம் பாதகமாக அமையும் என்பது குறித்தும், தொடர்ந்து தமிழர் விரோதப் போக்கைக் கடைப்பிடிக்கும் காங்கிரசு, பா.ஜ.க. போன்ற கட்சிகளின் இரட்டை வேடத்தைப் பொது மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி உரைகள் நிகழ்த்தப்பட்டன.

தி.மு.க.வைச் சேர்ந்த கண்ணப்பன், சாகுல், ம.தி.மு.க. நகர மன்ற உறுப்பினர்கள் முரளி, அண்ணாதுரை, நேதாஜி மன்றம் நடராசு, தமிழ் இளைஞர் பொதுநல மன்றம் ராசுக்குமார், தமிழ்நாடு மாணவர் கழகம் கணேசுக்குமார், பகுத்தறிவாளர் பேரவை சி. விசயராகவன் மற்றும் கழகப் பொறுப்பாளர்கள் காசு. நாகராசன், த.இராசேந்திரன், கலை இராசேந்திரன், பழ. ஆதி, சம்பத், அரிதாசு, முருகானந்தம் உள்ளிட்ட தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## கழகத் தோழர் பரமேசுவரன் படத்திறப்பு



மறைந்த கழகத் தோழர் மா.பரமேசுவரன் (வயது 30) படத்திறப்பு - நினைவு போற்றும் நிகழ்ச்சி 17.3.2008 மாலை இராயப்பேட்டையில் நடைபெற்றது. கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மாவட்ட செயலாளர் உமாபதி, பொருளாளர் அன்பு தனசேகர், தலைமை செயற்குழு உறுப்பினர் கேசவன், த. சத்யா ஆகியோர் இரங்கல் உரையாற்றினர். தோழர் பரமேசுவரன் நினைவாக மார்ச் 20 அன்று நண்பர்கள் சார்பில் குருதிக்கொடை முகாமை நடத்தி, ஊனமுற்றோருக்கு 3 சக்கர வண்டிகளை வழங்கினர்.


### நன்கொடை

- சென்னை இராயப்பேட்டை கழக ஆதரவாளர் மோகன் - ஜோபிதா இணையரின் மகள் நந்தனாவின் நான்காவது (4.5.2008) பிறந்த நாளை முன்னிட்டு ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சி நிதியாக ரூ.1000 அளித்துள்ளார்.
- ‘மல்லிகைப்பூ’ இட்லி தயாரிக்கும் கழகத் தோழர் மு. இனியவன், சென்னை மாவட்ட கழகத்துக்கு வழக்கு நிதியாக ரூ.1000-ம், ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்திற்கு ரூ.1000-ம் நன்கொடையாக வழங்கியுள்ளார். **(நன்றி – ஆர்)**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 10th April 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 ஏப்ரல் 17, 2008 புரட்சி 7 முழக்கம் 16 விலை : ரூ.2.50


## சக்தி இல்லா 'சாமி'கள்

### ஒரே நாளில் மட்டும்...

கடவுள் சக்தியை நம்பி - தரிசிக்க செல்வோர் விபத்துக்குள்ளாகி பரிதாபமாக மரணமடையும் செய்திகள் உண்மையிலே வேதனைக்குரியதுதான். நம்பிச் சென்ற ஆண்டவன் காப்பாற்றவில்லையே. அப்படி யானால் ஆண்டவன் என்று ஒருவன் இருப்பானா? என்று இவ்வளவுக்குப் பிறகும் அறிவு கொண்டு சிந்திக்க மறுக்கிறார்களே என்பதே நமது கவலை. ஏப்.14 ஆம் தேதி - ஒரு நாள் மட்டும் வந்துள்ள செய்திகள் இவை:

**7 அய்யப்ப பக்தர்கள் பலி**

கேரளாவில் 100 அடி பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்த விபத்தில், கோயில்பட்டி பகுதியைச் சார்ந்த 7 அய்யப்ப பக்தர்கள் உடல் நசுங்கி இறந்தனர். மேலும் 32 பேர் படுகாயமடைந்து சிகிச்சை பெறுகின்றனர். கோவில்பட்டி சுற்று வட்டாரத்தைச் சார்ந்த 55 அய்யப்ப பக்தர்கள், தனிப் பேருந்தில் - அய்யப்பன் கோயிலில் நடக்கும் 'விசு' பண்டிகையில் கலந்து கொள்ள சென்றபோது, காஞ்சிரப்பள்ளி என்ற இடத்தில் மலை மீது பேருந்து சென்றபோது 100 அடி பள்ளத்தில் உருண்டு விழுந்தது.

**6 பக்தர்கள் பலி**

திருச்சியில் கார் - பேருந்து மோதிக் கொண்டதில் வேளாங்கன்னி மாதா கோயி லுக்கு சாமி கும்பிடச் சென்ற ஒரே குடும்பத்தைச் சார்ந்த பக்தர்கள் 6 பேர் நசுங்கி இறந்தனர். இவர்கள் கேரள மாநிலம் கோட்டயத்தைச் சார்ந்தவர்கள். பேபி (வயது 4) அவரது மனைவி ரீட்டா (வயது 45), மகள் ஸ்டெபி (வயது 12), மகன்கள் அல்போன்ஸ்ராஜ் (வயது 7), அலுசியா (வயது 4), பேபியின் தாயார் மேரி (வயது 72), பேபியின் அக்காள் லீமா (வயது 53). இப்படி ஒரே குடும்பத்தைச் சார்ந்த அத்தனை பேரும் பலியாகியுள்ள நெஞ்சு பதறும் அவலம் நடந்து முடிந்துள்ளது. 'மேரி மாதா' வுடைய சக்தியை நம்பி வந்தவர்களுக்கு நேர்ந்த விபரீதம் இது!

**மாடசாமி பக்தர்கள் பலி**

நெல்லையை அடுத்த சீவலப்பேரியில், சுடலை மாடசாமி கோயிலில் சித்திரைத் திருவிழா நடந்தது. கோயில் திருவிழாவில் தரிசனம் முடித்து விட்டு, தாமிரபரணி ஆற்றில் முழுக்குப் போட வேண்டும் என்பது அய்தீகம். அதன்படி, தரிசனத்தை முடித்துவிட்டு, ஆற்றில் நீராடும்போது, கேரளாவைச் சார்ந்த விஜயன், சீனிவாசன் இருவரும் ஆற்றில் மூழ்கி இறந்து விட்டனர்.

**'கோபுர கலசம்'**

பக்தர்கள் தங்களைக் காப்பாற்ற கடவுளிடம் முறையிடுவதற்கு கோயிலுக்கு வருகிறார்கள். ஆனால், தங்கள் கோயிலையே காப்பாற்ற முடியாத நிலையில் 'கடவுள்கள்' இருக் கிறார்கள். கடலூர் மாவட்டம் வேப்பூரையடுத்த சேப்பாக்கம் கிராமத்தில் - கங்கை அம்மன், அங்காளம்மன், சென்னியம்மன், சிவன் ஆகிய நான்கு கோயில்களிலிருந்தும் ஒரே நேரத்தில் கோபுர கலசம், கோயில் மணிகள், கோயில் உண்டியல், தீபாராதனை தட்டு, கோயில் சொம்பு திருட்டுப் போய்விட்டன. 80 ஆண்டு காலம் பழமை வாய்ந்த கோயில் இது.

ஒவ்வொரு நாளும் இத்தகைய செய்திகள் வந்து கொண்டிருக்கும்போது, இன்னும் சாமி சக்தியை நம்பிக் கொண்டு, தங்கள் அறிவையும், வாழ்க்கையையும் தொலைத்துக் கொண்டிருப்பதா?

– சிந்தியுங்கள், பக்தர்களே!

## 27 சதவீத ஒதுக்கீடு: நடப்பு ஆண்டில் அமுலாகுமா?

# அர்ஜுன் சிங் உறுதி காட்டுகிறார்!

***சன்னலைத் திறந்துவிட்டு, கதவை மூடியது போல் – உச்சநீதிமன்றம் 27 சதவீத இடஒதுக் கீட்டில் தீர்ப்பளித்திருந்தாலும், மத்திய அமைச்சர் அர்ஜுன் சிங், நடப்பு ஆண்டிலே செயல்படுத்த முனைப்பு காட்டி வருவது, நம்பிக்கைத் தருகிறது.***

நீண்ட நெடிய போராட்டம் மகத்தான வெற்றி பெற்றுள்ளது. உயர்கல்வியில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இடஒதுக்கீட்டை வலியுறுத்தி நாடாளு மன்றத்தில் 2006 ஆம் ஆண்டில் நிறைவேற்றிய 93 ஆவது சட்டத்திருத்தமான 15(5)வது பிரிவு செல்லத் தக்கதே என்று உச்சநீதிமன்றத்தில் 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வு கடந்த ஏப். 10 ஆம் தேதி தீர்ப்பளித்துள்ளது. தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன் தலைமையில் நீதிபதிகள் அர்ஜித் பசாயத், சி.கே. தாக்கர், ஆர்.வி.ரவீந்திரன், தல்வீர் பண்டாரி ஆகிய நீதிபதிகள் அடங்கிய இருக்கை தீர்ப்பை வழங்கியுள்ளது. தலைமை நீதிபதி, முதன்மைத் தீர்ப்பை எழுதியுள்ளார். நீதிபதி தாக்கர் சார்பிலும், தன் சார்பிலும் நீதிபதி பசாயத் ஒரு தீர்ப்பை எழுதினார். நீதிபதி ரவீந்திரன், நீதிபதி பண்டாரி ஆகியோர் தனித்தனியாக தீர்ப்புகளை எழுதினர். அனைவருமே 93வது சட்டத் திருத்தம் செல்லும் என்ற ஒரே கருத்தை தெரிவித்துள்ளனர். அதே நேரத்தில், பிற்படுத்தப்பட்டோரில் 'கிரிமிலேயர்' என்ற பொருளாதார வரம்பை நிர்ணயிக்க வேண்டும் என்று, உச்சநீதிமன்றம் தீர்ப்பு கூறி விட்டது. அரசு உதவி பெறாத தனியார் கல்லூரிகள் பற்றி நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் எதுவும் குறிப்பிடவில்லை. அதற்குக் காரணம், தனியார் கல்லூரி நிர்வாகம் சார்பில் சட்டத் திருத்தத்தை எதிர்த்து, எவரும் மனுதாக்கல் செய்யவில்லை என்று கூறப்படுகிறது. ஆனால், நீதிபதி பண்டாரி தான் எழுதிய தீர்ப்பில் அரசு உதவி பெறாத தனியார் நிறுவனங்களுக்கு இந்தத் தீர்ப்பு பொருந்தாது என்று குறிப்பிட்டுள்ளார். 1931 ஆம் ஆண்டு எடுத்த சாதிவாரிக் கணக்கீட்டை இப்போது அப்படியே ஏற்கக் கூடாது என்று சட்டத்தை எதிர்த்து வழக்கு தொடர்ந்தவர்கள் கூறிய வாதத்தை தலைமை நீதிபதி ஏற்கவில்லை. "இந்த அரசியல் சட்டத் திருத்தம் அரசியலமைப்புக்கு எதிரானது அல்ல. அரசு கல்வி நிறுவனங்கள் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களைப் பொறுத்த வரை இது பொருந்தும். இதில் மைனாரிட்டி நிறுவனங்களுக்கு அரசே விலக்களித்துள்ளது ஏற்கத் தக்கதே" என்று தலைமை நீதிபதி கூறியுள்ளார்.

"சமத்துவத்தைக் காக்கவும், நீட்டிக்கவும் இடஒதுக்கீடு ஒரு கருவியாகப் பயன்படுகிறது. இதன் மூலம் புறக்கணிக்கப்பட்ட மக்கள் சிவில் வாழ்க்கையில் முன்னணிக்கு கொண்டு வரப்படுகிறார்கள். சமத்துவத்தை மறுக்கும் தடைகளை அகற்றிட ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கடமை அரசுக்கு உண்டு. பல்வேறு சமூகத்தினரும் அரசியல் சட்டம் வழங்கியுள்ள சுதந்திரங்களை அனுபவிக்கவும், பயன்களைப் பகிர்ந்து கொள்ளவும் உரிய வாய்ப்புகளை அரசு ஏற்படுத்தித் தர வேண்டியிருக்கிறது" என்று தலைமை நீதிபதி தீர்ப்பில் கூறியுள்ளார். மேலும் தனது தீர்ப்பில், "கல்வியைப் பொறுத்தவரை, அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கும், தகவல் மற்றும் சிந்தனைகளை வழங்குவதற்குமான நடவடிக்கைகளை ஊக்கப்படுத்த வேண்டும். இந்தியாவில் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த மக்களுக்கும், இவை கிடைக்கப் பெற வேண்டும். நவீன உலகம் - பல்வேறு நெருக்கடிகளையும், கொந்தளிப்பான பிரச்சினைகளையும் எதிர்நோக்கியுள்ள நிலையில், கல்வி என்பது கட்டாயத் தேவை; அந்தக் கல்வி, ஏதோ செல்வாக்குப் பெற்ற சிலரின் நலன்களுக்காக மட்டும், மடங்களில் வைத்து மூடப்பட்டுவிடக் கூடாது. எந்த ஆதரவும் இன்றி, பல்கலைக்கழகக் கல்வி பற்றி கனவு மட்டுமே காணக் கூடிய, உயர்கல்வி வாய்ப்புகளே கிடைக்கப் பெற்றிடாதவர்களுக்கு, இடஒதுக்கீடு கூடுதல் பயனைத் தருகிறது" - என்று தலைமை நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். இவ்வளவையும் கூறிய நீதிபதி, பிற்படுத்தப்பட்டோரில் கிரிமிலேயர் பிரிவினரை நீக்கிட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

4 ஆம் பக்கம்

## அய்.அய்.டி. பார்ப்பன ஆதிக்கத்தை வீதிக்குக் கொண்டு வந்த 'பெரியார் திராவிடர் கழகம்'

உயர்கல்வி நிறுவனமான அய்.அய்.டி.யின் பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்து, தாழ்த்தப் பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமை கோரி, சென்னை நகர வீதிகளில் களம் இறங்கி போராடி யது - முதன்முதலாக பெரியார் திராவிடர் கழகம் தான். 1996 இல் திராவிடர் கழகத்திலிருந்து விலகி, பெரியார் திராவிடர் கழகம் உருவானது. 1997 இல் தொடங்கி சுமார் 6 ஆண்டுகாலம் இந்தப் போராட்டத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுத்தது. அப்போது தான், அய்.அய்.டி.யில் தாண்டவமாடிய பார்ப்பன ஆதிக்கம், மக்கள் மன்றத்துக்கு தெரிய வந்தது. ஆர்ப்பாட்டம், மறியல், முற்றுகை, கருத்தரங்கம், வீதி முனைக் கூட்டங்கள் என்று பல்வேறு வடிவங்களில் தலித் அமைப்புகளை ஒருங்கிணைத்து, பிறகு, சமூகநீதி அமைப்புகளையும் ஒன்று திரட்டி, 'சமூக நீதி மீட்பு இயக்கத்தை' உருவாக்கி, பெரியார் திராவிடர் கழகம் வீதிகளில் இறங்கி போராடியக் காலங்களில், ஏடுகள் கட்டுப்பாடாக செய்திகளை இருட்டடிப்பு செய்தன. பல தேசிய - பார்ப்பன நாளேடுகள், அப் போது அய்.அய்.டி. இயக்குனராக இருந்த பார்ப்பன சர்வாதிகாரி நடராசன் என்பவரின் வலைப் பின்னலில் சிக்கியிருந்தன.

பார்ப்பனர் நடத்திய ஏடுகள் மட்டுமல்ல; தமிழர்கள் நடத்திய ஏடுகளும்கூட - அய்.அய்.டி.க்கு எதிராக செய்தி வெளியிடத் தயங்கி வாயை மூடிக் கொண்டே இருந்தன. திராவிடர் கழகம் நடத்தும் 'விடுதலை' நாளேடு கூட பெரியார் திராவிடர் கழகம் 6 ஆண்டுகாலம் நடத்திய இந்த போராட்டங்கள் பற்றி - ஒருவரி செய்தி கூட வெளியிடா மல், மவுனம் சாதித்தது. பெரியார் திராவிடர்கழகம் நடத்து கிறது என்பதாலேயே, திருவாளர் வீரமணியும், அவரது விடுதலை ஏடும், பார்ப்பன ஆதிக்கத்துக்கு எதிரான போராட்ட செய்திகளை வெளியிட வில்லை. இவர்கள் எல்லாம் சமூகநீதிக் காவலர்கள் என்ற பட்டத்தைப் பெறுவதற்கு, போட்டிப் போட்டுக் கொண்டு நிற்கிறார்கள்.

'எக்னாமிக் அண்ட் பொலிட் டிக்கல் வீக்லி' என்ற இந்தியாவின் முதன்மையான பொருளாதார சமுதாய ஆய்வு இதழில், அதன் தலையங்கப் பகுதியில் பேராசிரியர் எம்.எஸ்.எஸ். பாண்டியன் தான் சென்னை அய்.அய்.டி.யில் நடக்கும் பார்ப்பன ஆதிக்கத்தையும், கழகத்தின் போராட்டத்தையும் பதிவு செய்து, இந்தியா முழுதும் பிரச்சினையைக் கொண்டுசென்றார். அதை நன்றியுடன் இப்போது நினைத்துப் பார்க்கிறோம். பத்திரிகையாளர் பகவான்சிங்,

2 ஆம் பக்கம்

தலையங்கம்

## கலைஞரின் பாராட்டத்தக்க நடவடிக்கை !

பார்ப்பனரல்லாதார் இயக்கமான நீதிக் கட்சித் தலைவர்கள் பெயர்களானாலும், பார்ப்பனரல்லாதார் உரிமைக்கு குரல் கொடுத்த தலைவர்கள் பெயர்களானாலும், அதைப் பார்ப்பனர்கள் உச்சரிக்கவே தயங்குகிறார்கள். இதுவே அவர்களின் பாரம்பரியக் குணமாகி விட்டது. மவுண்ட்பேட்டன் பெயரில் இருந்த 'மவுண்ட்' சாலையை 'அண்ணாசாலை' என்று அண்ணா மறைவையொட்டி, பெயர் சூட்டினார், அன்று முதல்வராக இருந்த கலைஞர். 'இந்து', 'துக்ளக்' பார்ப்பன ஏடுகள் நீண்டகாலம் வரை 'அண்ணாசாலை' என்று ஏற்கவே மறுத்து வந்தன.

சென்னையில் கத்திபாரா சந்திப்பில் மேம்பாலத்தைத் திறந்து வைத்துப் பேசிய முதல்வர் கலைஞர், பார்ப்பனர்களின் இந்த சுயரூபத்தை படம் பிடித்துக் காட்டினார்.

அண்ணா மேம்பாலத்தை இன்னமும் 'ஜெமினி மேம்பாலம்' என்று குறிப்பிடுவதையும், நீதிக்கட்சித் தலைவர் தியாகராயர் பெயரில் அமைந்துள்ள நகரை 'தி.நகர்' என்றே திட்டமிட்டு அழைப்பதையும், சுயமரியாதை வீரர் சவுந்தர பாண்டியனார் பெயரில் அமைந்துள்ள பகுதியை 'பாண்டி பஜார்' ஆக திரித்ததையும், கலைஞர் சுட்டிக் காட்டினார். இப்படித்தான் கலைஞர் கருணாநிதி நகரையும், கே.கே.நகர் ஆக்கினார்கள். கூறியதோடு மட்டுமல்ல, முதல்வர் கலைஞர் – செயலிலும் செய்து காட்டியிருக்கிறார்.

தியாகராயர் நகரில் 'பாண்டி பசார் காவல் நிலையம்' என்ற பெயரில் இருந்த காவல் நிலைய பெயர்ப் பலகையை 'சவுந்தர பாண்டியனார் அங்காடி காவல்நிலையம்' என்றும், அதே போல் கலைஞர் கருணாநிதி நகரில் உள்ள காவல் நிலையத்தை, அதே பெயரிலும் மாற்றி நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஏதோ, சிறிய செய்தியாக இது தோன்றலாம். ஆனால், பார்ப்பனர்களின் மேலாதிக்கம் நிலை நிறுத்தப் பட்டதே, இத்தகைய சிறிய சிறிய திரிபுகளைத் திணித்துத் தான் என்பது – வரலாறு தெரிந்தவர்களுக்கு புரியும்.

கலைஞரின் தமிழின உணர்வுப் பணியை பார்ப்பனரல்லாதார் உணர்வு படைத்த அனைவருமே பாராட்டி, வரவேற்பார்கள் என்பதில் அய்யமில்லை!

# ஆரவாரமற்ற ஓர் அமைதிப் புரட்சி!

தமிழர் பண்பாட்டில் - கலாச்சாரப் புரட்சி ஒன்று அமைதியாக நடந்து முடிந்திருக்கிறது. தமிழர்களின் புத்தாண்டு - தை முதல் நாள் தானே தவிர, சித்திரைப் பிறப்பு அல்ல என்பதே அந்தப் புரட்சி! நீண்ட நெடுங்காலமாக தமிழர்கள் வலியுறுத்தி வந்த இந்த கோரிக்கையை ஏற்று, சட்டமன்றத்தின் தீர்மானமாக்கி, வரலாற்றுப் பெருமை மிகு சாதனையை கலைஞர் ஆட்சி செய்து முடித்துள்ளது. வேதப் பண்டிதப் பார்ப்பனர்களும், பார்ப்பன சக்திகளும், இதை எதிர்த்து முணுமுணுப்பு காட்டினாலும், பெரும்பான்மைத் தமிழர்கள், இந்த பண்பாட்டுப் புரட்சியை அமைதியாக வழிமொழிந்துள்ளனர். குமுதம், ஆனந்த விகடன், கல்கி போன்ற பத்திரிகைகள் - பொதுவாக சித்திரைப் பிறப்பான தமிழ்ப் புத்தாண்டுக்கு, "புதிய தொடர்கதைகளைத் தொடங்குவதும், மலர்களை வெளியிடுவதும் வழக்கம். அத்தகைய ஆரவாரங்கள், இப்போது அடங்கிப் போயிருக்கிறது. தலைவர்களின் வழக்கமான தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துச் செய்திகளும் வெளிவரவில்லை. இரண்டே இரண்டு 'தலைவர்கள்' மட்டும் பார்ப்பன உணர்வை வெளிப்படுத்தியுள்ளனர். ஒருவர் பார்ப்பன ஜெயலலிதா. இவரது அ.இ.அ.தி.மு.க. சட்டமன்றத்தில் தை முதல் நாள் தான் தமிழ்ப் புத்தாண்டு என்ற தீர்மானத்தை ஆதரித்திருந்தாலும்கூட, பார்ப்பனர் ஜெயலலிதா தனது பார்ப்பன அடையாளத்தை விடுவதற்கு தயாராக இல்லை. 'சர்வஜித்து' வருடம் மறைந்து, 'சர்வதாரி' வருடம் தொடங்கும் சித்திரை தமிழ்ப் புத்தாண்டு நாளுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார். தமிழ்ப் புத்தாண்டு என்ற பெயரில் 60 வடமொழிப் பெயர்களை ஆண்டுகளுக்கு சூட்டி, தமிழனை இழிவு செய்து வந்த 'பார்ப்பனத் திணிப்பை' வரலாற்றின் போக்குகள் மாற்றினாலும், தான் மாறுவதற்கு தயாராக இல்லை என்கிறார் பார்ப்பன ஜெயலலிதா.

பார்ப்பன ஜெயலலிதா வழியில் - அவரது கைபிடித்து நடந்து வரும், 'தென்பாண்டி சிங்கம்' ஒருவரும் - பார்ப்பன ஊதுகுழலாக மாறி, தனது தமிழின துரோகத்தை வெட்கமின்றி வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறார். அவர்தான், 'போர்வாள்' வைகோ! பார்ப்பன சர்வாதிகாரி - பொடா ராணி ஜெயலலிதாவை அரியணையில் ஏற்றி வைத்து, நாட்டையே 'வேதபுரியாக்கி'ட வேண்டும் என்பதில் வீறு கொண்டு நிற்கும் வைகோ, பார்ப்பன சர்வாதிகாரியை மகிழ்விக்க 'சர்வதாரி' யை, கைகூப்பி வரவேற்று வாழ்த்து கூறியிருக்கிறார். வெட்கக்கேடு!

அது மட்டுமல்ல, ஜெயலலிதா மலையாள புத்தாண்டுக்கும், புதிதாக வாழ்த்து தெரிவிக்கிறார். "மீனராசியிலிருந்து மேஷராசிக்கு சூரியன் மாறும் நாளான விஷு திருநாளை மேளதாளம் முழங்க உற்சாகத்துடன் கொண்டாடும் மலையாள பெருமக்களுக்கு வாழ்த்துகள்" என்று கூறியுள்ளார்.

தமிழகத்தைப் போல் கேரளாவில் பார்ப்பனிய கலாச்சாரத்தை விட்டுவிடவில்லை என்பதை வேதனையுடன் இடித்துக் காட்டுவதே இந்த வாழ்த்துச் செய்தியின் நோக்கம்.

குஜராத் மோடியின் தமிழக அரசியல் வாரிசாக வலம்வரத் துடிக்கும் பார்ப்பன ஜெயலலிதா - போராட்ட முறைகளிலும் பார்ப்பனிய சடங்குகளை நுழைக்கத் தொடங்கிவிட்டார். 'சித்ரா பவுர்ணமி' அன்று இருளில் மூழ்க வைத்துள்ள தி.மு.க. ஆட்சியை விரட்டுவதற்கு வீடுகளில் விளக்கேற்றி, 'இருண்ட வாழ்வில் ஒளியேற்ற வாருங்கள் அம்மா' என்று வேண்டுதல் நடத்துமாறு அறிக்கை விடுத்துள்ளார். வேத பார்ப்பன சடங்குகளை போராட்டத்துடன் இணைக்கும் பச்சைப் பார்ப்பன வெறியின் வெளிப்பாடு இது! 'சன்' தொலைக்காட்சி "தமிழ்ப் புத்தாண்டை" அந்தப் பெயரிட்டு அழைக்கத் தயங்கி, 'சன்' தொலைக்காட்சி தொடங்கி 15-வது ஆண்டு என்ற பெயரில் சிறப்பு நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியது. சித்திரை முதல் நாளில் கோயில்களில் பஞ்சாங்கம் படிக்கும் ஒரு வழக்கத்தை பார்ப்பனர்கள் உருவாக்கியிருந்தனர். அப்படி பஞ்சாங்கம் எதுவும் சித்திரை முதல் நாளில் படிக்கக் கூடாது என்று அறநிலையத்துறைக்கு உட்பட்ட கோயில்களுக்கு தமிழக அரசு வாய்மொழி உத்தரவிட்டுள்ளதாக - பார்ப்பன பா.ஜ.க தலைவர் இல.கணேசன் சீறிப் பாய்கிறார். உண்மையில், அப்படி ஒரு வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்குமானால், அது மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட வேண்டியதுதான்!

பஞ்சாங்கத்தின் காலக்கணக்கிலேயே 24 நாட்கள் இடைவெளி வந்துவிட்டது என்று, விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். இதை கடந்த 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழில் வெளியிட்டிருந்தோம். காலக்கணக்கீட்டில் ஒவ்வொரு நொடிக்கும் பெரும் தாக்கங்கள் உண்டு என்று கூறிக் கொண்டு, விநாடி, நாழிகைகளின் துல்லியம் தவறாமல் சோதிடர்களிடம் நேரம் குறித்து பக்தர்கள் செயல்படுகிறார்கள். ஒரு வினாடி தாமதமானாலே நல்ல நேரம் போய்விட்டது என்று துடிக்கிறார்கள். ஆனால், இந்த பஞ்சாங்கம் ஒருநொடி, இரண்டு நொடி அல்ல; ஒரு நிமிடம் இரு நிமிடமல்ல; 24 நாட்கள் இடைவெளியில் ஓடிக் கொண்டிருக்கும் வெட்கக் கேட்டில், பஞ்சாங்கத்தைப் படிக்கத் தடைபோடுவதற்கு பா.ஜ.க. கணேசன்கள் துள்ளிக் குதிக்கிறார்கள். அட அறிவு சிகரங்களே! இந்த பஞ்சாங்கத்தை தீ வைத்து எரிக்க வேண்டாமா?

எத்தனை காலம்தான், இந்த மக்களை ஏமாற்றப் போகிறீர்கள்?

## நேபாளத்தில் மாவோயிஸ்டுகளின் மகத்தான புரட்சி

நேபாளத்தில் – இந்து மன்னர் ஆட்சி என்ற பெயரால் நடந்த பார்ப்பன ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து, ஆயுதம் தாங்கியப் போராட்டத்தின் வழியாக, மக்கள் புரட்சியை உருவாக்கி, மக்கள் பேராதரவுடன் மக்களாட்சியை நிறுவியுள்ள மாவோ புரட்சியாளர்களை வாழ்த்துகிறோம்; பாராட்டுகிறோம். உலகின் மகத்தான புரட்சியாளர்கள் வரிசையில் நேபாள மாவோயிஸ்டுகள் இணைந்து விட்டனர்.

## கழக சார்பில் அம்பேத்கர் சிலைக்கு மாலை

சென்னை வேப்பேரி நேரு விளையாட்டு அரங்கில் உள்ள அம்பேத்கர் சிலைக்கும், சென்னை சேத்துப்பட்டில் உள்ள அம்பேத்கர் சிலைக்கும் ஏப்.14 ஆம் தேதி காலை கழகத்தின் சார்பில் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். கழகத் தோழர்கள் எ.கேசவன், இரா. உமாபதி, தமிழ்ச்செல்வன் உட்பட 20–க்கும் மேற்பட்ட தோழர்கள் உடனிருந்தனர்.

முதல் பக்கத் தொடர்ச்சி

'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகையில் அய்.அய்.டி. பிரச்சினையைத் துணிவுடன் எழுதியதற்காக, அய்.அய்.டி. பார்ப்பன நிர்வாகம், அந்த ஏட்டின் மீது வழக்கு தொடர, பகவான்சிங் வழக்கை உறுதியாக எதிர் கொண்டார்.

அய்.அய்.டி.யில் சேர்வதற்காக தலித் மாணவர்களுக்கு மட்டும் அய்.அய்.டி. நிர்வாகம் நடத்தி வரும் தயாரிப்புப் பயிற்சியில், பார்ப்பனப் பேராசிரியர் ஒருவரால் பழிவாங்கப்பட்ட பழங்குடி மாணவிக்காக, பெரியார் திராவிடர் கழகம் அய்.அய்.டி. நுழை வாயிலிலேயே கூட்டம் நடத்தி கண்டனக் குரல் எழுப்பியதோடு, சென்னை நகரையே குலுக்கும் சுவரொட்டி இயக்கத்தை நடத்தியது. கழகத்தின் போராட்டத்தால் அய்.அய்.டி. வரலாற்றிலேயே முதன் முதலாக தோல்வியுற்றதாக அறிவிக்கப்பட்ட அந்தப் பழங்குடி சமுதாயத்தைச் சார்ந்த பெண்ணுக்கு, மீண்டும் அனுமதி கிடைத்தது. கழகத்தின் தொடர் போராட்டத்தால் அண்ணாபல்கலைக் கழகத்திலிருந்து, ஒரு தலித் பேராசிரியரை அழைத்து, அய்.அய்.டி துணைப் பதிவாளராக்க வேண்டிய கட்டாயத்துக்கு அய்.அய்.டி பார்ப்பன நிர்வாகம் தள்ளப்பட்டது. மத்திய அரசின் தாழ்த்தப்பட்டோர் நலவாரியத்துக்கும், தாழ்த்தப்பட்டோர் நலனுக்கான நாடாளுமன்றக் குழுவின் கவனத்துக்கும், பிரச்சினைகளை உடனுக்குடன் கொண்டு சென்று, அந்த அமைப்புகளின் உறுப்பினர்கள், அய்.அய்.டி.யில் நேரடி விசாரணைகளை மேற்கொள்ள வைத்தது பெரியார் திராவிடர் கழகம்.

ஆங்கிலத்திலும் – தமிழிலும் நான்கு நூல்களை வெளியிட்டு, அய்.அய்.டி. பார்ப்பன வல்லாதிக்கத்தையும், மறுக்கப்படுகிற சமூகநீதியையும், வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது. அந்த வெளியீடுகளில் அடங்கியிருந்த தகவல்களின் அடிப்படையில் நாடாளுமன்றத்திலே அய்.அய்.டி.க்கு எதிராக, உறுப்பினர்கள் குரல் கொடுத்தனர். தமிழ்நாட்டில் சமூகநீதி உணர்வுள்ள பல பேராசிரியர்கள் கழகத்துக்கு துணை நின்றனர். மிரண்டு போன அய்.அய்.டி. பார்ப்பன நிர்வாகம், சுப்ரமணிய சாமிகளைப் பிடித்து, பெரியார் திராவிடர் கழகத்துக்கு எதிராக, அறிக்கைளை விடச் செய்தது. கழகப் போராட்ட செய்திகளை வெளியிட்ட ஏடுகள் மீது அய்.அய்.டி. நிர்வாகம் வழக்குகளைப் போட்டு மிரட்டியது.

பெரியார் திராவிடர் கழகத்தின் கருஞ்சட்டை படையினர் – இதற்காகப் பலமுறை சிறை சென்றனர். கழகம் கொடுத்த கடும் விலைக்கு, இப்போது மகிழ்ச்சியான பரிசு கிடைத்திருக்கிறது.

சமூகநீதியை மறுத்த பார்ப்பனக் கோட்டையின் கதவுகள் –இப்போது உடைக்கப்பட்டிருக்கிறது. சமூகநீதி சரித்திரத்தில், இது ஒரு மைல் கல்!

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. © 2451 2857

## மத்திய அமைச்சர் ஆ. இராசா ஆய்வுரை

# பெரியாரும்–அம்பேத்கரும் உருவாக்கிய புரட்சி!

*22.2.2008 அன்று திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பெரியார் உயராய்வு மையமும், மகளிரியல் துறையும் இணைந்து நடத்திய 'பெரியார் அம்பேத்கர் : இன்றைய பொருத்தப்பாடு' என்ற தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவில் பங்கேற்று மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்ப துறை அமைச்சர் ஆ. இராசா ஆற்றிய உரை:*

'பெரியார் அம்பேத்கர் : இன்றைய பொருத்தப் பாடு' என்னும் தலைப்பில் ஒரு பல்கலைக்கழகத்தில் ஒரு கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டு, அந்தக் கருத்தரங்கத்தில் இவ்வளவு எண்ணிக்கையில் மாணவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்பது இன்றைய சூழலில் நான் எதிர்பார்க்காத ஒன்று என்ற காரணத்தினால் நான் உங்களை முதலில் வணங்குகிறேன்.

பெரியாரும், அம்பேத்கரும் பொருத்திப் பார்ப் பதற்கு அப்பால் அவர்கள் இன்றைக்குத் தேவையா என்ற வினா இந்தத் தலைமுறைக்கு முன்னால் வைக்கப்படுகிற இந்தச் சூழலில் இவ்வளவு எண்ணிக்கையில் மாணவர்கள் ஆர்வத்தோடு வந்திருக்கிறீர்களே என்கின்ற அந்த உணர்வை நான் பெறுகிறபோது பெரியார் அம்பேத்கர் இன்னும் சாகவில்லை. அவர்கள் உயிரோடு இருக்கிறார்கள், இருக்கப் போகிறார்கள் என்கிற நம்பிக்கையை நான் பெறுகிறேன்.

நம்முடைய சிந்தனையாளர், பெரியவர் எஸ்.வி. ராஜதுரை அவர்கள் இந்த சமூகத்திற்கு வழங்கி யிருக்கிற அருங்கொடைகளாக பல்வேறு நூல்களை உங்களில் பலர் அறிந்திருக்கக் கூடும். நான் அனைத்து நூல்களையும் கற்றவன். அவருடைய வாழ்நாளில் இந்த சமூகம் பெரியார் அம்பேத்கர் கொள்கைகளை யும் தாங்கிப் பிடித்து ஒரு அங்குலமாவது உயர்ந்து விடாதா என்கிற ஏக்கத்தில் தன் வாழ்நாட்களை வத்திக்குச்சிகளாகக் கிழித்துப் போட்டுக் கொண் டிருக்கக்கூடிய ஒரு சிந்தனையாளர். எனவே அவர் கூட்டியிருக்கின்ற இந்த நிகழ்ச்சியில் பல்வேறு பணிகளுக்கிடையே உங்களை சந்திக்கின்ற இந்த நல்ல வாய்ப்பை வழங்கிய பல்கலைக்கழகத்திற்கு, பதி வாளர் உள்ளிட்ட அனைத்துத் துறைப் பெருமக்களுக் கும் என்னுடைய நன்றியறிதலை முதலில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பெரியார் அம்பேத்கர் என்னும் இரு தலைவர் களைப் பற்றிப் பேசுகிறபோது இந்தத் தலைவர்களுக் கிடையே வந்து போகிற சில தலைவர்களைப் பற்றிய விமர்சனம் - மத்தியிலே அமைச்சராக இருக்கிற நான் இந்தத் தலைப்பிலே பேச இருக்கிற காரணத்தினால் - சில தலைவர்களைப்பற்றி அங்கொன்றும் இங் கொன்றுமாக இந்த இருபெரும் தலைவர்கள் சொல்லியதைச் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் மாணவர்களோ, பத்திரிகையாளர் களோ அதைத் தனித்தனியாக அப்படியே பார்க்க வேண்டுமே தவிர அதையே அந்தத் தலைவர்களுக்கு இருக்கிற அடையாளமாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதை என்னுடைய உரையின் தொடக்கத் திலேயே நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். ஏனென்றால், ஒரு அரசியல் கூட்டத்தில் பெரியாரைப் பேசுவதென்பது வேறு, ஒரு சமூகக் கூட்டத்தில் அல்லது ஒரு பொருளாதாரக் கூட்டத்தில் அம்பேத் கருடைய தத்துவங்களை எடுத்து வைப்பதென்பது வேறு. ஆனால் பல்கலைக்கழக மாணவர்களுக்கு முன்னால் இருபெரும் தலைவர்களைக் கொண்டு வந்து நிறுத்துவது என்பது, அதுவும் ஒரு அரசியல்வாதியாகிய நான் கொண்டு வந்து நிறுத்துவது என்பது வேறு. என்னையும் அறியாமல் இரயில் தடம் புரண்டுவிடுமோ என்ற பயத்தோடு நான் இங்கு நின்று கொண்டிருக்கிறேன். ஏனென்றால் இந்த இரண்டு இரயில்களும் - பெரியார் அம்பேத்கர் என்கின்ற இரண்டு இரயில்களும் - ஒரு கட்டுக்குள் அடங்காத இரயில்கள் எந்த தண்டவாளத்திற்கும் கட்டுப்படாத இரண்டு இரயில்கள். எந்தத் தண்டவாளத்திற்கும் கட்டுப்படாத இரண்டு இரயில்களை தண்டவாளத்தோடு கூடிய ஒரு போக்கான ஒரு போக்கிற்கு கொண்டு வந்து நிறுத்துவது என்பது அறிவார்ந்த வேலையா, ஆபத்தான வேலையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் உத்தரவை எஸ்.வி. ராஜதுரை அய்யா அவர்கள் பிறப்பித்திருக்கிற காரணத்தினால் நான் முயற்சி செய்கிறேன், அவ்வளவு தான்.



ஆங்கிலத்திலே சொல்லுவார்கள், 'comparision is always odious' ஒருவரை இன்னொருவரோடு ஒப்பிடுவது என்பது அவரை புண்படுத்துகிற மாதிரி இருக்கும். நீ இராஜாவைப் போல் இல்லை என்று சொன்னால் அல்லது இராஜா 31 வயதில் 32 வயதில் அமைச்சர் ஆகிவிட்டான். நீ ஏன் அமைச்சர் ஆகவில்லை என்று யாராவது என்னுடைய வகுப்புத் தோழரைப் பார்த்து, அவருடைய தாய் தந்தையர் கேட்டால் கேட்பதற்கு இனிப்பாக இருக்கும். ஆனால் அந்த ஒப்புமை odious புண்படுத்தக் கூடியதாக இருக்கும். ஆனால் comparision of values is something productive என்று சொல்லுவார்கள். இரண்டு மனிதர்களின் மதிப்பீடுகளை தனித்தனியாக ஒப்பீடு செய்வதென்பது வேறு, நேரடியாக ஒரு மனிதனை இன்னொரு மனிதனோடு சேர்த்துப் பார்ப்பது என்பது வேறு.

எனவே, அந்தக் கோணத்தில் பெரியாரையும், அம்பேத்கரையும் நாம் இங்கே பார்க்க இருக்கிறோம். இதிலே பெரியாரும் அம்பேத்கரும் முரண்பட்டு நிற்கக் கூடிய இடங்கள் கூட உண்டு. பெரியாரையும், அம்பேத்கரையும் முரண்படுத்திப் பார்த்தவர்கள்கூட சில இடங்களில் பெரியாரையும், அம்பேத்கரையும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். பெரியாரைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், கண்ணதாசன் அர்த்தமுள்ள இந்து மதத்தை எழுதியவர். தன் வாழ்நாளெல்லாம் கண்ணன்தான் தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று தன்னுடைய கடைசி நாட்களைக் கழித்தவர். இந்து மதத்தைத் தூக்கி நிறுத்தியவர். ஆனால், வாழ்நாளெல்லாம் இந்து மதம் வேண்டாமென்று சொன்ன பெரியார் மரித்த போது அந்தக் கண்ணதாசன் பாடினான் -

*சரித்திரம் மறைந்த செய்தி தலைவனின் மரணச்செய்தி*
*விரித்ததோர் புத்தகத்தின் வீழ்ச்சியைக் கூறும் செய்தி*
*நரித்தனம் கலங்கச்செய்த நாயகன் மரணச் செய்தி*
*மரித்தது பெரியாரல்ல, மாபெரும் தமிழர் வாழ்க்கை*

என்று முடித்தான். கடவுளை நம்புகிற, இந்து மதத்தைப் போற்றுகிற கண்ணதாசனேகூட பெரியார் மரித்துப் போனதற்குப் பிறகு மரித்தது பெரியாரல்ல, மாபெரும் தமிழர் வாழ்க்கை என்று சொன்னார் என்றால் கண்ணதாசன் இருவிதமான கோணங் களைப் பெற்றிருக்கிறார் என்றாலும், பெரியாரை மதிக்கிறார் என்று பொருள். அதைப்போல அம்பேத் கரை விமர்சனம் செய்தவர்கள் இருக்கிறார்கள். கடவுள் பெயரை நாக்கிலும், கட்டாரியைக் கக்கத்திலும் வைத்திருக்கிற ஒரு ஆளுக்குப் பெயர் மகாத்மா என்றால் a person who is keeping god's name in his tongue, keeping knife in his armpit is deserved for appellation of Mahatma, then Mohandass Karamsanth Gandhi is also a Mahatma என்று அம்பேத்கர் சொல்கிறார். கடவுள் பெயரை நாக்கிலும், கட்டாரியைக் கக்கத்திலும் வைத்திருக்கிற ஒரு ஆளுக்குப் பெயர் மகாத்மா என்றால் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியும், மகாத்மாதான் என்று கொடூரமான விமர்சனத்தை முன்வைத்தவர் அம்பேத்கர். ஆனால், அந்த அம்பேத்கரைப் பார்த்து நீங்கள் ஒரு மிகப் பெரிய தேசபக்தர் உங்களைப் போன்ற ஒரு தேசியவாதியை நான் பார்த்ததில்லை என்று காந்தி சொல்லுகிறார். அதனால் தான் சொல்லுகிறேன் comparison is sometimes odious ஒப்பீடு என்பது சில நேரங்களில் புண்படுத்தும். எனவே, அவரை அவராகவே பார்ப்பது என்ற அந்தக் கோணத்தில்தான் இந்தக் கருத்தரங்கில் நான் கலந்து கொள்ள விரும்புகிறேன். இந்த இரண்டு தலைவர் களும் தன்னைப் பற்றி பரிசோதனை செய்து கொண் டவர்கள். சுயவிளம்புகை செய்து கொண்டவர்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பெரியார் -

"நான் யார்? ஈ.வெ.இராமசாமி என்கிற நான், திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகத்திலே இருக்கிற பிற சமுதாயத்தைப் போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்குகிற தொண்டினை மேற்போட்டுக் கொண்டிருக்கிறேன். இந்தத் தொண்டினைச் செய்வதற்கு எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ, ஆனால், இதை செய்வதற்கு வேறு யாரும் முன்வராத காரணத்தினால் நான் செய்து கொண்டிருக்கிறேன்."

- இது பெரியார் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிற சுயபிரகடனம். அதைப்போல் அம்பேத்கர் ஒரு இடத்தில் சொல்லுகிறார் :

I am not a worshipper of idol - நான் சிலைகளை, கடவுளை வணங்குகிறவன் அல்ல. I believe destruction of idols - நான் கடவுளை சிலைகளை அழிப்பதை ஒரு தொழிலாக நம்பிக்கையாகக் கொண்டிருக் கிறவன்.

என்று சொல்லிவிட்டு மீண்டும் சொல்கிறார்...

I hate Gandhi and his philosophy of Hinduism நான் காந்தியையும் அவர் சார்ந்திருக்கிற இந்துயிசத்தையும் வெறுக்கிறேன். ஏனென்றால் காந்தியைப் பாராட்டுவது என்பது வேறு, தேசத்திற்கு நலன் செய்வது என்பது வேறு, வேறு வேறு மட்டுமல்ல, சில நேரங்களில் இவை எதிரும் புதிருமாக இருக்கின்றன என்று அவர் சொல்கிறார். I love India அதனால்தான் சொல்லுகிறார் worship of Gandhi and loving this nation are two distinct and different things and sometimes afford equally opposite என்று குறிப்பிடுகிறார். ஆக இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில்தான் இரண்டு தலைவர்களும் இந்த மண்ணில் வாழ்ந்திருக்கிறார்கள். இன்னொன்று இன்றைக்குப் பெரியார் யார், அம்பேத்கர் யார் என்கின்ற சிந்தனையில் இந்த இரண்டு தளத்திலும் சில வேறுபாடுகளைக் கொண்டு வருகிறார்கள். பெரியாருக்குள்ளும், அம்பேத்கருக்குள்ளும் போகிற போது நாம் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். இரண்டு பேருக்கும் ஓர்மை உண்டு. இருவரும் ஒன்றாகச் சிந்தித்த இடங்கள் உண்டு. இரண்டு பேருக்கும் வேறுபாடுகளும் இருக்கிறது. நாம் மறுதலித்துவிட முடியாது.

பெரியார் எந்தப் பற்றுக்கும் ஆட்படாதவர், எந்தப் பற்றுக்கும் ஆட்படாத தன்னை திராவிட சித்தாந்தம் என்ற சட்டத்துக்குள் வைத்துக் கொண்டது உண்மைதான். ஆனால், அம்பேத்கருக்கு அந்தக் கட்டாயம் தேவைப்படவில்லை. இன்னும் நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொள்வதற்கு தந்தைப் பெரியாருக்கு இரண்டு மூன்று காரணங்கள் இருந்திருக்கிறது. ஆனால், இந்தி தான் இந்த மண்ணிற்கு ஆட்சி மொழியாக, பொது மொழியாக இருக்க வேண்டுமென்று பதிவு செய்தவர் அம்பேத்கர். வேறுபாடுதான் புரிந்து கொள்ள வேண்டும்.

I need a strong centre என்று சொன்னவர் அம்பேத்கர். மிக முக்கியமான இடத்திலிருக்கிற மய்ய அரசுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என்று சொன்னவர் அம்பேத்கர். ஆனால் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்று போராடிய இயக்கங் களுக்கு தந்தையாக இருந்தவர் தந்தை பெரியார். இவையெல்லாம் இருக்கின்ற வேறுபாடுகள், ஒரு காலகட்டத்தில் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று கேட்டவர் தந்தை பெரியார். அப்படிப்பட்ட பிரிவினையை அம்பேத்கர் ஒரு நாளும் ஏற்றுக் கொண்டதில்லை. ஏனென்றால், அந்தத் தளத்தில் அவர் இயங்குகிறபோது, தலித் விடுதலை என்று வருகிறபோது அல்லது மானிட விடுதலை என்று வருகிறபோது இந்த பூகோள அமைப்பு என்கின்ற எல்லைக் கோடுகளைத் தாண்டி, தான் எந்த இனம் என்கின்ற அடையாளத்தைத் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது. திராவிட இன அடையாளத்தைக் கூட தந்தை பெரியார் ஒரு பெருமைமிக்க அடையாளமாகச் சொல்லிக் கொள்ளவில்லை.

(தொடரும்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# சன்னலைத் திறந்து கதவை மூடிய உச்சநீதிமன்றம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

பட்டியல் இனப் பிரிவினருக்கு கிரிமிலேயர் பொருந்தாது என்று நீதிமன்றம் தெளிவாக்கியுள்ளது. அரசு கொண்டு வந்த சட்டத்திருத்தத்துக்கு காலவரம்பு நிர்ணயிக்கப்படவில்லை என்று, வழக்கு தொடுத்தவர் கூறியிருந்த வாதத்தை தலைமை நீதிபதி ஏற்கவில்லை. ஆனாலும், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலை அய்ந்தாண்டுக்கு ஒரு முறை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும், பிற்படுத்தப்பட்டோர் யார் என்பதை நிர்ணயிப்பதற்கு மத்திய அரசு அதிக அதிகாரங்களை எடுத்துக் கொள்ளக் கூடாது என்றும், உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

தீர்ப்பு பற்றி தலையங்கம் தீட்டிய ‘இந்து’ நாளேடு - ‘கிரிமிலேயரை’ வரவேற்றுள்ளதோடு இன்னும் மாநில அரசுகள் ‘கிரிமிலேயரை’ வரையறை செய்யாமல் இருப்பதாக குறை கூறியுள்ளது. ‘கிரிமிலேயரை’ தமிழ் நாட்டில் வரவேற்றுள்ள மற்றொரு அரசியல் கட்சி ‘மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி’ ஆகும். அதே நேரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ‘கிரிமிலேயர்’ எனும் வரம்பை முழுமையாக நீக்க வேண்டும் என்று தெளிவாகத் தெரிவித்துள்ளது.

27 சதவீத இடஒதுக்கீட்டில் - இந்தியாவிலேயே மிகவும் கவலை எடுத்துக் கொண்ட ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதல்வர் கலைஞர், 27 சதவீத இடஒதுக்கீட்டை உறுதிப்படுத்தி சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி தீர்மானம் கொண்டு வந்தார். தீர்மானம் ஒரு மனதாக நிறைவேறியது. தீர்ப்பு வந்தவுடன் ‘கிரிமிலேயர்’ என்ற கிருமிலேயரை நீக்கும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மத்திய மனித வளத் துறை அமைச்சர் அர்ஜுன் சிங்கிற்கு, முதல்வர் கலைஞர் கடிதம் எழுதியுள்ளார். ‘வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு’ என்று தீர்ப்பை வரவேற்றுள்ள மத்திய அமைச்சர் அர்ஜுன் சிங், கிரிமிலேயர் பற்றி அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் என்று கூறியுள்ளார்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யும் எண்ணம் அரசுக்கு இல்லை என்றும், இந்த ஆண்டு முதலே 27 சதவீத இடஒதுக்கீட்டை அமுல்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அர்ஜுன்சிங் அறிவித்துள்ளார். மீண்டும் நீதிமன்றத்திடம் போய் சிக்கிக் கொண்டு கிடைத்த வாய்ப்புகளையும் பறி கொடுத்திட வேண்டாம் என்ற முடிவை சமூகநீதி உணர்வோடு சிந்தித்து, அர்ஜுன் சிங் மேற்கொண்டுள்ளார். கிரிமிலேயர் என்ற அளவு கோலால், நியாயமாக உரிமை கிடைக்க வேண்டிய பிற்படுத்தப்பட்டோர் எவரும் பாதித்து விடாமல் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி கூறிய அர்ஜுன் சிங், தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கு, ‘கிரிமிலேயர்’ தடை ஏதுமில்லை என்பதை தெளிவுபடுத்தியுள்ளார். “இது அமுல்படுத்தக்கூடிய தீர்ப்புதான்; தீர்ப்பில் சாதகமான அம்சங்களே அதிகம்” என்றும் அர்ஜுன் சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இடஒதுக்கீட்டுக்கு எதிர்ப்பான சக்திகள் காங்கிரசுக்குள்ளேயே இருக்கின்றன என்று கூறிய அர்ஜுன் சிங், அவர்கள்தான், தீர்ப்பு பற்றிய குழப்பமான கருத்தை தெரிவித்து, இடஒதுக்கீட்டை அமுல்படுத்தாமல் தடுக்க முயலுகின்றனர் என்றும் கூறியுள்ளார்.

## குழப்பங்கள்

நீதிமன்றத் தீர்ப்பில் குழப்பங்களும் அடங்கி உள்ளன. நீதிபதி பண்டாரி அளித்த தீர்ப்பில் பட்டம் பெற்றவர் அனைவருமே ‘கிரிமிலேயர்’ அளவுகோலில் வந்து விடுவார்கள் என்றும், எனவே பட்டமேற்படிப்பான அய்.அய்.எம்.மில், பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு வழங்கக் கூடாது என்றும் கூறியுள்ளார். நீதிபதி பசாயத் எழுதிய தீர்ப்பில், கல்வி - சமூக ரீதியாக பிற்படுத்தப்பட்டவர்களை நிர்ணயிப்பதில், பட்டப்படிப்பையும் அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்று கூறியிருப்பதன் மூலம் பட்டப்படிப்பு படித்தவர்களை கிரிமிலேயர் பட்டியலில் சேர்க்க முடியாது என்று சட்ட நிபுணர்கள் கூறுகிறார்கள். எனவே பட்டம் பெற்றவர்கள் - பிற்படுத்தப்பட்டோராக முடியாது என்ற பண்டாரியின் தீர்ப்பு மைனாரிட்டி தீர்ப்பாகி விடுகிறது. இந்த நிலையில், அய்.அய்.எம். நிறுவனங்களுக்கு, இடஒதுக்கீடு தொடர்பாக கடிதம் எழுதப் போவதாக அர்ஜுன்சிங் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

தலைமை நீதிபதி எழுதியுள்ள தீர்ப்பில், “இடஒதுக்கீட்டின் சலுகையை ஒரு குறிப்பிட்ட சமூகம் மிக அதிக அளவுக்கு பயன்படுத்துமானால், அந்த சமூகம் பட்டியலிலிருந்து நீக்குவதற்கு நீதிமன்றம் தலையிட உரிமையுண்டு” என்று கூறியுள்ளார்.

அதே நேரத்தில் இடஒதுக்கீடு இல்லாத நிலையில் பார்ப்பனர் என்ற குறிப்பிட்ட சமூகம், இது வரை, பெரும்பாலான இடங்களைப் பிடித்துக் கொண்டிருப்பது பற்றி, எவரும் வாய் திறக்கவில்லை.

நரசிம்மராவ் பிரதமராக இருந்த போது முன்னேறிய சாதியினரில் பொருளாதார ரீதியாகப் பின்தங்கியோருக்கு 10 சதவீத இடஒதுக்கீடு தருவது பற்றி, உச்சநீதிமன்றத்தில் ஆலோசனை கேட்டார். அப்போது இடஒதுக்கீட்டில் பொருளாதார அளவுகோலை அடிப்படையாகக் கொள்ள முடியாது என்று உச்சநீதி மன்றம் கூறிவிட்டது. அதே உச்சநீதி மன்றம் தான் இப்போது கிரிமிலேயரை வற்புறுத்தியுள்ளது.

கிரிமிலேயர் பட்டியலில் வருவது யார்?

- ஜனாதிபதி, துணை ஜனாதிபதி, உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்ற நீதிபதிகள், மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் மற்றும் மாநில அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், தலைமை தேர்தல் ஆணையர், இந்திய கணக்கு தணிக்கை அலுவலக தலைவர், அரசியல் சட்டப்படி உருவாக்கப்பட்ட பதவியில் இருப்பவர்களின் மகன், மகள்கள்.
- பெற்றோர் இருவரும் அரசு பணியில் உயர் அதிகாரிகளாக (கிளாஸ் 1) இருப்பவர்களின் மகன் மற்றும் மகள், பெற்றோரில் யாராவது ஒருவர் உயர் அதிகாரியாக இருப்பவரின் மகன் மற்றும் மகள், பெற்றோர் இருவரும் உயர் அதிகாரியாக இருந்து, அவர்களில் யாராவது ஒருவர் இறந்து இருந்தால் அல்லது நிரந்தரமாக செயல்பட முடியாத நிலை ஏற்பட்டு இருந்தால், அவர்களின் மகன் மற்றும் மகள், பெற்றோரில் யாராவது ஒருவர் உயர் அதிகாரியாக இருந்து, இறந்து இருந்தால், அல்லது நிரந்தரமாக செயல்பட முடியாத நிலை ஏற்பட்டு இருந்தால், அந்த பாதிப்பு ஏற்படுவதற்கு முன் குறைந்தது ஐந்து ஆண்டுகள் வெளிநாட்டு அமைப்பில் வேலை செய்து இருந்தால், அவர்களின் மகன் மற்றும் மகள். (பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண், உயர் அதிகாரியை திருமணம் செய்து, அரசு வேலைக்கு விண்ணப்பிக்கும் நிலையில் இருப்பவர் கிரிமிலேயர் பட்டியலில் இடம் பெற மாட்டார்.)
- மத்திய அரசு அல்லது மாநில அரசில் (பி) பிரிவு ஊழியராக பணியாற்றுபவரின் மகன் மற்றும் மகள்.
- பொதுத் துறை நிறுவனங்கள், வங்கிகள், இன்சூரன்ஸ் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்களில் உயர் பொறுப்புகளில் இருப்பவர்களின் மகன் மற்றும் மகள்.
- முப்படைகள் மற்றும் துணை ராணுவ படையில் உயர் பொறுப்பில் இருப்பவர்களின் மகன் மற்றும் மகள்.
- டாக்டர், வழக்கறிஞர், சார்டர்டு அக்கவுன்டன்ட், வருமானவரி ஆலோசகர், பல் மருத்துவர், பொறியாளர், கட்டட கலை நிபுணர், கம்ப்யூட்டர் நிபுணர், திரைப்பட கலைஞர்கள், எழுத்தாளர், விளையாட்டு வீரர் உள்ளிட்ட பல முக்கிய துறைகளில் இருப்பவர்களின் மகன் மற்றும் மகள்.
- வர்த்தகர், தொழிலதிபர், தொழிற்சாலை உரிமையாளர் ஆகியோரின் மகன் மற்றும் மகள்.
- சொத்துக்கள் வைத்து இருப்பவர்களின் மகன் மற்றும் மகள்.

- ஆகியோரைக் கிரிமிலேயர் என்கிறது அரசு அறிக்கை!

இது தவிர, வருடத்துக்கு இரண்டரை லட்சம் வருமானம் வரக் கூடியவர்கள் பிற்படுத்தப்பட்டோராக முடியாது. அவர்கள் கிரிமிலேயர் பிரிவில் வந்துவிடுகிறார்கள். அதாவது, மாதத்துக்கு 20,800 ரூபாய் வருமானம் வந்தாலே, பிற்படுத்தப்பட்டோர் ஆக முடியாது. ஆனால், அய்.அய்.எம்.மில் சேருவதற்கு ஒரு மாணவன் கட்ட வேண்டிய தொகை ரூ.10 லட்சத்துக்கும் அதிகம். அண்மையில் கட்டணங்கள் மேலும் கூடுதலாக்கப்பட்டுள்ளது. அப்படியானால், கூலி வேலை செய்யும் பிற்படுத்தப்பட்டோர் தான் - அந்தப் பட்டியலில் சலுகை பெற முடியும் என்றால், இவ்வளவு லட்சம் பணம் செலவழித்து, அவர்களால் உயர் கல்விக்கு வர முடியுமா?

சமூக கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்டோர் என்ற நிலை சமூக வரலாற்றுச் சூழலோடு இணைந்துள்ள பிரச்சினை. இதை, பொருளாதாரத்தோடு முடிச்சுப் போடுவது அபத்தம்!

ஜன்னல் கதவைத் திறந்துவிட்டு, வாயில் கதவை மூடிவிட்டது உச்சநீதி மன்றம். ‘கிரிமிலேயர்’ முறையை மாற்றியமைக்காவிடில் பிற்படுத்தப்பட்டோருக்கு இதில் எந்தப் பயனும் இல்லை. ✦

## சிந்தனை வட்டத்தில் ‘கொசாவா’ விடுதலை விளக்கவுரை

சென்னையில் கழகத்தின் சார்பில் சிந்தனை வட்டம் மாதம் தோறும் நிகழும் கூட்டம் ஏப்.6 ஆம் தேதி மாலை 6 மணியளவில் கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. அன்பு தனசேகர் வரவேற்று உரையாற்றினார். பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் ‘கொசாவா’ விடுதலை பற்றி சிறப்புரையாற்றினார். அய்.நா.வின் தேசிய சுயநிர்ணய உரிமை கோட்பாட்டின் கீழ் ‘கொசாவா’ செய்துள்ள விடுதலை பிரகடனம் - சிறீலங்காவை அச்சுறுத்துவதற்கான அரசியல் காரணங்களை விரிவாக எடுத்துரைத்தோடு, கொசாவா விடுதலைப் போராட்ட வரலாற்றையும், சர்வதேச தாக்கங்களையும் விளக்கி ஒரு மணி நேரம் உரையாற்றினார். தோழர்கள் எழுப்பிய வினாக்களுக்கு விளக்கமளித்தார். சிந்தனை வட்ட அமைப்பாளர் ராஜன் நன்றி கூற 8 மணியளவில் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

**வந்த கடிதம்**

### இந்தியா மதச்சார்பற்ற நாடா? இந்து மதம் சார்ந்த நாடா?

கடந்த 19.3.08 ‘தினகரன்’ (நெல்லைப் பதிப்பு) இதழில் ஒரு செய்தி பார்த்தேன். கர்நாடக மாநிலம் பெல்காம் கோட்டையில் உள்ள ராணுவ மய்யத்திற்கு இந்துமதக் கருத்துக்களைக் கற்பித்துக் கொடுக்கும் ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டி ராணுவம் அறிவிப்பு விடுத்துள்ளது. மதக் கருத்துக்களை கற்றுக் கொடுக்க விண்ணப்பிப்பவர்கள் இந்துமதத்தைச் சேர்ந்தவராக மட்டும் இருக்க வேண்டும். ஏதாவது ஒரு பட்டப்படிப்புடன் சமஸ்கிருதத்தில் மத்யமா நிலை அல்லது இந்தியில் பூசண் நிலை படிப்பில் தேர்ச்சி அடைந்திருக்க வேண்டும் என்பது நிபந்தனைகள். நாட்டைக் காக்கும் ராணுவ வீரர்களுக்கு மதச்சார்பற்ற நாடு என்று கூறிக் கொள்ளும் நாட்டில், மதம் பற்றிய கருத்து பயிற்சி தேவையா?


இந்திய நாட்டரசு இராணுவ வீரர்களுக்கு இந்துமதக் கருத்து பயிற்சி அளிப்பதன் மூலம் ஒற்றுமையாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் இராணுவ வீரர்களை மத ரீதியாக பிளவுபடுத்தி இராணுவத்திற்குள் மதச் சண்டைகள் ஏற்பட முயற்சி செய்கின்றதா? மேலும் ராணுவ வீரர்கள் ஓய்வு பெற்று சொந்த ஊர்களுக்கு திரும்பச் சென்ற பின்பு அவர்கள் அங்கு இந்து தீவிரவாதிகளாக வாழ வேண்டும் என்று இந்திய நாட்டு ராணுவம் விரும்புகின்றதா?

**– வே. பால்ராசு, தூத்துக்குடி**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP    Posted on : 17th April 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | www.puratchiperiyarmuzhakkam.com | திருவள்ளுவர் ஆண்டு 2039 | ஏப்ரல் 24, 2008 | புரட்சி 7 | முழக்கம் 17 | விலை : ரூ.2.50


### பெரியார் சிலைக்கு தடைபோட்ட மாயாவதிக்கு எதிராக

# உ.பி. தலித் அமைப்பு போர்க்கொடி !

உ.பி.யில் முதல்வர் மாயாவதி - பார்ப்பன மிரட்டலுக்கு பணிந்து, பெரியார் படம், சிலைகளை உ.பி.யில் எந்தப் பகுதியிலும் வைப்பதற்கு தடை விதித்துள்ளார். கடந்த ஏப்.15 ஆம் தேதி ஆக்ராவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் மாயாவதி இதை அறிவித்துள்ளார். ஒரு காலத்தில் - பார்ப்பன எதிர்ப்புகளை மீறி பெரியார் மேளாவை நடத்திய அதே மாயாவதி, இப்போது பதவி அதிகாரத்தில் தன்னை தக்க வைத்துக் கொள்ள பார்ப்பனீயத்துக்கு பணிந்து நிற்கும் அவலத்தை நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது.

மாயாவதியின் இந்தப் பார்ப்பனியத்தை எதிர்த்து, மற்றொரு செல்வாக்குள்ள தலித் அமைப்பான நீதிக் கட்சி போர்க்கொடி உயர்த்தியுள்ளது. நீதிக்கட்சியின் தலைவரான உதித்ராஜ், நடந்த சம்பவங்களை விளக்கி கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணனுக்கு கடிதம் எழுதியுள்ளதோடு தொலைபேசியிலும் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

நீதிக்கட்சி அலுவலக வாயிலில் வைக்கப்பட்டிருந்த பெரியார் படத்தை, பா.ஜ.க.வினர் சிதைத்து அவமதித்தனர். எதிர்த்துப் போராடிய நீதிக்கட்சித் தலைவர் உதித்ராஜன் மற்றும் அவரது அமைப்பைச் சார்ந்த தோழர்கள் போலீஸ் காவலில் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டுள்ளனர். ஆனாலும் பெரியார் கொள்கை களுக்காக தனது போராட்டம் தொடரும் என்று உதித்ராஜ் கூறியுள்ளதோடு, தனக்கும், தங்களது கட்சியினருக்கும் உயிருக்கு உத்திரவாதமில்லாத சூழல் - உ.பி.யில் மாயாவதி ஆட்சியில் தோன்றியுள்ளது என்று கூறி, உரிய பாதுகாப்பைக் கோரியுள்ளார். தமிழக முதல்வர் கலைஞர், விடுதலை சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன், தி.க. தலைவர் கி.வீரமணி ஆகியோருக்கும் அவர் கடிதங்களை எழுதியுள்ளார். இது பற்றி - ஜூனியர் விகடன் வார ஏடு - மேலும் சில செய்திகளை வெளியிட்டுள்ளது. அதன் விவரம்:

மாயாவதி பெரும்பான்மை பலத்துடன் கடந்த வருடம் முதல்வரான பின் சென்ற நவம்பர் மாதம் மீண்டும் பெரியார் சிலை விவகாரம் உ.பி. சட்ட சபையில் எழுந்தது. இதற்கு பதிலளித்துப் பேசிய முதல்வர் மாயாவதி, ‘பெரியார் சிலை உ.பி.யில் வைக்கப் படாது’ என அறிவிக்க, இதை எதிர்த்து, ‘இந்திய நீதிக்கட்சி’யின் தலைவர் உதித்ராஜ் போராட ஆரம்பித்தார். மத்திய வருவாய்த் துறையில் இணை கமிஷனராகப் பணியாற்றி வந்த உதித்ராஜ், ஏற்கெனவே பகுஜன் சமாஜ் கட்சியில் இருந்தவர். பிறகு, இந்திய நீதிக்கட்சி ஆரம்பித்தார்.

முதல் கட்டமாகப் பெரியார் சிலையை உ.பி. முழுவதும் வைக்கப் போவதாக அறிவித்து, அதற்காக மாயாவதியிடமே இடம் தர அனுமதி கேட்டுக் கடிதம் எழுதினார் உதித்ராஜ். ஆனால், அதிகாரிகள் இடம் கொடுக்க மறுத்துவிட்டனர்.

இந்நிலையில், கடந்த 14 ஆம் தேதி அம்பேத்கர் பிறந்த தினத்தன்று உ.பி. சட்டசபைக் கட்டடம் முன்பு இருக்கும் தாரூல் ஷஃபா மைதானத்தில் பெரியார் சிலை நிறுவ வலியுறுத்திப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்தார் உதித்ராஜ். இதற்கும் போலீஸ் அனுமதிக்கவில்லை. இருந்தாலும் சுமார் இருநூறு பேர் உதித்ராஜ் தலைமையில் பெரியாரின் படங்கள் தாங்கிய தட்டிகளுடன் ஊர்வலமாகக் கிளம்பினர். இவர்களை வழியிலேயே போலீசார் தடுத்து நிறுத்த, அங்கேயே தனது போராட்ட உரையைப் பேசி முடித்தார்.

உதித்ராஜின் போராட்டத்துக்கு எதிராக உடனே பா.ஜ.க., இளைஞர் பிரிவான பாரதிய யுவ மோர்ச்சாவினர் கிளம்பிவிட்டனர். லக்னோவில் இருக்கும் இந்திய நீதிக்கட்சியின் அலுவலகத்தின் முன்பு குவிந்த அவர்கள், அங்கு ஒட்டப்பட்டிருந்த பெரியாரின் படங்களைக் கிழித்து எறிந்ததோடு, அலுவலகத்தையும் கல்வீசித் தாக்கினர். அங்கு பாதுகாப்புக்காக நின்று கொண்டிருந்த லக்னோவின் துணை கலெக்டர் அனில் பாதக்கிடம் இந்திய நீதிக்கட்சியினர், ‘தாக்குதல் நடத்தும் பா.ஜ.க.வினர் மீது நடவடிக்கை எடுங்கள்’ என வலியுறுத்த, துணை கலெக்டருக்கும் அவர்களுக்கும் வாக்குவாதம் வெடித்தது.

ஒரு கட்டத்தில் இந்திய நீதிக் கட்சியை சேர்ந்த ஒரு பெண், கோபத்துடன் துணை கலெக்டர் அனிலின் கன்னத்தில் அறைந்துவிட, டென்ஷனான போலீசார் கூட்டத்தின் மீது கண்மூடித்தனமாகத் தடியடி நடத்த ஆரம்பித்தனர். இதில் காயமடைந்த உதித்ராஜ், அவருடைய தொண்டர்கள் மற்றும் முன்னாள் உ.பி. மாநில அமைச்சர் ஆர்.டி.கௌதம் உட்பட நூறு பேர் கைது செய்யப்பட்டு, பிறகு ஜாமீனில் விடப்பட்டனர்.

சிகிச்சையில் இருந்த உதித்ராஜை சந்தித்தோம். “துணை கலெக்டரை எங்கள் கட்சியினர் அறைந்தது தவறுதான். ஆனால், பெரியார் படத்தின் மீது கரியைப் பூசி அவமதித்த பா.ஜ.க.வினர் செய்ததும் தவறல்லவா? அவர்களைக் கண்டிக்காமல் அமைதியாகப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த எங்கள் மீது தாக்குதல் நடத்துகிறார்கள். இதற்காக முன்கூட்டியே என்னுடைய பாதுகாப்பு காவலரையும் மிரட்டி, விரட்டி விட்டனர். இதற்கெல்லாம் இடம் கொடுத்தது முதல்வர் மாயாவதி தான். எப்படி ராமரை தெய்வம் என வணங்க உரிமை உள்ளதோ - அதுபோல், பெரியார் போன்ற சமூக நீதித் தலைவர்களை போற்றுவதற்கு எங்களுக்கு முழு சுதந்திரம் உண்டு” எனக் கொந்தளித்தார்.

பா.ஜ.க.,வின் உத்தரப்பிரதேச மாநிலத் தலைவர் ரமாபதிராம் திரிபாதியிடம் பேசினோம். “இந்து கலாசாரம் மற்றும் நம்பிக்கைகளுக்கு எதிரானவர் பெரியார் என்பதால் அவரை எதிர்க்கிறோம். அவருடைய பெயரால் அரசியலுக்கு வந்தவர்களும் தங்கள் பாதைகளை மாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. எங்களுடைய வற்புறுத்தலின் பேரில்தான் பெரியாருக்கு சிலை வைக்கமாட்டோம் என மாயாவதி சட்டசபையில் கூறினார். மாநில அரசு இந்த விஷயத்தில் உறுதியோடு இருக்குமா என்ற சந்தேகம் எழவேதான் இந்திய நீதிக்கட்சியினரின் போராட்டத்துக்கு எதிராக நாங்களும் களம் இறங்க வேண்டியதாகிவிட்டது” என்றார்.-

இவ்வாறு ‘ஜூனியர் விகடன்’ செய்தி வெளியிட்டுள்ளது. ✦

# ஈழப் பிரச்சினையில் புதிய திருப்பம்

தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கொலை நடவடிக்கைகளுக்காகச் சிங்கள அரசு மீது “கண்டனம் செய்தல்” மற்றும் “எச்சரிக்கைகளை விடுத்தல்” என்ற நிலையிலிருந்து அதன் மீது “தண்டனைகள் வழங்கல்” என்ற ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளில் உலக நாடுகள் படிப்படியாக இறங்கியுள்ளன.

நீண்ட பல ஆண்டுகளாகச் சிங்கள அரசிற்குப் பொருளாதார - இராணுவ உதவிகளையும், அரசியல் ஆதரவுகளையும் வழங்கி வந்த மேலை நாடுகள் தற்போது சிங்கள அரசைக் கைவிட்டு ஒதுங்கும் அரசியல் போக்கை மேற்கொண்டு வருகின்றன. உலக அரசுகள் மற்றும் மனித உரிமை அமைப்புகளின் தொடர்ச்சியான கண்டனங்களைப் புறந்தள்ளிவிட்டு தமிழினக் கொலையைத் தீவிரப்படுத்தியுள்ள சிங்கள அரசை ஒரு “பயங்கரவாத அரசாக” முத்திரை குத்தும் ஆரம்ப முயற்சிகளில் அனைத்துலக சமூகம் இறங்கியுள்ளது.

**சர்வதேச சமூகத்தின் பார்வை மாறுகிறது**

எதிர்வரும் ஜூன் மாதத்தில் சிங்கள அரசுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் எடுக்க முயற்சிக்கும் ஒரு நடவடிக்கை, சிங்கள அரசு மீதான ஒரு பொருளாதாரத் தடை போன்றே காணப்படுகிறது. சிங்கள அரசுக்கு ஆண்டுதோறும் சுமார் இருபதினாயிரம் கோடி ரூபாய் வருமானம், ஒரு இலட்சம் சிங்களவருக்கு வேலை வாய்ப்பையும் கொடுக்கும் ஆடை ஏற்றுமதிக்கான சலுகைகள் நிறுத்தப் போவதாக ஐரோப்பிய யூனியன் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மனித உரிமை விவகாரங்களில் முன்னேற்றம் காட்டப்படாவிட்டால் மேற்குறித்த “பொருண்மியத் தடை” நடவடிக்கைக்கு சிங்கள அரசு உள்ளாகும் என்று ஐரோப்பிய ஒன்றியம் நிபந்தனை விதித்துள்ளது. ஜெர்மனி மற்றும் நெதர்லாந்து, கனடா போன்ற நாடுகள் சிங்கள அரசுக்கான பொருளாதார உதவிகளைப் பெருமளவு கட்டுப்படுத்தியுள்ளன.

அமெரிக்கா - பிரிட்டன் போன்ற நாடுகள் சிங்கள அரசுக்கான போராயுத வழங்கல்களை ஏற்கனவே நிறுத்தியுள்ளன. சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் உலக நாடுகளில் முதன்மை இடம் வகிக்கும் ஜப்பான் தனது உதவிகளை மட்டுப்படுத்தியுள்ளது. சிங்கள அரசின் மனித உரிமை மீறல்களை - இனக்கொலையை அம்பலப்படுத்தி அண்மையில் அமெரிக்க அரசு ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தது. அமெரிக்காவின் இந்த அறிக்கை சிங்களப் பேரினவாதிகளை சீற்றத்திற்குள்ளாக்கியது.

சிறிலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவரை தனது அலுவலகத்திற்கு அழைத்த சிங்கள வெளி விவகார அமைச்சர் அமெரிக்கா அறிக்கையின் விவரங்கள் பொய்யானவை என்று வலியுறுத்தினார். அந்த அறிக்கையை அமெரிக்க அரசு விலக்கிக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்கத் தூதுவரைக் கேட்டுக் கொண்டார்.

சந்திப்பை முடித்துக் கொண்டு தூதரகம் திரும்பிய அமெரிக்கத் தூதுவர், பத்திரிகையாளர்களைஅழைத்தார். சிங்கள அரசின் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து, அமெரிக்க அரசு வெளியிட்ட அறிக்கை சரியானது தான் என்று வலியுறுத்திச் சிங்கள அரசின் முகத்தில் கரி பூசிவிட்டார்.

4 ஆம் பக்கம்

தலையங்கம்

## தடைச் சுவர்

தமிழ்நாட்டு கிராமங்களில் தலைவிரித்தாடும் இரட்டைக் குவளை தீண்டாமைக்கு எதிராக பெரியார் திராவிடர் கழகம் களமிறங்கிப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில், மேலும் அதிர்ச்சியான தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. மதுரைக்கு அருகே உள்ள உத்தபுரம் எனும் கிராமத்தில், தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் பகுதிக்குள் நுழைந்து விடாமல், உள்ளூர் ஆதிக்கசாதியினர் 600 மீட்டர் நீளத்துக்கு தடுப்புச் சுவர் எழுப்பி வைத்துள்ளனர். 1990 ஆம் ஆண்டு இந்தத் தடுப்புச் சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது. இதில் கடந்த 10 நாட்களாக கம்பிகளின் வழியாக மின்சாரத்தையும் பாய்ச்சி வைத்துள்ளார்கள். ஆங்கில நாளேடு ஒன்று இந்த செய்தியை அம்பலப்படுத்தியவுடன், தமிழக அரசு விரைந்து, கம்பிவேலிகளை அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பாலஸ்தீனர்களை தனிமைப்படுத்திட இஸ்ரேல் - பாலஸ்தினர் வாழும் பகுதியைச் சுற்றி தடுப்புச் சுவர் எழுப்பியதை உலகமே கண்டிக்கிறது. இது நியாயமாக கண்டிக்கப்பட வேண்டியதுதான். ஆனால், 'சுதந்திரம்' பெற்றதாகக் கூறப்படும் ஒரு நாட்டில், ஒரு சமூகத்தைத் தனியே பிரித்து வைக்க சுவர் எழுப்பப்பட்டு, அந்த சுவர், சாதித் திமிருடன், 18 ஆண்டுகள் அசைக்கப்படாமல் நின்று கொண்டிருக்கிறது என்றால் - அது வெட்கக்கேடு அல்லவா? தமிழ்நாடு கிராமங்களில் 'இரட்டைக் குவளைகளே' கிடையாது என்ற, பொய்அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கும் காவல்துறையின் மனித உரிமைப் பிரிவு, இதற்கு என்ன பதிலைத் தரப் போகிறது?

மதுரையை மய்யமாகக் கொண்டு செயல்படும் ஒரு தொண்டு நிறுவனம், கிராமங்களில் ஆய்வுகள் நடத்தி 47 வடிவங்களில், இன்றும் தீண்டாமை பின்பற்றப்பட்டு வருவதை வெளிக் கொண்டு வந்துள்ளது. பொதுக் கிணறுகளில், பொதுக் குழாய்களில் நீர் எடுக்கத் தடை; பிணங்களை – சாதி ஆதிக்கவாதிகள் வாழும் வீதி வழியாக கொண்டு செல்லத் தடை; கோயிலில் நுழைய தடை; இரட்டைக் குவளை என்று பல்வேறு வடிவங்களில் தீண்டாமை நிலவிக் கொண்டிருக்கிறது. சில கிராமங்களில் தலித் மக்களின் சேரிப் பகுதிக்கு தபால்களே போய்ச் சேருவது இல்லை என்று அந்த ஆய்வு கூறுகிறது.

செங்கல்லாலும், சிமெண்டாலும் உருவாக்கப்பட்ட இந்தத் தடைச் சுவரை உடைப்பது மட்டும் போதாது. மனித உள்ளத்தில் காலம் காலமாக பார்ப்பன வர்ணாஸ்ரமம் கட்டி எழுப்பி வைத்திருக்கும் சாதியம் என்ற தடைச் சுவரை தகர்த்து உடைக்க வேண்டும்.

ஒவ்வொரு பார்ப்பான் முதுகிலும் தொங்கிக் கொண்டிருக்கும் பூணூல்கூட தடைச் சுவரின் பிரதிபலிப்புதான். பார்ப்பனரல்லாத ஒவ்வொருவரையும் 'நீ சூத்திரன் இழிமகன்' என்பதை அந்த பூணூல் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. ஒதுங்கிக் கொண்டும், ஒதுக்கி வைத்துக் கொண்டும் வாழும் பார்ப்பனிய கலாச்சாரத்தை பார்ப்பான் மட்டுமல்ல, சாதி ஆதிக்க வாதிகளும் தங்களது உள்ளத்தில் ஏந்தியிருப்பதைத் தான், இந்தத் தடுப்புச் சுவர்கள் உணர்த்துகின்றன. வானத்துக்கும், காற்றுக்கும் இவர்களால் தடுப்புச் சுவரை ஏற்படுத்திவிட முடியுமா? தலித் மக்கள் வாழும் நாட்டில் தங்களுக்கு வாழ்க்கையே இல்லை என்று, இவர்கள், நாட்டை விட்டு வெளியேறி விடுவார்களா? அட, மானமும், அறிவையும் இழந்து நிற்கும், சாதி வெறியர்களே, நீங்கள் எல்லாம் மனிதர்களாகத்தான் இருக்கிறீர்களா என்று கேட்கத் தோன்றுகிறது. காட்டு விலங்குகள் ஊருக்குள் நுழைந்து விடாமல் தடுக்க மின்சார வேலி போட்டு வந்த நிலை மாறி, சக மனிதனுக்கு எதிராக வேலிகளையும், சுவர்களையும் எழுப்பிடும் நிலை தோன்றியிருப்பதற்கு, ஒவ்வொரு தமிழனும் வெட்கித் தலைகுனியவேண்டும்.

ஆனால், எந்த அரசியல் கட்சியும், பரபரப்பு ஏடுகளும், ஊடகங்களும், இதுபற்றி வாயே திறக்கவில்லையே! ஏன்? இந்த மவுனத்தின் அர்த்தம் என்ன?

இந்த நாட்டில் - இது ஒரு பிரச்சினையே இல்லையா? நடிகர் நடிகைகள் - அரசியல் தலைவர்களின் அசைவுகளும், நகர்வுகளும் தான் இந்த நாட்டின் உயிர் பிரச்சினையா?

சொரணையும், சுயமரியாதையும் கொண்ட ஒவ்வொரு தமிழன் உள்ளத்திலும் இந்தக் கேள்விகள் வெடித்தெழ வேண்டும்.

# காக்காய் பிடிக்கும் கலை!

ஆங்கிலத்தில் 'சைக்கோபேன்சி' (Sychophancy) என்று ஒரு சொல் உண்டு. அது 'Sukophantes' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தது. தமிழில் இந்த சொல்லின் அர்த்தத்தை விளக்கும் ஒரு பழமொழியே உண்டு. அது தான் 'காக்காய் பிடிப்பது' என்பதாகும். செந்தமிழில் கூற வேண்டுமானால், 'புகழ் பாடுதல்' என்று கூறலாம். புகழைப் பாடுதல் என்பதற்கும், புகழை உருவாக்கப் பாடுபடுவதற்கும் வேறுபாடு உண்டு. தங்களைப் புகழ்ந்து பேசுவதை பெரிதும் விரும்பக் கூடியவர்களைச் சுற்றி அப்படி புகழ் பாடுவதற்கு ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருக்கும் இதை எல்லாம் நாம் சொல்லித்தான் தமிழ்நாட்டு மக்களுக்குப் புரியுமா என்ன? இப்போது ஏன் இந்தப் பீடிகை என்று கேட்கக் கூடும். அதற்கு காரணம் இருக்கிறது. ராகுல்காந்தி தான் – அடுத்த பிரதமர். அவர் பிரதமராவதற்கு எல்லா தகுதிகளும் உண்டு' என்று காங்கிரஸ் தலைவர்களில் சிலர் பேசக் கிளம்பியவுடன், சோனியாவிடமிருந்து கடுமையான மறுப்பு வந்துவிட்டது. "போதும் நிறுத்துங்கள்; இந்தியாவில் பிரதமர் பதவி ஒன்றும் காலியாக இல்லை. எங்கள் குடும்பத்துக்கு புகழ் பாடுவதற்கு எவரும் தேவையில்லை" என்று கண்டிப்பாகக் கூறி, அத்துடன், பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார். சோனியாவின் இந்தக் கண்டிப்பு மிகவும் உண்மையானது என்பது காங்கிரசாருக்குப் புரியும்; எனவே எல்லோரும் வாயை மூடிக் கொண்டு விட்டார்கள்.

இதுவே – தமிழ்நாட்டில் ஒரு தலைவர் இப்படியெல்லாம் கூறியிருந்தால், நிலைமையே வேறு மாதிரி இருந்திருக்கும். "எங்கள் தலைவர் எப்போதுமே புகழை விரும்பாதவர்; புகழ்ச்சிகள் அவரிடம் நெருங்க முடியாது; புகழையே விரும்பாத உன்னத தலைவர், புகழ் போதை தலைக்கேறிடாத புனிதத் தலைவர்; அவர் புகழ் பெற விரும்பியிருந்தால் எத்தனையோ புகழ் மாலைகளை சூட்டிக் கொண்டிருக்க முடியும். அத்தனை புகழை யும் துச்சமென வெறுத்து ஒதுக்கியவர்" என்று மற்றொரு புகழ் புராணத்தைத் தொடங்கியிருப்பார்கள்.

"எங்கள் தலைவருக்கு பிறந்த நாள் விழா எடுப்பதே பிடிக்காது. அவ்வளவு அடக்கமானவர். பிறந்த நாள் வரும் நாளில் அவர் தலைமறைவாகி விடுவார். யாரையும் சந்திக்க மாட்டார். காரணம் – அவர் புகழை விரும்பாதவர்" இப்படி தொண்டர்களால் புகழப்படுகிற தலைவர்கள் இருக்கிறார்கள். ஆனால், தலைவர் இல்லாமலேயே – தொண்டர்கள் தலைவருக்கு பிறந்த நாள் விழா எடுத்து புகழ் மாலைகளை சுமக்க முடியாத அளவுக்கு சூட்டு வார்கள். அத்தனை செய்திகளும் உடனுக்குடன், தலைவரின் காதுக்கு போய்க் கொண்டே இருக்கும்.. அதற்காக – தலைவர் – இது கட்சி விரோத நடவடிக்கை என்று கருத மாட்டார். மாறாக, உண்மை விசுவாசிகளை அதை வைத்தே கணக்கிடுவார். "தலைவரே; உங்களுடைய புகழின் வெறுப்புக்கு – தன்னடக்கத்துக்கு ஒரு அளவே இல்லையா? இனியும் நீங்கள் பிறந்த நாளில் பதுங்கக் கூடாது. வெளியே வர வேண்டும்" என்று ஒரு கட்டத்தில் அறிவிப்பார்கள். அதுவும் புகழ் ஏணியின் உச்சியில் இருக்கும் ஒருவரின் வாயாலே அறிவிக்கச் செய்து, தலைவரின் 'புகழ் விரும்பா' தியாகத்தைப் பறைசாற்றுவார்கள்.

காலையில் கைது செய்து மாலையிலே விடுதலை செய்யும் போராட்டமாக இருந்தாலும், அது தலைவரின் தியாகச் சிறைப் பட்டியல் எண்ணிக்கையில் ஏற்றப்படும். 400–வது முறையாக தலைவர் கைது என்று 'வரலாற்றைப் பதிவு' செய்வார்கள். வரலாற்றுப் பதிவு என்பது முக்கியம் அல்லவா? "புகழை விரும்பாத தலைவருக்கு பிறந்த நாள்" என்ற புகழ்ச்சி உரையுடன் தலைவரின் வண்ண வண்ணப் படங்களோடு பதாகைகள் ஊர் முழுதும் பளிச்சிட்டுக் கொண்டிருக்கும்.

இப்படி எல்லாம் புகழ் விரும்பாத தலைவர்கள் நிறைந்த தமிழகத்தில் சோனியாவின் புகழ் மறுப்பு எம்மாத்திரம் என்று கேட்கலாம். அதனால் தான் சோனியாவின் இந்த அறிக்கையைக்கூட இந்தத் தலைவர்கள் தங்கள் ஏடுகளில் வெளியிடாமல் நிறுத்தி விட்டார்கள் போலும்.

ஆனாலும், காக்காய் பிடிக்கும் ஆசாமிகளை **உண்மையிலே** ஓரம் கட்டும் சோனியாவின் உறுதியான நடவடிக்கை, தமிழ்நாட்டுத் தலைவர்கள் பலரை சங்கடத்துக்குள்ளாக்கியிருக்கும் என்பது மட்டும் உண்மை. அதற்காக – தமிழகத்தில் தலைவர்களை சுற்றி நிற்கும் 'புகழ் பாடும் புலவர்கள்' மனம் சோர்ந்துவிட வேண்டாம். தடைகளைத் தகர்த்து, புகழ் போதை நோக்கி முன்னேறிச் செல்லும் 'வாய்மை' நிறைந்தவர்களாயிற்றே, நீங்கள்! சோனியா கிடக்கட்டும்; விட்டுத் தள்ளுங்கள்! பிழைக்கத் தெரியாதவர் போலிருக்கிறது!

கலையிலே சிறந்தது, காக்காய் பிடிப்பது!

**– கோடங்குடி மாரிமுத்து**

# சென்னையில் கழகத் தொடர்க் கூட்டங்கள்

குடந்தை தோழர் சிற்பி ராசன் – இரண்டாவதுகட்டமாக சென்னை நகரில் 5 கூட்டங்களில் மந்திரமா, தந்திரமா நிகழ்ச்சிகள் வழியாக பகுத்தறிவுப் பிரச்சாரத்தை சிறப்புடன் நடத்தினார். மக்கள் பேராதரவுடன் நடந்த கூட்டங்கள் விவரம்:

14.4.2008 திங்கள் மாலை 6 மணி அளவில் முகலிவாக்கம் அம்பேத்கர் சிலை அருகில் நடைபெற்ற கூட்டத்திற்கு அமல்ராசு தலைமையேற்க, கழகத் துணைத் தலைவர் ஆனூர் கோ. செகதீசன் சிறப்புரையாற்றினார். முன்னதாக வழக்கறிஞர் சு.குமாரதேவன், மா.அன்பரசன், கு.அன்பு தனசேகர் ஆகியோர் உரையாற்றினர். அதனைத் தொடர்ந்து சிற்பி ராசனின், மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சி நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வி.விசய், செ.ஜீவா, திவாகர் முன்னிலை வகிக்க, மு. ராசா வரவேற்க, வை. ரமேசு நன்றி கூறினார். கழகக் கூட்டம் நடந்த முகலிவாக்கம் பகுதியில் இதுவரையில் பெரியாரியல் கூட்டம் நடைபெற்றதில்லை. ஒரு சில கூட்டங்கள் கூட இந்து முன்னணி மத வெறியர்களின் எதிர்ப்பினால் பாதியிலேயே முடிந்திருக்கின்றன. முதல் முறையாக ஆரம்பம் முதல் கூட்டம் முடியும் வரை நூற்றுக்கணக்கான பொது மக்கள் கூடி முழுமையாக அமைதியாக இந்து முன்னணி மதவெறியர்களின் எதிர்ப்பை முறியடித்து நடைபெற்ற கூட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. ச.ராஜேஷ் சூ. ஆம்ரிக், ந. மதன், வ.தியாகு, ப. தனமுத்து, பழனி அருள், ஸ்டீபன்ராஜ் போன்ற புதிய தோழர்களின் கடின உழைப்பினால் கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

15.4.2008 மாலை 6 மணி அளவில் முத்துரங்கன் சாலை, தியாகராயர் நகர் பேருந்து நிலையம் அருகில் எ.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மா. அன்பரசு உரையைத் தொடர்ந்து சிற்பி. இராசனின், 'மந்திரமா? தந்திரமா?' நிகழ்ச்சி நடைபெற்றது.

16.4.2008 மாலை 6 மணி அளவில் சைதை காவேரி நகரில் சா. இராசு வரவேற்க, வை. சுரேசு தலைமையேற்க அ. தியாகு முன்னிலையில் மா. அன்பரசன் உரையைத் தொடர்ந்து சிற்பி இராசனின், மந்திரமா, தந்திரமா நிகழ்ச்சி நடைபெற்றது.

17.4.2008 மாலை 6 மணியளவில் சேத்துப்பட்டு வைத்தியநாதன் தெருவில் பா. இராசன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் மா. அன்பரசன் உரையைத் தொடர்ந்து சிற்பி இராசனின் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடைபெற்றது.

18.4.2008 மாலை 6.30 மணிக்கு இராயப்பேட்டை, பெரியார் சிலை அருகில் நடைபெற்ற கூட்டத்திற்கு ச. சரவணன் தலைமையேற்க, கோ. சீனு வரவேற்புரையாற்ற மா.அன்பரசன், சிறப்புரையைத் தொடர்ந்து சிற்பி இராசனின் மந்திரமா, தந்திரமா நிகழ்ச்சி நடைபெற்றது. முன்னதாக இரா. உமாபதி, கு. அன்பு தனசேகர், விடுதலை சிறுத்தைகள் அமைப்பைச் சார்ந்த சாரநாத் ஆகியோர் உரையாற்றினர். நா. வினாயகம் நன்றி கூறினார். அனைத்துக் கூட்டங்களையும் எ.கேசவன், தபசி. குமரன், கரு. அண்ணாமலை ஆகியோர் ஒருங்கிணைந்து சிறப்பாக நடத்தினர். ஒவ்வொரு கூட்டத்திலும் கழகத் தோழர்களும், பொது மக்களும் பெரும் அளவில் கூடி கருத்துக்களை கேட்டது குறிப்பிடத்தக்கது.

## மத்திய அமைச்சர் ஆ. இராசா ஆய்வுரை (2)

# முதல் தடைக்குள்ளான அம்பேத்கரின் நூல்!

*22.2.2008 அன்று திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பெரியார் உயராய்வு மையமும், மகளிரியல் துறையும் இணைந்து நடத்திய 'பெரியார் அம்பேத்கர் : இன்றைய பொருத்தப்பாடு' என்ற தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவில் பங்கேற்று மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்ப துறை அமைச்சர் ஆ. இராசா ஆற்றிய உரையின் சென்ற இதழ் தொடர்ச்சி:*

நான் இந்த இடத்திலே ஒன்றைச் சொல்ல வேண்டும். கண்ணகிக்குச் சிலை வைத்தபோது தந்தை பெரியார் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனென்றால் பெண்களை அடிமைப்படுத்துகின்ற ஒரு weapon, ஒரு கருவி கற்பு, கற்பு என்றால் அது ஆணுக்கும் இருக்க வேண்டும். நான் என்னவிதமான ஒழுக்கத்தை என்ன விதமான நடத்தையை இராஜ துரை அவர்கள் என் மீது காட்ட வேண்டுமென்று எண்ணுகிறேனோ அதை நான் அவரிடத்திலேயும் காட்ட வேண்டும். மற்றவருக்கும் காட்ட வேண்டும். அதுதான் கற்பு, அதுதான் ஒழுக்கம்.

ஒழுக்கத்துக்கு ரொம்ப எளிமையாக விளக்கம் சொன்னார் பெரியார்: "நான் உன்னிடம் என்ன எதிர்பார்க்கிறேனோ அதை நீ என்னிடம் எதிர்பார்ப் பதற்கும், இன்னொருவனிடம் நான் எதிர்பார்ப் பதற்கும் ஒன்றாக இருக்க வேண்டும். இதுதான் ஒழுக்கம்". அந்த அடிப்படையில் கண்ணகிக்கு சிலை வைப்பதைக்கூட தந்தை பெரியார் விமர்சித்தார். ஆனால், அண்ணா வேறுவிதமாகச் சொன்னார். கற்பு உண்டா இல்லையா என்பது வேறு, கண்ணகி கற்புக்கு அரசியா என்பது வேறு, ஆனால் இந்த மண்ணில் ஒரு கலாச்சாரப் படையெடுப்பு நடந்திருக் கிறது. ஒரு உயர்ந்த செம்மாந்த வாழ்க்கை, ஒருவனுக்கு ஒருத்திதான் வாழ வேண்டுமென்கின்ற வாழ்க்கை. ஒரு வேளை விதவையாகிவிட்டால், அந்த விதவையை மறுமணம் வேண்டுமென்கின்ற உரிமைகூட இந்த தொல் சமுதாயத்தில் இருந்திருக்கிற இந்த தமிழ் சமுதாயத்தில் திடீரென்று 'ஜவனுக்கும் தேவி அழியாத பத்தினி' என்று திரௌபதி அம்மனுக்குக் கோயில் கட்ட வேண்டிய அவசியம் என்ன? இந்தக் கலாச்சாரப் படையெடுப்பை மறுப்பதற்காகத்தான் கண்ணகிக்கு நான் சிலை வைக்கிறேன். கண்ணகிக்கு சிலை இந்த திராவிட இயக்கத்திற்கு அவசியப்பட்ட தற்குக் காரணம், இது எங்கள் அடையாளம், இது எங்கள் நாகரிகம், இது எங்கள் பண்பாடு, வரலாறு என்று சொல்வதற்கு ஒரு அண்ணா இந்த மண்ணிற்கு அவசியப்பட்டதாக அண்ணா கருதிக் கொண்டார், எனவே திராவிட சட்டகம் என்கின்ற சட்டகத்திற்குள் பெரியார் தன்னை அடக்கிக் கொண்டதற்குக் காரணம், ஆரியருக்கு எதிர்ப்பு, இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால் பிராமணர்களுக்கு எதிர்தளத் தில் இயங்குவதற்கு ஒரு அடையாளம் தேவைப் பட்டது அவ்வளவுதான். அதற்காக திராவிடர் அல்லாத ஒரு சமுதாயம் இந்த மண்ணிலே வாழக் கூடாது என்றோ, அவர்களுக்கு உரிமையற்றுப் போய்விட வேண்டுமென்றோ பெரியார் ஒருபோதும் கருதியவர் அல்ல.

எனக்கு மொழிப் பற்று கிடையாது, நாட்டுப் பற்று கிடையாது, தேசியக் கொடி என் கோவணத்துணி, இந்திய வரைபடத்தை எரிப்பேன்.

என்று எதையெல்லாம் எரிக்க முடிந்ததோ அதை யெல்லாம் செய்தவர் தந்தை பெரியார். இன்னும்கூட நான் சொல்லுவேன். ஒரு காலத்தில் இந்த நாட்டின் மீது சீனா படையெடுத்து வந்தபோது, இந்த நாட்டிலுள்ள தலைவர்களெல்லாம் துண்டேந்தி வசூல் செய்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா உட்பட. ஆனால் பெரியார் அந்தக் காரியத்தைச் செய்யவில்லை. நான் கர்ப்பக்கிரகத்திற்குள்ளே போகிறேன் என்று சொன்னார். பத்திரிகையாளர்கள் கேட்டார்கள், சீனா படையெடுத்து வருகிறது, நாடு பறி போகிறது, நீங்கள் இப்போது தான் ஜாதியை ஒழிக்கிறேன். மதத்தை ஒழிக்கிறேன் என்கிறீர்களே என்று கேட்டபோது பெரியார் சொன்னார்:

'ஒருவேளை சீனாக்காரன் படையெடுத்து வந்து என்னுடைய சூத்திரப் பட்டம் போகுமானால், பற, பள்ளு பட்டம் போகுமானால் அவனையும் வரவேற்பதற்கு நான் தயார்' - என்று சொல்லுவதற்கு ஒரே ஒரு தலைவர் தான் இந்த மண்ணிலே இருந்தார். எனவே இருவரும் வேறுபட்ட அடையாளங்களோடு இருந்த தலைவர்கள். அம்பேத்கர் தேசியத்தை விரும்பிய வர், பெரியார் தேசியத்தை விரும்பியவர்



அல்ல. தேசியம் ஒரு கற்பிதம் என்று சொன்ன வர், நாட்டுப்பற்று பொய் என்று சொன்னவர். நேற்று வரை பாகிஸ்தான் நம்மோடு இருந்தது, நாளைக்கு அது பிரிந்து போய் விட்டால் அதன் மீதும் நாட்டுப் பற்று உனக்கு வருமா எனக் கேட்டவர். எனவே பெரியாருக்கு நாட்டுப் பற்று கிடையாது, பெரியாருக்கு மொழிப் பற்று கிடையாது, உண்மையில் இந்தி எதிர்ப்புப் போராட் டத்தையேகூட தமிழ் மேல் இருக்கிற காதலால் தந்தை பெரியார் செய்யவில்லை. இந்தி இங்கு வந்துவிடக் கூடாதே என்கின்ற அந்த வேகத்தில்தான் தந்தை பெரியார் செய்கின்றார். அதற்கு ஒரு அருமையான தலையங் கத்தையே தீட்டினார். தந்தை பெரியார் எழுதிய தலையங்கங்களிலே ஒன்று இரண்டு உணர்ச்சிப்பூர்வமானவை. நாகம்மை மறைந்தபோது எந்தக் கணவனும் அப்படி எழுத முடியாது. தன்னுடைய துணைவியார் மறைந்த பொழுது எழுதினார் :

"எனக்கு இருக்கிற ஒரே தடையும் போய்விட்டது, என்னுடைய சுகம் போய்விட்டது எனச் சொல் வேனா? சொத்துப் போய்விட்டது எனச் சொல் வேனா? எனக்கு இருந்த ஒரே ஒரு நலன் போய் விட்டது என்று சொல்வேனா? நாகம்மை வாழ்ந்தது எனக்காகவே தவிர தனக்காக அல்ல" என்றெல்லாம் குறிப்பிட்டு விட்டுச் சொல்கிறார் - இருந்தாலும் ஒழிந்தது, இன்றோடு எனக்கிருந்த ஒரு தடை ஒழிந்தது. இனிமேல் இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்காக என் வாழ்நாட்களை அர்ப்பணிக்கப் போகிறேன்.

மனைவி இறந்தபோதுகூட இப்படி ஒரு கட்டுரையை ஒரு தலைவனால் எழுத முடியுமென் கின்ற வரலாறு பெரியாருக்கு உண்டு. அந்தப் பெரியார் மறைமலையடிகளுக்கு ஒரு முறை ஒரு கடிதம் எழுதினார்: நான் உங்களைப் பல்வேறு விதமாக விமர்சித்திருக்கிறேன். உங்களுடைய சைவக் கோட்பாடு மீது எனக்கு நம்பிக்கை இல்லை. நீங்கள் பேசுகின்ற தனித்தமிழ் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. ஏனென்றால், தனித்தமிழ்க் கோட்பாடு என்பது பிராமணர்களுக்கு எதிராக சைவ வேளாளப் பண்பாடு என்கின்ற தளத்தோடு நின்று போய் விட்டது. தனித்தமிழ் இயக்கம் தேவைதான். தனித்தமிழ் இயக்கம் எதுவரை வந்தது என்றால் மொழியைப் பிரித்துப் பார்த்ததே தவிர கீழே இருக்கிற சாதி ஒழிய வேண்டுமென்று விரும்ப வில்லை. அது சைவ வேளாளப் பண்பாடு என்கின்ற அந்த தளத்தோடு தனித்தமிழ் இயக்கம் நின்று போய்விட்டது. இதை தந்தை பெரியாரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால், உங்கள் மீது எனக்கு நிறைய கருத்து மாறுபாடு உண்டு, உங்களோடு உடன்படாத தளங்கள் நிறைய உண்டு, என்றாலும் தமிழை நாம் காப்பாற்ற வேண்டியதற்குக் காரணம், தமிழர்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தை இழந்து விடுவார்கள். தமிழ் மொழி இல்லாவிட்டால் தமிழ் மக்கள் சுபிட்சமாக வாழ முடியாது என்பதற்காக உங்களை அழைக்கிறேன். கடந்த காலத்தில் தவறு செய்திருந்தால் அய்யா அவர்கள் மன்னித்து அருளுங்கள் என்று எழுதியவர் தந்தை பெரியார். ஆக, நான் இவ்வளவு பூடகம் போட்டுப் பேசுவதற்குக் காரணம், அம்பேத்கர் இயங்கிய தளம் வேறு, தந்தை பெரியார் இயங்கிய தளம் வேறு, இவர்களுக்குள் இருக்கிற ஓர்மை வேறு இடத்திலே வருகிறது. எதிலே வருகிறது?

எஸ்.வி.ஆர். அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். Annihilation of Caste என்கின்ற புத்தகத்தைப் பற்றி. Genesis, Mechanism and Development of Caste in India என்ற கட்டுரையை அவர் எழுதுகிறபோது அவருக்கு வயது 25. 25 வயதில் ஒரு இளைஞன் இப்படி ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையை எழுத முடியுமா என்று இதுவரை யாருக்கும் தெரி யாது. அவரால் பயன்படுத்தப்பட்ட மேற்கோள்கள் எவ்வளவு என்பதை இதுவரை ஆழம் பார்த்தவர்கள் இல்லையோ என எண்ணுகிற அளவுக்கு அம்பேத் கரினுடைய அறிவு நுட்பம் அந்த நூல்களில் வெளிப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் 1857, 1856 இல் சிப்பாய்க் கலகம் நடந்த பொழுது மத விவகாரங்களில் நாங்கள் தலையிட மாட்டோம் என்று வெள்ளைக்காரர்கள் இந்தியத் தலைவர் களுக்கு எழுதிக் கொடுத்தார்கள். பன்றிக் கொழுப்பை துப்பாக்கியிலே வைத்ததாகச் சொல்லப்பட்ட பொழுது அதை இசுலாமியர்கள் ஒப்புக் கொள்ள முடியாது என்று சொன்னபோது ஒரு மிகப் பெரிய இராணுவக் கலவரம் வெடித்தது. சிப்பாய்களுக்குள் கலகம் வந்த பொழுது வெள்ளைக்கார அரசாங்கம் ஒரு ஒப்புதலுக்கு வந்தது, உங்களுடைய மத விவகாரங்களில் நாங்கள் தலையிட மாட்டோம் என்று. Genesis, Mechanism and Development of Caste in India ஜாதியினுடைய தோற்றமும் வளர்ச்சியும் அது இயங்குகிற முறையும் என்று ஒரு புத்தகத்தை அம்பேத்கர் 1916 இல் எழுதுகிறார். இந்தியாவில் முதன்முதலாகத் தடைசெய்யப்பட்ட ஒரு புத்தகம் வெள்ளைக்கார அரசாங்கத்தால் உண்டு என்று சொன்னால் அதுதான் அந்தப் புத்தகம் இந்தியாவில் முதன்முதலாகத் தடைசெய்யப்பட்ட அம்பேத்கரின் புத்தகம் தான். வெள்ளைக்கார அரசாங்கத்தால் ஒரு இந்தியர் எழுதி முதன்முதலில் தடைசெய்யப்பட்ட புத்தகம். அந்தப் புத்தகத்தைத் தடைசெய்ய வேண்டுமென்று Privy Council என்று சொல்லப்படுகிற உச்சநீதிமன்றம் வரை சென்றனர். இன்றைக்கு உச்சநீதிமன்றம் டெல்லியிலே இருக்கிறது. ஆனால், அன்றைக்கு உச்சநீதிமன்றம் Privy Council என்று சொல்லப்பட்ட, இங்கிலாந்திலே இருந்த அந்த உச்சநீதிமன்றம் வரை சென்று அந்தப் புத்தகத்திற்குத் தடை வாங்கினார்கள் இங்கே இருக்கின்ற பிரா மணர்கள். ஏனென்றால் அதிலே தான் ஜாதி எப்படித் தோன்றியது? அது இயங்குகிற காரணத்தினால் என்னென்ன விளைவுகள் ஏற்படு கின்றன? என்று சொன்னார். அதிலே ஒரு இடத்திலே சொல்லுவார் Hindus are the only people in the world whose relation between man to man has been consecrated as sacred, eternal and inviolative. உலகத்திலே வேறுபாடுகள் இருக்கிறது. பிளாட்டோ எழுதிய 'குடியரசே' Division of Labour தான். Division of Labour என்பது வேறு, Division of Labourers என்பது வேறு. தொழிலைப் பிரிப்பதென்பது வேறு, தொழிலாளர்களைப் பிரிப்பதென்பது வேறு. தொழிலைப் பிரித்தார்கள் மேலைநாடுகளில்.

நான்கூட ஒருமுறை வெளிநாட்டிற்குச் சென்றிருந் தேன். வெளிநாட்டிற்குச் சென்றிருந்து, ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டல் அறையிலே நான் தங்கியிருந்த போது, திடீரென்று கதவைத் தட்டினார்கள் மாணவர்கள். மாணவர்கள் என்று தெரியாது. இளம் பிராயத்திலே இருக்கின்ற பெண்கள், ஆண்கள் எல்லாம் திடீரென்று கதவைத் தட்டினார்கள். உங்கள் அறையைச் சுத்தம் செய்யப் போகிறோம் என்று சொன்னார்கள். எனக்கு ஒரு சந்தேகம். யாரைப் பார்த்தாலும் நமது இந்தியன் புத்தி இருக்கிறதே நமக்குள் தெருக்கூட்டி என்றால் இப்படித்தான் இருப்பான், தோட்டி என்றால் இப்படித்தான் இருப்பான் என்று நம்மையும் அறியாமல் நமது மூளைக்குள் இருக்கிற புத்தி அங்கே வெளியே வந்தது. நீங்களெல்லாம் யார்? உங்களுக்கு எவ்வளவு சம்பளம் தருகிறார்கள் என்று அவர்களைப் பார்த்து நான் கேட்டேன். அவர்கள் உடுத்தியிருந்த உடை, அவர்கள் வந்த நாகரிகம், அவர்கள் பழகிய பண்பாடு இவற்றை யெல்லாம் பார்த்து எவ்வளவு உங்களுக்கு சம்பளம் என்று கேட்டேன். முதலில் அவர்கள் கேட்ட கேள்வி, நீ ஒரு இந்தியனா? என்று கேட்டார்கள், பாசத்தோடு. ஏன் என்று கேட்டேன். இந்தியாவில் தான் கூட்டு வதற்கும், கழுவுவதற்கும் ஒரு ஜாதி இருக்கிறது என்று கேள்விப்பட்டோம், நாங்கள் பக்கத்திலே இருக்கிற மருத்துவக் கல்லூரியினுடைய மாணவர்கள், இந்த ஓட்டலைக் குத்தகைக்கு எடுத்திருக்கிறோம். ஒரு முறை பகலிலும், இரவிலும் சுத்தம் செய்துவிட்டுப் போனால் எங்களுக்கு பாக்கெட் மணி இத்தனை டாலர் கிடைக்கிறது. இதைத்தான் நாங்கள் பெருமையாகக் கருதுகிறோம் என்று சொல்லுகிற மனப்பாங்கு அந்த நாட்டில் இருக்கின்றது.

எனவே அங்கு சலவைத் தொழிலாளி இருக்கிறான். ஆனால், பிறப்போடு அது முடிச்சுப் போடப்பட வில்லை. அங்கே செருப்புத் தைக்கிற தொழிலாளி இருக்கிறான். ஆனால் அவன் பிறப்போடு முடிச்சுப் போடப்படவில்லை. இன்றைக்குச் செருப்புத் தைக்கிற தொழிலாளி நாளைக்குத் தன்னுடைய தொழிலை மாற்றிக் கொள்ளுவார். அதனால்தான் சொன்னார், Division of Labour என்பது வேறு, Division of Labourers என்பது வேறு.

(தொடரும்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# பெரியார் சிந்தனையை இலக்கியமாக்கியவர் புரட்சிக்கவிஞர்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் தேதி புதுவையில் பிறந்தார். தந்தை கனகசபை, தாய் இலக்குமி.

1928 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் மாயவரத்தில் பெரியாரும், டாக்டர் வரதராசலு நாயுடும் பேசுவதாக அறிந்த பாரதிதாசன் ஒரு காங்கிரசுக்காரராக - சைவ பக்திமானாக அக்கூட்டத்திற்குச் சென்று மாற்றம் பெற்று அன்றோடு கடவுள், மதம் ஆகியவற்றைப் பாடுவதை விட்டுவிட முடிவெடுத்துக் கொண்டார். எதையும் ஏன், எதற்கு என்று பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து தனக்கு சரியெனப்பட்டதை ஏற்றுக் கொள்க என்று பெரியார் கூறியது கவிஞருக்கு மிகவும் பிடித்தது. அதிலிருந்து பெரியார் கொள்கையை தனது பாடல்களின் கருப்பொருளாக பயன்படுத்தி பாடல்களை எழுதினார்.

1928 இல் கருத்தடைப் பற்றி முதன் முதலாகப் பெரியார் கூறியதை 1936 இல் ‘காதலுக்கு வழி வைத்துக் கருப்பாதை சாத்தக் கதவொன்று கண்டறிவோம்’ எனப் பாட்டால் வழி மொழிந்த முதற் கவிஞர் என்ற பாராட்டிற்குரியவர் பாரதிதாசன். மதுரையில் நடைபெற்ற ஒரு தமிழ் மாநாட்டில் புரட்சிக் கவிஞர் கலந்து கொண்டார். அப்போது கி.ஆ.பெ. விசுவநாதம், பாவங்களை வைகையிலே சென்று, ‘புண்ணிய’ முழுக்குப் போட புரட்சிக் கவிஞரை அழைத்தார். புரட்சிக் கவிஞரோ நீங்கள் வைகையில் மூழ்கி உங்கள் பாவத்தைக் கழித்துவிட்டு, எனக்குக் குளிப்பதற்குக் கொஞ்சம் நீர் கொண்டு வாருங்கள். நான் அதை சுட வைத்து, அதில் உள்ள பாவங்களை போக்கிவிட்டு பிறகு குளிக்கிறேன் என்றார்.

பண்டைய நாட்களில் போர்க் காலங்களில் வெற்றிக்குச் சின்னமாக முழங்கிய சங்கொலியை இடைக்காலங்களில், பிற்காலங்களில் கோயில்களிலும், கோயில் விழாக்களிலும், பண்டாரங்களின் கைகளில் கொடுத்து விட்டனர். அந்தச் சங்கைப் பண்டாரங்களின் கைகளினின்றும் பிடுங்கித் தமிழின மக்களின் உரிமை மீட்கும் போரில் ஈடுபட்டுள்ள கட்டிளங் காளையரின் கைகளில் கொடுத்தவர் புரட்சிக் கவிஞராவார். “எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு’ என்று கவிதையில் சங்கை முழங்க வைத்த முதற் கவிஞர் பாரதிதாசனே யாவார்.



புரட்சிக் கவிஞர் தம் கவிதை முழுவதிலும் தமிழுக்கு மொத்தம் 86 விதமான அடைமொழிகள் தந்து எழுதியது மட்டுமல்லாமல் பிறரால் வடமொழிச் சொற்கள் என்று சொல்லப்பட்ட 235 சொற்களைத் தமிழ்ச் சொற்களே என்று ஆதாரத்துடன் கூறியவர் புரட்சிக் கவிஞர்.

பாரதிதாசன் 1945 முதல் எழுதியுள்ள படைப்புகளில் தூய தமிழ்ப் பெயர்களையே கையாண்டிருப்பதோடு, தன்னுடைய கண்ணகி புரட்சிக் காப்பியத்தில் கோவலன் கண்ணகி மணவிழாக் கண்டவர்களின் பட்டியல் தருகின்ற முறையில் 84 தனித் தமிழ்ப் பெயர்களைக் கூறியவர்.

அசுரர்கள் என்று தமிழ் இன மக்களைத் தாழ்த்திப் பேசும் புராண கதைக்கு எதிராக, ‘இரணியன் அல்லது இணையற்ற வீரன்’ என்ற நூலை எழுதினார். ‘வஞ்ச விழா’ எனும் பெயரில் தீபாவளி குறித்துச் சிறு நாடகம் ஒன்றும் எழுதி யுள்ளார். அவரும் 1928 முதல் தீபாவளி கொண்டாடுவதை நிறுத்திவிட்டார்.

புரட்சிக் கவிஞர் பெரியாரை ‘உயர் எண்ணங்கள் மலரும் சோலை’ என்று பாராட்டி கவிதை எழுதியவர். புரட்சிக் கவிஞரைப் பற்றி பெரியார், “பாரதிதாசன், புரட்சிகரமான கருத்துக்களை வெளிப்படுத்திய முதல் கவியும் கடைசிக் கவிஞரும் ஆவார். அவர் புதுமைக் கருத்துக்களையும், மக்கள் சமுதாயத்திற்குத் தேவையான சமதர்மக் கருத்துக்களையும் துணிந்து வெளியிட்டுள்ளார். சமுதாய மாற்றத்திற்கான கருத்துக்களைத் துணிந்து கூறிய பெரும் புலவர் ஆவார். இன்றைக்குப் பகுத்தறிவாளர்க்கு எடுத்துச் சொல்லத் தக்க சாதனமாகப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்கள் அமைந்துள்ளன.”

“காட்டுமிராண்டிகளாக, மிருகங்களாக இருந்த மக்களை மனிதத் தன்மைக்குக் கொண்டு வரப் பாடுபட்டவர் பாரதிதாசன் ஆவார்”. (விடுதலை 21.10.1970)

“நாட்டில் எத்தனையோ கவிஞர் இருந்திருக்கிறார்கள்” என்றாலும், பாரதி தாசனைப் போல் மக்கட்குப் பயன்படும் கவிதைகளை யாரும் இயற்றவில்லை (‘விடுதலை’ 12.12.73) என்று கூறியிருக்கிறார்.

1938 ஆம் ஆண்டு ‘பாரதிதாசன் கவிதைகள்’ முதல் தொகுதியைக் குத்தூசி குருசாமி, குஞ்சிதம் குருசாமி வெளியிட்டனர். புரட்சிக் கவிஞர் 1964 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 இல் இயற்கை எய்தினார். 1928 ஆம் ஆண்டு முதல் 1964 வரை தான் வாழ்ந்த நாட்களில் பெரியாரைத் தவிர வேறு ஒரு தலைவரை ஏற்றுக் காள்ளாத வாழ்க்கை வாழ்ந்தவர் புரட்சிக் கவிஞர். அவர் வாழ்ந்த காலம் 72 ஆண்டு 11 மாதம் 28 நாள்கள்.

புதுச்சேரி சுயமரியாதை இயக்கத்தின் சார்பில் 10.05.1964 இல் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், மயிலை த. லோகநாதன் ஆகியோருக்கு இரங்கற் கூட்டம் நடைபெற்றது. அதில் குத்தூசி குருசாமி, “ஆதி காலந் தொட்டே ஆதிக்கத்திற்கு நாத்திகம் பின்வாங்கியதில்லை. காரல் மார்க்ஸ், இங்கர்சால், சித்தர்கள், புத்தர் போன்றவர்கள் சிறந்த சுயமரியாதைக் கொள்கைகளைப் பரப்பிச் சென்றார்கள். அந்த அடிச்சுவட்டில் நிலையான இடம் பெற்றவர் பாரதிதாசன் என்று குறிப்பிட்டுள்ளார்.”

புரட்சிக் கவிஞரின் மணி விழா மலராகத் ‘திராவிட நாடு’ 29.4.1951 இதழ் வந்துள்ளது. 1970 ஆம் ஆண்டு கவிஞரின் ‘பிசிராந்தையார்’ நாடக நூலுக்கு சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டது.

1971 ஏப்ரல் 29 புரட்சிக் கவிஞரின் பிறந்த நாள் விழா புதுவை அரசு விழாவாகக் கொண்டாடப் பெற்றது. ஒவ்வோராண்டும் அரசு விழா நிகழ்கிறது. புரட்சிக் கவிஞர் வாழ்ந்த பெருமாள் கோவில் தெரு 95 ஆம் எண் இல்லம் அரசுடைமையாயிற்று - அங்கே புரட்சிக் கவிஞர் நினைவு நூலகம் - காட்சிக் கூடம் நடந்து வருகிறது.

1972 ஏப்ரல் 29 புரட்சிக் கவிஞரின் முழு உருவச் சிலை புதுவை அரசினரால் திறந்து வைக்கப்பட்டது. புரட்சிக் கவிஞரின் ‘அழகின் சிரிப்பு’ என்ற நூலை கதலீஸ் லியோன்ஸ் என்பவர் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்துள்ளார் -

பெரியாரின் கருத்துகளை கவிதைகளாக இலக்கியமாக்கியவர் புரட்சிக் கவிஞர்.

**– மே.கா. கிட்டு**

## ஆனைமலையில் கழகம் ஆர்ப்பாட்டம்

ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை தமிழக அரசு தள்ளி வைப்பதாக அறிவித்ததைக் கண்டித்தும், கர்நாடக மாநில பாரதிய ஜனதா கட்சித் தலைவர் எடியூரப்பாவின் அத்துமீறலைக் கண்டித்தும், தமிழர் நலனில் எப்போதும் விரோதப் போக்கைக் கடைபிடிக்கும் காங்கிரசு, பா.ச.க., மார்க்சிஸ்ட், கம்யூனிஸ்ட் ஆகிய தேசிய கட்சிகளைக் கண்டித்தும் கழகம் சார்பில் ஆனைமலை காவல் நிலைய சாலையில் 10.4.2008 மாலை 4 மணி அளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு ஆனைமலை நகர கழக செயலாளர் வே.அரிதாசு தலைமை தாங்கினார். விடுதலைச் சிறுத்தைகள் மாவட்ட செயலாளர் மணிமாறன் முன்னிலை வகித்தார். கழகப் பொறுப்பாளர் ஆனைமலை முருகானந்தம், பொள்ளாச்சி நகர செயலாளர் வே. வெள்ளிங்கிரி, சி. விஜயராகவன், கா.சு. நாகராஜன், மு. சம்பத் உள்ளிட்ட தோழர்களும், விடுதலை சிறுத்தைகள் அமைப்பினரும் திரளாகக் கலந்து கொண்டனர். ஈழத் தமிழர்கள் போராட்டம், தமிழக மீனவர்களின் அவலம், சேதுக்கால்வாய்த்திட்டம், காவிரியாறு, முல்லைப் பெரியாறு, சேலம் இரயில்வேக் கோட்டப் பிரச்சினை, இடஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து சுமார் 2 மணி நேரம் தோழர்கள் உரை நிகழ்த்தினர்.

## கடுவனூரில் அம்பேத்கர் பிறந்த நாள்

விழுப்புரம் மாவட்டம் பெரியார் திராவிடர் கழகம் சார்பாக 12.4.2008 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் கடுவனூர் பெரியார் திடலில் நடைபெற்றது. மா. தமிழ்க்குமார் வரவேற்புரையாற்ற, ஆ. இராமர், லோ.மோகன், லோ. கோபி முன்னிலை வகிக்க, மாவட்ட அமைப்பாளர் சி. சாமிதுரை தலைமை தாங்கினார். கா.வை. இளவரசனின் மந்திரமல்ல, தந்திரமே அறிவியல் விளக்க கலை நிகழ்ச்சி நடைபெற்றது. மு.வ. நடராசன், ந. அய்யனார் உரையை தொடர்ந்து வழக்கறிஞர் வீ. அழகரசன் சிறப்புரையாற்றினார். ப. கண்ணன், கல்லை ஆசைத்தம்பி, வே. செந்தில், அ.பாமரன், வெங்கட் இளையராசா, மு.வ. செல்வராசு, விழுப்புரம் கணேசன், க. கோவிந்தன், அ. முருகன் உள்பட பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர். மு. குமரேசன் நன்றி கூறினார். ரவிவர்மா ஒளி, ஒலி அமைத்துத் தந்தார்.

**நன்கொடை:** சென்னை மாவட்ட கழக செயல்வீரர் கரு. அண்ணாமலை - தமிழ்ச் செல்வி இணையரின் இரண்டாவது மகன் அ. அன்பரசன், 11.4.2008 அன்று 9வது பிறந்த நாளை முன்னிட்டு ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சி நிதியாக ரூ.1000 அளித்துள்ளார். நன்றி. (ஆர்)

*முதல் பக்கத் தொடர்ச்சி*

உலகின் அனைத்து மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுடன் மோதல் போக்கைச் சிங்கள அரசு தொடர்ந்தபடியுள்ளது. இப்போது அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்துடனும் மோதலைத் தொடுத்துள்ளது.

ஐ.நா. சபையின் மனித உரிமைக் கழகத்தில் ஒரு உறுப்புரிமை நாடாக சிறிலங்கா இருந்து வருகின்றது. இப்போது அந்த உறுப்புரிமையை இழக்கும் நிலையில் சிங்களம் உள்ளது. வரும் மே மாதத்தில் நடக்கவிருக்கும் ஐ.நா. சபையின் மனித உரிமைக் கழகத்திற்கான தேர்தலில் சிறிலங்கா தோல்வியடையப் போகின்றது என்று கொழும்பு வார ஏடொன்று அபாய அறிவிப்புச் செய்துள்ளது.

இவ்விதமாக உலகின் மதிப்பு வாய்ந்த ஜனநாயக நாடுகள் மனித உரிமை அமைப்புக்கள், சிறிலங்கா அரசை தீண்டத்தகாத ஒரு அரசாக ஒதுக்கி வைக்க முற்படும் இந்த வேளையில், மேற்குறித்த நாடுகளுடன் முரண்பாடான உறவுகளைக் கொண்டுள்ள சீனா - பாகிஸ்தான் - ஈரான் போன்ற நாடுகளைச் சிங்கள அரசு தனது இராணுவக் கூட்டாளிகளாக மாற்றி வருகின்றது.

மேலை நாடுகள் விரும்புவது போல மனித உரிமைகளை மதிக்கச் சிங்கள அரசு தயாரில்லை என்ற நிலைப்பாட்டையே கூட்டாளிகளை மாற்றுவதன் மூலம் அது வலியுறுத்த விரும்புகின்றது.

இது தவிர, ராஜபக்சே அரசுக்கு மற்றொரு பேரிடியும் விழுந்துள்ளது. இந்தியாவின் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி பி.என். பகவதி தலைமையில் சர்வதேச மனித உரிமை கண்காணிப்புக் குழு ஒன்று சிறிலங்காவில் நடந்த 16 மோசமான மனித உரிமை மீறல்கள் பற்றி விசாணை நடத்தி வந்தது. இந்தக் குழுவில் பிரான்சு, இந்தோனேசியா, அமெரிக்கா, நெதர்லாந்து, பங்களா தேஷ், கனடா, சைப்ரஸ், பிரிட்டன், ஆஸ்திரேலியா, ஜப்பான் நாடுகளைச் சார்ந்த அந்த நாட்டின் பிரபலமானவர்கள் இடம் பெற்றிருந்தனர். உண்மையில், சர்வதேச சமூகத்திடம் மனித உரிமை மீறல்கள் சிறிலங்காவில் ஏதும் நடக்கவில்லை என்று காட்டுவதற்காக - ராஜபக்சே கடந்த 2007 ஆம் ஆண்டில் இப்படி ஒரு குழுவை அமைத்தார். கடந்த 10 ஆம் தேதி இந்த சர்வதேசக் குழுவினர், தங்களது நடவடிக்கையை நிறுத்தி, குழுவையே கலைத்து விட்டதாக அறிவித்து விட்டனர். “ராஜபக்சே அரசு - இந்தக் குழுவின் செயல்பாட்டுக்கு எந்த வகையிலும் உதவிடவில்லை. அரசின் செயல்பாடுகள் வெளிப்படையாகவும் இல்லை. இது அரசியல் உறுதியற்ற அரசு. எனவே, குழுவை கலைத்துவிட்டு நாடு திரும்புகிறோம்” என்று அறிவித்துவிட்டனர். விடுதலைப் புலிகளோடு - கடுமையான யுத்தத்தை மேற்கொண்டுள்ள நிலையில், பகவதி குழுவின் இந்த அறிவிப்பு, ராஜபக்சே அரசுக்கு பலத்த அடியைத் தந்துள்ளதாக ராஜபக்சே அரசுக்கு ஆதரவாக எழுதி வரும் முரளிதர்ரெட்டியே ‘பிரண்ட்லைன்’ ஏட்டில் எழுதியுள்ளார்.

தமிழின அழிப்புப் போரைத் தொடரும் நோக்கில் மேலை நாடுகளுக்கு எதிராகச் சிங்கள அரசு மேற்கொள்ளும் இந்த செயல்களால் - மேலும் நெருக்கடிகளை சந்திக்கவே போகிறது.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 24th April 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.